குடும்பத்துடன் களிக்க...

கல்கி

KALKI 11.9.2005
ரூ.7.00
96 பக்கங்கள்



தமிழக...



..அரசியல்...

...நிலவரம்!



விஜயகாந்த் பேட்டி!

"நான் அடிமையில்லை!"
-சந்தியா


பட்டிழைகளால் ஓர் அதிசயம்...
மணமகள் அழகின் இரகசியம்!
விவாஹா
பட்டு
தி சென்னை சில்க்ஸ்
தமிழகத்தின் மாபெரும் ஜவுளி சாம்ராஜ்யம்
23, உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை - 17. ✆: 24310888
558-560, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் - 1. ✆: 2391555
74, புது மார்க்கெட் வீதி, திருப்பூர் - 4. ✆: 2242888, 5338888
85-A, R.K.V. ரோடு, ஈரோடு - 1. ✆: 2213270
10, W.B. ரோடு, திருச்சி-2. ✆:2706888
Shop online at www.thechennaisilks.com
விவாஹா கல்யாணப் பட்டுகள். தி சென்னை சில்க்ஸின் முத்திரைப் படைப்பு.
கலையும் நயமும் பின்னிப் பிணைந்த அற்புதச் சிறப்பு.
விவாஹா-மங்கல மங்கையர்க்கு எங்கள் அர்ப்பணிப்பு.

பித்ருக்களுக்கு சிராத்தம் ஏன் அவசியம் செய்ய வேண்டும்?



சிராத்தம் போன்ற சடங்குகள் உண்மையில் ஜீவனுக்காகவே செய்யப்படுகின்றன. ஜீவனுடைய அதிர்வுகள் அதைப் பிராண லோகங்களுடன் அல்லது பூலோகத்துடன் தளைப்படுத்துகின்றன. அந்த அதிர்வுகளை நீக்குவதற்கு இந்த சடங்குகள் ஜீவனுக்கு உதவுகின்றன. இதனால் ஜீவன் சைத்திய சாந்தத்தில் ஓய்வெடுக்க விரைவாகச் செல்வது இயலும்.

– ஆதாரம் : வைகறை 1991-92



தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

இப்போது அண்ணா நகரிலும்

நெ.24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை - 20 போன் : 24915662, 24914213

1/1. G பிளாக், 8வது குறுக்குத் தெரு, 7வது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை. போன் : 52634433

இத்துடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும்.

திருமண வைபவங்களுக்கு:

சீர் முறுக்கு, சீர் அதிரசம், திரட்டுப் பால், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய், அப்பம் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.



உள்ளத்தில் உயர்ந்து...!

✉ ஏவி.எம்.சரவணனின் 'அந்த நாள் ஞாபகம்' தொடர் சுவையாக இருந்தது. கட்டுரை முடிவில் 'தரமான விருந்துக்குக் காத்திருங்க!' என்று சிம்பாலிக்காக முடித்துள்ளார். நடனத்தின் படங்கள் அருமை.
சென்னை-26, தி. சௌந்தர்

✉ தம் நிறுவனத்தின் சாதனைகளை மட்டும் பட்டியலிடாமல், தாம் செய்த சில தவறு களையும் வெளிப்படையாகக் கூறியதன் மூலம், தன் உள்ளமும் வெள்ளை என்று நிரூபித்து விட்டார்.
கோவை, ராமு.அர்விந்த்

✉ திரைக்குப் பின்னால் நடந்த முயற்சிகளை, சுவாரஸ்யமாக, உள்ளது உள்ளபடி சொன்ன ஏவி.எம்.சரவணன், உள்ளத்தில் உயர்ந்து நிற்கிறார்.
சென்னை-117, ஆர்.நாகராஜன்

✉ ராணிமைந்தனின் இத்தொகுப்பு, சினிமா

✉ சூர்யா சுரேஷின் 'சத்திய ஜீவிதம்' அன்புக்கும், பாசத்துக் கும் மதமோ ஜாதியோ தடை யில்லை என்பதைத் தெளிவாக உணர்த்தியது.
சென்னை, ஜே.துரைராஜ்

✉ 'பொளேர்' சிறுகதையில் ஒரு தியாகியை உயர்ந்த இடத்தில் வைக்கும் எண்ணத்தில், தமிழ்

இதுவும் நல்லாத்தான்

வாரம் ஒரு வாசகர்

✉ தரம்கெட்ட செய்திகளைச் சொல்லும் படங்களில் பணி யாற்ற ஒப்புக் கொள்ளும் அனை வரும், எஸ்.ஜே.சூர்யாவைப்போல் வக்கிரமான மனம் படைத்தவர் களே. அதுவும் அந்த சிறு பைய னாக நடித்தவனின் மனவளம் பற்றி யாராவது கவலைப்பட்டார் களா?
சென்னை-88, ஆர்.மீனா



ஆசிரியரைத் தாழ்த்தி விட்டார் கதாசிரியர் இருஷ்ணா!
சென்னை-63, எஸ்.சுவாமிநாதன்

✉ 'விசில்' சிறுகதை. நெஞ்சை விட்டு இன்னும் நீங்கவில்லை.
சென்னை - 93, கெ.அஜிகுமார்

✉ சென்சார் போர்டு பெண் உறுப்பினர் வானதி ஸ்ரீனிவாசன், 'நியூ' படத்தை ஆபாசத்திற்காகவே மக்கள் நிராகரித்து விடுவார்கள் என்று கூறியது தான் செம ஜோக்! படம் தறிகெட்டு ஓடி, சிடிக் களில் வீட்டுக்குள்ளேயே நுழைந்த பிறகுதானா இத்தனை அமர்க்களம்!
ஈரோடு-1, ரேவதிப்ரியன்

✉ சினி டான்ஸர்களின் குமுறல்களை வெளிச் சத்துக்குக் கொண்டு வந்திருக்கும் 'கல்கி'யின் பணி பாராட்டுக்குரியது!
மதுரை, என்.பாலகிருஷ்ணன்

உள்ளவரை பேசப்படும்.
வியாசர் காலனி,
சிம்மவாஹினி



✉ 'திருப்பதி' படத் தயாரிப்போடு தமது நினைவுகளை நிறைவு செய்தது திருப்தி அளிக்கிறது.
லால்குடி, எம்.ராஜேந்திரன்

✉ பாரம்பரியமிக்க ஏவி.எம்மின் வழித்தோன்றல்கள் அந்நிறுவனத்தின் நற்பெயரைக் கட்டிக் காப்பார்கள் என்பதற்கு, ஏவி.எம். சரவணன் ஒரு நல்ல உதாரணமாகத் திகழ்கிறார்.
தேனி, ச.புவனேந்திரன்

✉ 'அந்த நாள் ஞாபகம்' தொடரை திருச்சூரிலுள்ள மலையாள நண்பர்களுக்கு ஒவ்வொரு வியாழக்கிழமையும் படித்துக் கூறி வந்தேன். மிகவும் லயித்துக் கேட்டார்கள். தொடர் முடிவடைந்ததில் அவர்கள் மிகவும் வருந்தி விட்டனர்.
கேரளா, இரா.கல்யாண சுந்தரம்

இருக்கு!

✉ தேர்தலில் 'தோல்வி' கண்டபோது 'வெற்றி வாய்ப்பை' இழந்து விட்டோம்' என்று சொன்னார் கலைஞர். வார்த்தை ஜாலத்தை ரசித்தோம். வாசன் இப்போது 'கோஷ்டி இல்லை; கருத்து வேறுபாடு தான்' என்கிறார். இதுவும் நல்லாத்தான் இருக்கு.
ஈரோடு-9, சி.நாச்சிமுத்து

✉ ஜெயந்தி சிவக்குமார் எழுதிய 'காதலைக் கொடு' கவிதை சிந்திக்க வைத்தது.
திருநெல்வேலி-11, எஸ்.ராஜேஸ்வரி

✉ அட... யாருங்க இந்த முகில்? வில்லங்கப் பேர்வழியா இருக்காரே...! 'முகமற்ற டிராகுலாவின் குரலற்ற குரலில் கீழ்பாக்க எழுத்தாளர்களை கிழிகிழின்னு கிழிச்சுட்டாரே...!
தஞ்சாவூர், தா.மு.இக்பால்

வட்டமேஜை

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623
2225 1324
தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.390/-
ஆறு மாதம் : ரூ.195/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 63.50 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2060/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

“தங்கர்பச்சானை நான்தான் காப்பாற்றினேன்!”

–விஜயகாந்த் அதிரடி

பரபரப்பாக இருக்கிறார் விஜயகாந்த். இன்னும் ஒரு வாரத்தில் புதுக்கட்சி ஆரம்பிக்கப் போகும் உற்சாகம், முகத்தில் கரைபுரண்டு ஓடுகிறது. ‘சுதேசி’ படப்பிடிப்பில் சுழன்று சுழன்று சண்டை போட்டவரை பிரேக்கின்போது மடக்கிப் பேசினோம்...

சமீபத்தில் ஒரு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட சர்வேயில் அரசியல்வாதிகளுக்குப் பதினான்காவது இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள் மக்கள். வெறுப்போடு இருக்கும் அவர்கள் மனதில், ஒரு அரசியல்வாதியாக உங்களால் நுழைந்து சாதிக்க முடியுமென்று நினைக்கிறீர்களா?

“பதினாலாவது இடத்துக்கு அரசியல் போனதுக்கும் மக்கள் மனதில் வெறுப்பு வளர்ந்ததுக்கும் நானா காரணம்? இதுக்கு முன்னாடி இருந்த அரசியல்வாதிங்கதானே பொறுப்பு! நான் வரும்போது நிலைமை மாறும். அரசியல் 14வது இடத்துக்குப் போயிடுச்சுங்கறதுக்காக நான் வரக்கூடாதுன்னு இல்ல. அவங்கள கேளுங்க... இந்த இடத்துக்குத் தள்ளிவிட்ட அரசியல்வாதிங்கள கேளுங்க... ஏன் இப்படிப் பண்ணிட்டீங்கன்னு. நான் வந்து சிர் பண்ணணும்னு நினைக்கறேன். அந்த இடத்தை மாத்த முயற்சிப்பேன்.”

பல வருடங்களாக ஒரு கட்சியின் தொண்டனாக உள்ள உங்கள் ரசிகன், திடீரென்று நீங்கள் கட்சி ஆரம்பித்துவிட்டீர்கள் என்பதற்காக, பழைய கட்சியின் விசுவாசத்தை மறந்து உங்களுடன் இணைந்து விடுவான் என்று எப்படி நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

“அந்த ரசிகன் தொண்டனாக இருந்தப்போ கட்சியைவிட விஜயகாந்த் மேல தான் அதிக விசுவாசமா இருந்தான், அதை முதல்ல மறந்துடாதீங்க. அதனால ‘நான் கட்சி ஆரம்பிக்கிறேன், வா’ன்னா வந்துருவான். அதுல எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கு. ஏற்கெனவே எல்லா ரசிகர்கள்கிட்டேயும் இதையெல்லாம் நான் கேட்டுட்டேன். ‘உங்ககூட வந்துருவோம்’னு அவங்க ஒப்புதல் தந்த பிறகுதான் இதைச் சொல்றேன். வரலைன்னு சொல்றவங்க, அப்படியே இருக்கட்டும்.”

உங்களின் ‘கஜேந்திரா’ படத்துக்கு பா.ம.கவால்தான் பிரச்னை வந்தது. அதே போல் கள்ளக்குறிச்சியில் ஒரு திருமண விழாவில் நீங்கள் பா.ம.கவின் அரசியலை விமர்சித்ததுதான் தங்களின் அரசியல் பிரவேசத்திற்குக் காரணம் என்றும் சொல்லப்படுகிறது... ஆக உங்களின் அரசியல் எதிரி பா.ம.கதான் என்றும் பேசப்படுகிறதே...?



• திருமாவளவன்



• தங்கர்பச்சான்

“நான் அரசியலுக்கு வந்தால் யாரையும் தாக்கமாட்டேன். என் பாணி புதுமையானது. எந்த அரசியல் கட்சியை எதிர்த்தும் நான் புறப்படல. மக்களுக்கு நன்மை செய்யணும்னுதான் வந்திருக்கேன். பெருமைக்காக சொல்லலை, நான் சாதாரண மனுஷனாவே நிறைய உதவிகளை இன்னைக்கும் செஞ்சுட்டு வர்றேன். அதை சிலர் விமர்சனம் பண்ணாங்க. ‘தனி மனிதனா இருந்தே இவ்ளோ செய்றீங்களே... ஏன் அரசியலுக்கு வந்து செய்யக்கூடாது’ன்னு பலரும் கேட்டாங்க. யோசிச்சேன்... வந்துட்டேன். சினிமாவைவிட பல மடங்கு வேலைப் பளு

அதிகம் அரசியல்ல. என் குடும்பத்துக்கு ஒதுக்க நேரம் இருக்காது. ஆனா எல்லாத்தையும் சமாளிக்கலாம்னு மக்களுக்காக முழு மூச்சா இறங்கிட்டேன்."

சிவாஜி, பாக்யராஜ், டி.ராஜேந்தர் போன்றோர் நடிகர்களாக இருந்து அரசியலுக்கு வந்து மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள். இவர்களின் தோல்வியிலிருந்து என்ன பாடம் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்?

"நீங்க ஏன் நடிகர்கள் தோற்றுப் போனதையே பார்க்கறீங்க? எத்தனை அரசியல்வாதிங்க தோத்துப் போயிருக்காங்க... அவங்களைப் பாருங்க. வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு அழகு. என் சினிமா அனுபவத்தில் நான் வெற்றி, தோல்வி ரெண்டையும் பார்த்திருக்கேன். இதுல என்ன பாடம் கத்துக்க வேண்டியிருக்கு! ஜெயிக்கறதுக்கு என்ன பண்ணணுமோ அதைப் பண்ணணும், அதுதான் பாடம். ஏன் மத்தவங்களோட வெற்றி, தோல்வியைப் பார்க்கணும். என்னை வச்சுப் பேசுங்க. என்னோட பல படங்கள் தோல்வியடைஞ்சிருக்கு, வெற்றியுமடைஞ்சிருக்கு. இதை ஆரம்பத்துல என்னால ஏத்துக்க முடியல. அதுக்கப்புறம் பக்குவமடைஞ்சி ஏத்துக்கிட்டேன். ஆக ஏற்றத் தாழ்வுகள் சகஜம். எது வந்தாலும் போராடிப் பார்க்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்!"




உங்களை அரசியலுக்கு வரச் சொல்லித் தூண்டியது உங்களின் மனைவிதான் என்றும், அவர்தான் பின்னணியிலிருந்து உங்களை இயக்குகிறாரென்றும் கூறப்படுகிறதே...?

"யார் என்ன வேணா சொல்லட்டும், அது பத்தி எனக்குக் கவலையில்ல. 'ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண் இருக்கிறாள்'னு சொல்றீங்க... 'பெண்கள் நாட்டின் கண்கள்'னு சொல்றீங்க... ஏன்? பெண்மைக்குத் தர்ற மரியாதையினால்தானே! அதேதான் நான் செய்யறேன். என் மனைவிக்கு நான் மரியாதை தர்றேன். என் சுக துக்கங்கள், கஷ்ட நஷ்டங்கள் எல்லாத்தையும் அவங்ககூடதானே பங்கு போட்டுக்கறேன்... என் விஷயத்துல அவங்க தலையிடுறதுல என்ன தப்பிருக்கு! என் குடும்பம் சந்தோஷமா இருக்க என் மனைவி

தான் காரணம். விட்டுக் கொடுத்து வாழறாங்க. என்னை நல்வழிப்படுத்து றாங்க. நான் போற இடத்திலெல்லாம் அவங்க வாழ்த்தப்படறாங்க. பெண்களுக்கு முப்பத்து மூணு சதவீத இட ஒதுக்கீடு கேக்கறீங்க... சம உரிமை கொடுத்தாலும் தப்புன்றீங்க.. என்ன உங்க நியாயமோ... ஒண்ணுமே புரியல..."

'மாற்றத்தைத் தரும் அரசியல்வாதியாக இருப்பேன்' என்று கூறும் நீங்கள், உங்கள் கூட்டங்களில் கார்களின் அணிவகுப்பை, படாடோபத்தை இன்னும் குறைக்காதது ஏன்?



"தனிப்பட்ட அரசியல் தலைவர்கள் வேறு, சினிமாவிலிருந்து வரும் தலைவர்கள் வேறு. கூட்டம் இரண்டுக்கும் வித்தியாசப்படும். எம்.ஜி.ஆருக்கு வந்த கூட்டத்தையும் மத்த அரசியல் தலைவர்களுக்கு வந்த கூட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே இந்த உண்மை புரியும். நாளடைவுல இதை நான் சரி பண்ணிடுவேன். இன்னைக்கும் என் ரசிகர்கள்கிட்ட சொல்லிக்கிட்டே தான் இருக்கேன்... எந்த ஆடம்பரமும் வேண்டாம்னு. பலர் கேக்கறாங்க, சிலர் கேக்க மாட்றாங்க. ஆனா எதிர்காலத்துல இது மாதிரி நிச்சயம் நடக்காது!"

தங்கர்பச்சான் விவகாரத்தில் உங்களைத் தாக்கிப் பேட்டி கொடுத்திருக்கிறாரே திருமாவளவன்?

"நான் ஸ்ட்ரைக்கை அறிவிச்சது திங்கட்கிழமைதான். ஏன் நடுவுல ஞாயிறு விட்டு திங்கள் பண்றேன்? அந்த ஒரு நாள்ல எல்லாம் காம்ப்ரமைஸ் ஆயிடும்னுதான். அதுவரைக்கும் யாரும் வரல. பெப்சில கூட நான் கடிதம் கொடுத்திருக்கேன். அவங்களும் கண்டுக்கல... தயாரிப்பாளர் கவுன்சிலும் அதை கண்டுக்கல... அப்ப நடிகர்களுக்கு என்னதான் முடிவு? ஸ்ட்ரைக்கைத் தவிர வேற வழியில்ல. பாதிக்கப்பட்டது நடிகைகங்க. 'அவங்க உங்களையா சொன்னாங்க? எங்களைத்தானே பச்சையா கேட்டாங்க'ன்னு கொதிக்கறாங்க. அவங்க போர்க்கொடி தூக்கும்போது தலைமையான நான் அதுக்கு பதில் சொல்லியே ஆகணும் இல்லையா?

நான் நடிகை தொப்புள்ல பம்பரம் விடறது சினிமா. அது வேறு, இது வேறு. தன்னோட இயக்கத்துல இருக்குற பெண்களைப் பத்தி தப்பா பேசினா இவரு போவாரா, மாட்டாரா? இதுல தமிழன், மத்தவன்னு என்ன இருக்கு? தப்பு தப்புதானே! அந்தக் காலத்துல குளிக்கறதுக்கு ஆத்துக்குப் போனாங்க, ஏரிக்குப் போனாங்க, குளத்துக்குப் போனாங்க. இன்னைக்கு எங்கேயுமே போக முடியலையே பெண்களால... குளிக்கற பாத்ரூமுக்குள்ள கேமரா வச்சு படம் பிடிச்சுப் போடுறானே... அந்தளவு பாதுகாப்பு இல்லையே... அதைத் தட்டிக் கேட்க தைரியம் இல்லையே... அப்புறம் எதுக்கு இதெல்லாம் பேசணும்? அதனால அவங்க வங்களுக்குத் தான் அந்த வலி தெரியும். நாம ஒரு பொறுப்புல இருக்கும்போது, தலைமைல இருக்கும்போது உறுப்பினர்கள் என்ன சொல்றாங்களோ, அதைக் கேட்டுத்தான் ஆகணும். அன்னைக்கு நான் நிறைய மறைச்சிட்டேன். அந்தப் பத்திரிகைக்கு தங்கர்பச்சான் கொடுத்த பேட்டில இன்னும் நிறைய பேரை தாக்கியிருக்காரு. டேப்ல இருக்கு. அதையும் போட்டிருந்தா பிரச்னை இன்னும் பெரிசாயிருக்கும். நியாயமா நான்தான் அவரைக் காப்பாத்தியிருக்கேன். சரி போகட்டும்னு எல்லாரும் பெருந்தன்மையாத்தான் விட்டுக் கொடுத்தோம். இதுதான் உண்மை. இதுக்கு ஆளாளுக்கு பேசிக்கிட்டிருந்தா அதை பத்தி நான் பயப்படமாட்டேன். இவங்க அது... இதுன்னு

"எனக்கு இந்த சங்கத்து மேல பெரிய அபிப்ராயம் கிடையாது."

யாரு என்ன பண்ணாலும் பயந்துபோற ஆளு இல்ல இந்த விஜயகாந்த். ஒரு தலைமைன்னா, அந்த தலைமை கரெக்டா இருக்கணும். நானே தப்பு பண்ணாகூட பகிரங்கமா மன்னிப்பு கேட்பேன். கால்ல விழக்கூட நான் தயங்க மாட்டேன். நடிகர் சங்கத் தலைவரா பதவியேத்தப்ப அதைத்தான் நான் சொல்லியிருக்கேன்."

காஜாமைதீன் விவகாரம், மாதவன் விவகாரம், தங்கர்பச்சான் பிரச்னை என்று சமீபகாலமாக ஏன் தயாரிப்பாளர் சங்கத்துக்கும் நடிகர் சங்கத்துக்கும் இத்தனை மோதல்கள்?

"பெருசா ஒண்ணும் காரணம் இல்ல. என்னைக் கேட்டா சங்கங்களே தேவையில்லன்னு நினைக்கிறேன். தலைவருன்னு இருக்கறதால, அந்தந்த உறுப்பினர் பிரச்னை பத்தி சொல்லி, அதுல ஈடுபடும்போது கடைசியில சங்கத் தலைவருக்குக் கெட்ட பேராயிடுது. எனக்கு இந்த சங்கத்து மேல பெரிய அபிப்ராயம் ஒண்ணும் கிடையாது. இது தேல்வயில்லாத பிரச்னை. மனக் கசப்பைத்தான் உண்டாக்கும். அதனால எனக்கு அதுல விருப்பமும் கிடையாது."

தயாரிப்பாளருக்கும் நடிகர்களுக்குமான உறவு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

"தயாரிப்பாளருங்க முதலாளிங்க. அவங்க மேலதான் கை நீட்டறாங்க. நாங்க கீழதான் கைநீட்டறோம். எந்த ஒரு நடிகரும் தயாரிப்பாளர் வீடு தேடிப் போய் படம் கொடுங்கன்னு சொல்றதில்ல. ஒரு படம் ஓடினா இவங்கதான் விழுந்தடிச்சுட்டு போய் புக் பண்றாங்க. காஜாமைதீனே இன்னைக்கு அஜீத்தை குற்றம் சொல்றாருன்னா, அஜீத்கிட்ட கேட்டாத்தான் தெரியும், அவர் போய் எப்படி அட்வான்ஸை கொடுத்தாருன்னு. இதையெல்லாம் பேசிக்கிட்டே போனா வில்லங்கம்தான் வளரும். நம்மளுக்குள்ள ஒண்ணுமே கிடையாது... ஈகோ பார்த்தாங்கன்னா ஒண்ணுமே நடக்காது. தப்பு எங்க பக்கமும் இருக்கும், தயாரிப்பாளர் பக்கமும் இருக்கும்... எல்லார் பக்கமும் இருக்கும். கூடப் பிறந்த அண்ணன் தம்பிகளிடையில சண்டை வர்றதில்லையா? அதை மேலெழுந்தவாரியா பேசித் தீர்த்தாங்கன்னா ரொம்ப ஈஸி. இப்போதைக்கு எல்லாப் பிரச்னையும் முடிஞ்சிருச்சு, அவ்வளவுதான்!"

- மு. மாறன்

படங்கள் : ஸ்ரீஹரி

● ஆர்.கே.ராமு, குடியாத்தம்

? சமீபத்தில் அறிவிக்கப்பட்ட அர்ஜுனா விருதுப் பட்டியலில் ஒரு கிரிக்கெட் வீரரின் பெயர் கூட இடம் பெறாததில் ஆச்சர்யம் உண்டா தலைவா...?

! இடம் பெற்றிருந்தால்தான் ஆச்சர்யம். வர வர, இந்திய கிரிக்கெட் 'உத்தரன் விருது' பெறத்தான் லாய்க்கு என்றாகி வருகிறது.

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்

? இயக்குனர் தங்கர் பச்சான் நடிகைகளைத் தவறாகப் பேசியது குறித்து...?

! தாம் அப்படிப் பேசவில்லை என்று அவர் கூற, பத்திரிகை நிருபர் சாட்சியம் இருப்பதாகச் சொல்ல, தங்கர் பச்சான் மன்னிப்புக்கோரி நழுவி விட்டார். ஆனால் தங்கர்பச்சான் போல அவ்வளவு அப்பட்டமாக இல்லாமல், இலைமறை காயாக நடிகைகளை அவமானப்படுத்தும் பத்திரிகையாளர்கள் கொக்கரித்துக் கொண்டுதானே இருக்கிறார்கள்!

● க.சபரீஷ், சென்னை - 15

? வேலூர் தி.மு.க. மாநாட்டில் பறவைக் காவடி எடுத்த தொண்டர் மயங்கி விழுந்தார்... உங்கள் கருத்து?

! பகுத்தறிவுப் பாசறையில் பரிதாப நிகழ்வு!

● ஆர்.ராஜதுரை, சீர்காழி

? "ஹிட்லருக்கு ஏற்பட்ட நிலையைப் போல தேர்தலுக்குப் பின் தோல்வியால் கருணாநிதி குடும்பத்தினர் தற்கொலை செய்து கொள்ளும் நிலை வரும்..." என்று அனிதா ராதாகிருஷ்ணன் ஆவேசமாகப் பேசியிருக்கிறாரே...?

! அடேயப்பா! எப்பேர்ப்பட்ட நல்ல மனசு! இதுக்காக மட்டுமே அவர் பதவியைப் பறித்து அரசியலிலிருந்தே விலக்கி வைக்கலாம். ஆனால், அ.இ.மு.க. தலைமை, நேர் விரோதமாக அல்லவா செயல்படும்!

● ஏ.எஸ். யோகானந்தம், கலிங்கியம்

? போலியோ தடுப்பு சொட்டு மருந்து முகாமைத் துவக்கி வைக்க, ஐஸ்வர்யா ராயை பாக். அரசு அழைக்க முடிவு செய்துள்ளதாமே... இது சரியா?

! இங்கே ஆச்சியும் சூப்பர் ஸ்டாரும் விளம்பரப்படுத்தித்தானே இந்த இயக்கம் வெற்றியடைந்தது. அங்கே ஐஸ் தயவில் அதைவிடப் பெரிய வெற்றி கிட்டட்டும்.

● சித்ரா கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்

? 'மத்திய அரசு மந்தமாகச் செயல்படுகிறது' என்று குறை கூறுகிறாரே கருணாநிதி?

! தமிழ்நாட்டிலும் தி.மு.க. தலைமையில் ஒரு கூட்டணி ஆட்சி அமைந்தால்தான் கலைஞருக்குப் புரியும். ஒரு கூட்டணி ஆட்சி, தனி ஒரு கட்சியின் ஆட்சி போல அத்தனை சுறுசுறுப்பாக இயங்க முடியாதென்று.

● ஆண்டனி தமிழரசன், மும்பை - 17 ❐

? இந்தியாவின் நம்பர் ஒன் கோடீசுவரர் அஸிம் பிரேம்ஜி வீட்டுத் திருமணம் எளிய முறையில் நடந்துள்ளது எதைக் காட்டுகிறது?

! பெரிய தொழிலதிபர்கள் தங்களது செல்வத்தைப் பொதுப்பணமாகக் கருதி இயங்க வேண்டும் என்பதை.

• பாய்ந்த விலங்குகள்!



கார்த்திக்கின் 'சரணாலயம்' பற்றி...?

● கே.ஆர்.ராமசுப்ரமணி, திருவாரூர்

? கார்த்திக்கின் 'சரணாலயம்' பற்றி...?

! ஹேண்ட்ஸ் அப்! 'வனவிலங்குகள்' அவர் மீது பாய்ந்துவிட்டன!

● லெ.நா.சிவகுமார், சென்னை-33

? அரசியல்வாதிகள் பங்கு பெறும் விழாக்களில் பள்ளிக் குழந்தைகளின் வரவேற்பு நிகழ்ச்சிகளைத் தடை செய்துள்ள ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக்கின் செயல் குறித்து...?

! ரொம்ப ரொம்ப நல்ல காரியம். வெயிலில் வாடி, பசியில் வதங்கி, கால் கடுக்க நின்று, எதற்கு இப்படி வதைக்கப் படுகிறோம் என்று புரியாமலே தவிக்கும் குழந்தைகள் சார்பில் ஆயிரமாயிரம் நன்றி!

நீங்கள் கேட்டவை

-தராசு

● எஸ். சரவணன்,
வேலூர்

? ஒரு திரைப்படத்துக்குப் பெயர் வைக்க ஆயிரம் டைட்டில் இருக்கறப்போ, மறைந்த நடிகர் சிவாஜியின் பெயரை வைப்பது ஏன்...?

! அது சத்திரபதியா? நடிகர் திலகமா? சூப்பர் ஸ்டாரா... அல்லது புத்தம் புதுசாக ஒருத்தரைக் குறிக்குமா என்று பொறுத்துத் தான் பார்ப்போமே!

● எம்.விஜயலக்ஷ்மி,
சென்னை - 88

? பெட்ரோலிய நிறுவனங்களின் நிலை கண்டு பிரதமரின் இதயத்தில் ரத்தம் வடிகிறதாமே...?

! பெட்ரோலிய நிறுவனங்கள் உண்மையிலேயே பரிதாபகரமான நிலைமையில் உள்ளனவா என்பது குறித்து கருத்து மாறுபாடு உண்டு. ஆனால் பெட்ரோலியப் பொருள்களைப் பயன்படுத்தும் இந்தியன் ஒவ்வொருவனும், இன்று மிகவும் பரிதாப நிலைமையில் இருக்கிறான் என்பதில் எவ்வித மாறுபாடும் கிடையாது. அவர்களுக்காக பிரதமர் கொஞ்சம் சாதா கண்ணீராவது வடிக்கலாமே!

● எஸ். முரளி,
குறிஞ்சிப்பாடி

? 'சம்ஸ்கிருதம் அழிந்தது போல இன்னும் ஐம்பது ஆண்டுகளில் தமிழ் மொழியும் அழியும் நிலைமை



• நழுவல் மன்னிப்பு!



• வராத கண்ணீர்!

• சாமர்த்திய குழப்பம்!



• 'அரசியல்' அச்சம்!





• அழகிய இயக்கம்!



• எளிமை விளக்கம் !

நோக்கிச் செல்கிறது' என சாலமன் பாப்பையா ஆதங்கப்படுகிறாரே...?

! சம்ஸ்கிருதம் அழிந்து விடவில்லை. காவிய மொழியாக, வேதங்களின் மொழியாக நீடிக்கிறது. பாடசாலைகளிலும், பல்கலைக் கல்லூரிகளிலும் வாழ்கிறது. பாரம்பரியக் கலைகளில் மிளிர்கிறது. தமிழும் தொடர்ந்து வாழும். மக்களின் மனத்திலும் நாவிலும் தவழ்ந்து வளரும். பாப்பையா, மொழி அரசியலில் இறங்கியிருக்கிறார். தேர்தலில் சீட் கேட்க உத்தேசமோ?

● **கே.வி.ராமன்,**
சென்னை-73

? மாதா அமிர்தானந்தமயி, தம்மைக் கொல்ல முயற்சி செய்தவரை மன்னித்து விட்டாராமே?

! கொலை முயற்சி தோல்வியடைய, உயிர் தப்பிய துறவிகள் இப்படித்தான் பேசவேண்டும் என்பது ஏக காலத்திலிருந்து மரபாகி விட்டது. மாதா மன்னித்து விடலாம். ஆனால் சட்டம் மன்னிக்காது; மன்னிக்கக் கூடாது.



• ஆவேச அரசியல்

● **எம்.பாஸ்கர்,**
திண்டுக்கல் ✱

? 'ஆட்சியில் இல்லாதபோதே சேது சமுத்திரத் திட்டம், தமிழ் செம்மொழி அந்தஸ்து என நல்லது நிகழ்த்தி வருகிறோம். ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் என்னவெல்லாம் செய்வோம் என்பதை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்...' என்கிறாரே ஸ்டாலின்...?

! ஸ்டாலின் இப்படி மத்திய மாநில அரசுகளைப் போட்டுக் குழப்பி, மக்களையும் குழப்ப வேண்டிய அவசியம் இல்லை. தி.மு.க அமைச்சர்கள், மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார்கள். கூட்டணி ஆதரவாளர் என்ற முறையில் எங்கே தட்டினால் எங்கே விழும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

● **ச.சாந்தி,**
மேட்டுமகாதானபுரம்

? தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் சில எங்களுடன் பேரம் பேசுகின்றன என்கிறாரே முதல்வர்...?

! இருக்கலாம்... இப்படி நாலு தடவை சொன்னாலே மக்கள் மனத்தில் தி.மு.க. கூட்டணி மீது அவநம்பிக்கை எழும் என்கிற ராஜதந்திரமாகவும் இருக்கலாம்!

● **பி.பாலாஜி கணேஷ், சிதம்பரம்**

? கருத்துக் கணிப்புகள் ஒன்றுகூட அம்மாவுக்குச் சாதகமாக இல்லையே, ஏன்?

! 'கருத்துக் கணிப்புக்கும் தேர்தல் முடிவுகளுக்கும் (கடந்த சில ஆண்டுகளாக) சம்பந்தமே இல்லை...' என்று ஜெ. எடுத்துக் காட்ட முடியும். இது மாதிரி சலசலப்புகளுக்கு அஞ்சக் கூடியவர் அல்ல அவர்.

● **பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி**

? "தி.மு.கவின் வெற்றிக்குக் குந்தகம் வராமல் விட்டுக் கொடுப்பவர்களுக்குத்தான் என் இதயத்தில் இடமுண்டு" என்று மு. கருணாநிதி கூறியுள்ளது பற்றி...?

! என்ன... வைகோ, ராமதாஸ், வாசன் பலானவர்களுக்கெல்லாம் நல்லா கேட்குதில்லே...!

○

☐ ரூ. 100/- பரிசு பெறுபவர்:

ஆண்டனி தமிழரசன்,
அறை எண் 156,
சீரடி பாபா சாவ்ல்,
இந்திரா நகர், தாராவி
மும்பை - 400 017

✱ ரூ.50/- பரிசு பெறுபவர்:


எம். பாஸ்கர்,
ஹோட்டல் சங்கீத்,
30, ஏ.எம்.சி ரோடு,
திண்டுக்கல், 624 001



மகிழ்ச்சியின் சின்னம் மணவிழாவின் அங்கம்
ராஜ்மஹாலின் திருமணபட்டுச் சேலைகள்
முக்கனிகள் பட்டணிந்து
முத்தமிழின் சொல்லறிந்து
மூவுலகை வென்றுவர
முகமலரும் பட்டழகு
சுப முகூர்த்தம்
கலெக்ஷன்ஸ்
• காஞ்சிபுரம் • ஆரணி • தர்மாவரம் • பனாரஸ் • திருபுவனம் பட்டுச் சேலைகள்
• மில் • பேன்சி சேலைகள் • சுடிதார் மெட்டீரியல்கள் மற்றும் • சூட்டிங் சர்ட்டிங்குகள்
ராஜ்மஹால்
வெங்கலக்கடைத் தெரு, மதுரை-1.
போன்-2622647
AMC/MDU/05
தொட்டுத் தொடரும் ஒரு பட்டுப் பாரம்பரியம்.



வண்ணத்துப் பூச்சிக்குத் தெரியும்
எது தேன்மலர் என்று...
வாசகர்களுக்குத் தெரியும்
எது தீபாவளி மலர் என்று!
கல்கி
தீபாவளி மலர்
2005
விலை ரூ.90/-



ஓங்குது ஓங்குது ஒருமைப்பாடு!

இந்தியாவெங்கிலுமிருந்து தில்லிக்குத் தலைவர்கள் வந்து, தேசிய ஒருமைப்பாடு குழுக் கூட்டத்தில் பங்கேற்றனர். பதிமூன்றாண்டுகள் இடைவெளிக்குப் பிறகு கூடிய இக்கூட்டத்தில் பிரதமர் பெருமிதத்தோடு பேசியிருக்கிறார். 1961ல், நேரு பிரதமராக இருந்தபோது வரிசைப்படுத்திய மதவாதம், ஜாதிப் பிரிவினை, குறுகிய பிரதேச உணர்வு, மொழி வெறி ஆகிய நான்கு அபாயங்கள் இன்னமும் நீடிக்கின்றன. ஆனால், முன்பு அளவுக்கு நம் நாட்டை இவை அச்சுறுத்தவில்லை என்று மன்மோகன் சிங் மகிழ்ச்சியோடு பேசியிருக்கிறார்!

"நாற்பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இராத அளவுக்கு இப்போது நம்மிடையே வட்டாரத் தனித்தன்மை ஆரோக்கியமாக வளர்ந்திருக்கிறது" என்கிறார் பிரதமர்! "அதன் பயனாக அந்தந்தப் பகுதி அல்லது பிரிவினருக்குரிய கலை, கலாசாரம், வாழ்க்கை முறை ஆகியவை வலுப்பெற்றுள்ளன. இதுவே நம் நாட்டின் பலம்" என்றும் பேசியுள்ளார்! வேற்றுமையில் ஒற்றுமையே இந்தியாவின் மிகப் பெரிய சொத்து என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால், பிரதமர் குறிப்பிட்டுள்ளது போல் நமது ஒற்றுமை வளர்ந்திருக்கிறதா...? சற்றே ஆத்ம பரிசோதனை செய்து பார்ப்பது நல்லது.

நேரு காலத்துக்கு இப்போது மதவாதம் குறைந்திருக்கிறது என்று சொன்னால், உலகமே நம்மைப் பார்த்துச் சிரிக்கும். ஹிந்து - முஸ்லிம் நல்லுறவுகள் இந்தியாவில் பெரிய சவாலாகவேதான் இருந்து



கல்கி



2005 செப்டெம்பர் 11
பார்த்திப ஆவணி 26
மலர் : 64
இதழ் : 6



வந்துள்ளன. அதிலும் பாபர் மசூதி தகர்ப்புக்குப் பிறகு இப் பிரச்னை கடுமையாகிவிட்டது. கிறிஸ்துவர்களிடமும் பல காரணங்களால் அதிருப்தி நிலவுகிறது.


பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததே 'ஹிந்துக் கட்சி' என்று கூறிக் கொண்டுதான். இதற்கு மறுபுற மாக, காங்கிரஸ், சிறுபான்மையினரின் தோழனாகத் தன்னைக் காட்டிக் கொண்டு வோட்டுக் கேட்கிறது. மெய்யான மதச்சார்பின்மை என்பதே நாட்டில் இன்று இல்லை!

மத்திய அரசியலில் மட்டுமின்றி, அனேகமாக அனைத்து மாநிலங்களிலும் மத வேற்றுமை உணர்வுகள் அரசியலாக்கப்பட்டு வருகின்றன.

ஜாதியுணர்வு பற்றியோ, கேட்கவே வேண்டாம்! ஒட்டுமொத்த சமுதாய நலன் என்கிற பார்வையை அனேகமாக எல்லாக் கட்சிகளுமே தொலைத்துவிட்டன. ஜாதிக் கட்சிகள், அவற்றுக் குள்ளேயே உபபிரிவுக் கட்சிகள் - இவை இன்று அரசியலில் பலமாகப் புகுந்து விளையாடு கின்றன. ஒரு வேட்பாளர் தேர்வுபெற பிற தகுதிகளைக் காட்டிலும், ஜாதிக்கு அதிக முக்கியத் துவம் தரப்படுகிறது.

தேசியக் கட்சிகளானாலும், மாநிலக் கட்சிகளானாலும் இந்த ஜாதிக் கட்சிகளுடன் கரம் கோத்துக் கொள்கின்றன. ஜாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு, அதற்கான விகிதாசாரம், இதர பல சலுகைகள் - எல்லாமே வோட்டுப் பிடிக்கும் குறுக்கு வழிகளாகக் கூச்ச நாச்சமின்றிப் பயன்படுத்தப்படுகின்றன. மதம் அல்லது ஜாதி அடிப்படையில் அரசியல் பண்ணுவதால், மக்களிடையே பிரிவினை வலுப்பட்டு நிரந்தரமடையும் என்பதைப் பற்றி ஒரு தலைவராவது மருந்துக்கும் கவலைப்படுவதில்லை! தமிழ்நாட்டில் தேவர்கள் - வன்னியர்கள் - தலித்துகள், உ.பி-பீஹாரில் யாதவர்கள் - தலித்துகள். இப்படியே மாநிலத்துக்கொரு ஜாதிப் போர், அரசியலால் நிரந்தரப்படுத்தப்பட்டு வருகிறது.

வட்டார உணர்வும், மொழி வெறியும் கூட காட்டுத் தீ போல் பரவி, எதிர்ப்படும் அனைத் தையும் அழித்துக் கொண்டுதான் இருக்கின்றன. மஹாராஷ்டிராவில் அயல் மாநிலத்தவரை வரவேற்கக் கூடாது என்று ஒரு சிவசேனை வெறிபிடித்தலைகிறது. தமிழனை எதிர்க்கவும்,



தாக்கவும் கர்னாடகாவில் ஒரு கூட்டம் தயார். தமிழகத்தின் காவிரி ஆயக்கட்டு உரிமைகளை உச்சநீதி மன்றத்தால்கூட வலியுறுத்திப் பெற்றுத்தர முடியவில்லை. அந்த அளவுக்கு அங்கே குறுகிய பிரதேசக் கண்ணோட்டம்!

இதெல்லாம் போதாதென்று, மொழி வெறியும் கண்மூடித்தனமாகப் பரப்பப்படுகிறது. சினிமாவுக்கு ஆங்கிலத்தில் பெயர் வைத்தலை ஆட்சேபிப்பதும், மைல் கற்களில் ஹிந்தியை தார் பூசி அழிப்பதுமாக ஒரு பக்கம், 'தமிழர் விடுதலை' இயக்கங்கள் என்று சொல்லிக் கொண்டு, மொழி அடிப்படையில் மக்களை உணர்வு ரீதியாக வன்முறைக்குத் தூண்டும் அமைப்புகள் இன்னொரு பக்கம். போதாக்குறைக்கு, தமிழ் பேசினால் தடியெடுத்துத் தாக்குகிற கர்னாடகத்து 'வீர'ச் சகோதரர்கள். ஆந்திராவுக்குள்ளேயே தனி மாநிலம் வேண்டும் என்று போராடும் தெலுங்கானா அரசியல்வாதிகள். ஹிந்தித் திணிப்பை எதிர்க்க போராட்டங்கள். சமஸ்கிருதம் திணிக்கப்படாதபோதே எதிர்ப்பு!

ஜாதி, மதம், மொழி, வாழ்விடம் என்ற நான்கும் மக்களின் உணர்வு சார்ந்த விஷயங்கள் என்பதால், இந்த நான்கையும்தான் நமது அரசியல்வாதிகள் வாக்கு வங்கிகளாக்கி மக்களைப் பிரித்துப் போட்டு வதைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நான்கு விஷயங்களோடு ஐந்தாவதாக ஆண்-பெண் பேதமும் சேரப் போகிறது - பெண்களுக்கு இட ஒதுக்கீடு என்கிற போர்வையில்!

இந்த ஒதுக்கீடு மட்டும் நடைமுறைக்கு வருமானால், பால் பேதங்களும் அதன் அடிப்படையிலான அரசியல் ஊழல்களும் வலுக்கும். பெண்களை வெறும் வோட்டு வங்கியாகப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கு பெருகும்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்துப் பிரித்தாளும் சூழ்ச்சியைத்தான் இன்று நமது அரசியல்வாதிகள் சற்றே உருமாற்றிக் கடைப்பிடித்து வருகின்றனர்.

இதைச் சுட்டிக் காட்டித் திருத்திக் கொள்ளும் நெஞ்சுரத்தை, தேசிய ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் எந்தத் தலைவரும் வெளிப்படுத்தவில்லை. இந்நிலையில் நாம் நெஞ்சு நிமிர்த்தி மகிழ என்ன இருக்கிறது! பிரதமரைப் பார்த்துப் பரிதாபப்படத்தான் தோன்றுகிறது! ○

'டிஷ்யூம்' படப்பிடிப்பில் ஷாட் வைக்க இன்னும் நேரமிருந்ததால் சுகமாக காற்று வாங்கிக் கொண்டிருந்தார் சந்தியா... 'காதல்' சந்தியா. ''அச்சச்சோ, இப்படி வெட்டியா உட்கார்ந்திருந்தா 'அன்னியன்' போட்டுத் தள்ளிடுவாரே. ஜாக்கிரதையாயிருக்கணுமாக்கும்' என்று அவரை உஷார்ப்படுத்தி, பேட்டிக்கு வரவழைத்து பிஸியாக்கினோம்.

'வல்லவ'னும் ஜெயிக்குமா?

யா...யா... இதுல எனக்கு ப்ரமோஷன் கொடுத்திருக்காங்க. காலேஜ் பொண்ணா நடிக்கிறேன். சிம்புவுக்கு ஜோடியா இல்லை, ஃப்ரெண்டா நடிக்கிறேன். நட்பை மையப்படுத்தியுள்ள படம் இது.

'காதல்' பாதிப்பிலிருந்து விலகியாச்சா?

என் உலகத்தையே மாற்றிய படம். வீட்டுக்கு வெளியில சுதந்திரமா போக முடியலை. நேரடியா வந்து கே.பி. சார் பாராட்டியது ஆயுசுக்கும் மறக்காது.

நயன்தாரா... ரீமாசென்?

'வல்லவன்'னின் மற்ற இரு கதாநாயகிகள். நானும் நயன்தாராவும் மலையாளத்துலயே பேசிக்குவோம். ரீமாசென் தமிழ்ல - தத்திகினத்தோம் போடும். அழகான பட்டாம்பூச்சி.

படிப்பு...?

இனி கஷ்டம்தான். கல்லூரியில படிக்க முடியாததை நினைச்சா ஃபீல் ஆயிடுவேன். இட்ஸ் ஓகே. அதான் ஹீரோயின் ரூபத்துல காலேஜ் பொண்ணா வந்து கலக்கப் போறேனே...

பிடித்த, பிடிக்காத பாடம்?

எனக்கு 'கணக்கு' சுட்டுப்போட்டாலும் வராது. ஆனா 'ஜுவாலஜி'ன்னா தூக்கத்திலும் பாடங்களை கரெக்டா ஒப்பிப்பேன்.

முதல் சம்பளம்...

சமர்த்தா பேங்குல போட்டேன். அதிலிருந்து கொஞ்சம் எடுத்து கரடிக்குட்டி பொம்மை வாங்கினேன்.

கேரளா...?

என் சொந்த மண். அடிக்கடி போவேன். மழையும், தென்னை மரங்களும் நான் ஊருக்குள்ள நுழையும்போது அழகா வரவேற்கும்.

நாட்டு நடப்பு...?

நியூஸ் பேப்பரை தொட்டுக்கூடப் பார்க்க மாட்டேன். என்னைப் போய் கேக்கறீங்களே...

செல்போன் பைத்தியம்?

சேச்சே... எனக்கு செல்போன் ஒரு தொடர்பு சாதனம். நான் முழுவதும் 'லொட்டு லொட்டு'ன்னு அழுத்தி, அதுகிட்ட அடிமையா இருக்க மாட்டேன்.

தங்கர்பச்சான்?


ஓ மை காட்! ஸாரி! நோ கமெண்ட்ஸ்!

- சநகன்

"நான் அடிமை இல்லை!"



–சந்தியா



காலையில் ஆபிஸுக்குக் கிளம்பும்போது செருப்பின் கட்டை விரல் வார் அறுந்திருந்தது. சாயங்காமல் வரும்போது தைத்துக் கொள்ளலாம் என நினைத்து, அதையே ஒரு மாதிரியாக அட்ஜஸ்ட் செய்து போட்டுக் கொண்டு கிளம்பிவிட்டேன். சாயங்காலம் ஆபிஸிலிருந்து கிளம்பி பஸ் ஸ்டாண்ட் வரும்போது, கல் இடித்து அதே செருப்பின் இன்னொரு வார்ப் பட்டையும் அறுந்து தொலைந்தது. நொந்தே போனேன் நான்.

செருப்பின் இரண்டு வார்களும் அறுந்துவிட்ட நிலையில், அதை போட்டுக் கொண்டு நடப்பதே ரொம்ப சிரமமாக இருந்தது. டீசன்டாக டிரஸ் பண்ணிக்கிட்டு

பேரம்

கே.ஆனந்தன்

அறுந்த செருப்பை மாட்டிக்கிட்டு, கோமாளி மாதிரி தாங்கித் தாங்கி நடந்த என்னை, எல்லோரும் பார்த்த பார்வையில், கூனிக் குறுகிப் போனேன். வெட்கம் பிடுங்கித் தின்றது. அறுந்த செருப்பைக் கையில் எடுத்துக் கொண்டு இரண்டடி நடந்தேன். கல்லும், நறநற மணலும் குத்தி இம்சித்தது.

மெதுவாக கடைத் தெருவுக்கு வந்தேன். மணியைப் பார்த்தேன். மணி

எட்டு. செருப்புத் தைக்கிறவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்தேன். என் துரதிருஷ்டம் யாரும் கண்ணில் படவில்லை. கடைத் தெருவையும், பஸ் ஸ்டாண்டையும் ஒரு சுற்றுச் சுற்றி விட்டு, நொந்தபடி பழைய இடத்துக்கே வந்து நின்றேன்.

கடைத்தெருவை ஒட்டியுள்ள தெருக்களில் யாராவது இருப்பார்களா?... மெதுவாகச் சுற்றினேன். கால்மணி நேரம் கால்கடுக்க கஷ்டப்பட்டுத் தேடியதுதான் மிச்சம். யாரையும் காணோம்.

வாழ்க்கையை நொந்தபடி நடந்தேன். செருப்பைத் தூக்கிப் போட மனமில்லை. நானூறு ரூபாய் செருப்பு... நல்ல நிலைமையில்தான் இருந்தது. தைத்துக் கொண்டால் இன்னும் ஒரு ஆறு மாதம் அப்படி இப்படி என ஓட்டிவிடலாம்.

யோசித்துக் கொண்டே நடந்தேன். குப்பையும் சாக்கடையும் கலந்த சேற்றில் கால் வைத்து நடப்பது அருவெறுப்பாக இருந்தது. நான் படுகிற அவஸ்தைக்கு எவ்வளவு பணம் கொடுக்கவும் தயாராக இருந்தேன். அப்போது தான் அவன் என் கண்ணில் பட்டான். ஒரு குடிசை முன்பு உட்கார்ந்து, செருப்பு தைத்துக் கொண்டிருந்தான். வேகமாக அவனிடம் போய் என் செருப்பை விட்டேன்.

“பிஞ்சுடுச்சா சார்?... இதோ அஞ்சே நிமிஷம்...'' சொன்னபடி ஐந்து நிமிடத்தில் தைத்து நீட்டினான்.

“பத்து ரூபா குடுங்க சார்...”

''என்னப்பா... ரெண்டு தையல் போட்டே... இதுக்குப் பத்து ரூபாயா?... அஞ்சு ரூபாய்க்கு மேல ஒரு பைசா தரமாட்டேன்...'' பேரம் பேச ஆரம்பித்தேன். ◉



புள்ளி விவரப் புலி!

கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தினால் என்ன பயன்? தேர்ந்தெடுக்கப்பட்ட 200 மாவட்டங்களில் உள்ள கிராமங்களில், ஒவ்வொரு வீட்டிலும் யாராவது ஒருவருக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 100 நாள் வேலை கிடைக்கும். நாளொன்றுக்கு 60 ரூபாய் கூலி. மூன்றில் ஒரு பங்கு வேலை பெண்களுக்கு ஒதுக்கப்படும். இத்திட்டச் செலவில் 10 சதவிகிதத்தை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் செலுத்த வேண்டும்.

போட்டுத் தாக்கு!

ப.சிதம்பரத்திடம் கேட்கக் கூடாத கேள்விகள்

1. உங்க மனைவி எந்த ரகசியத்தையும் உங்ககிட்ட மறைக்க (!) மாட்டாங்களாமே...?

2. சத்தியமூர்த்தி பவன்னு ஒரு பில்டிங் இருக்காமே... அதை எப்போவாவது எட்டிப் பார்க்கறதுண்டா...?

3. மாரியாத்தா கோயில்ல இருந்து நிதி வசூல் பண்ண ஐடியா கேட்டா சொல்வீங்களா...?

4. டெல்லியில நீங்க சோனியா கோஷ்டியா? இல்ல மன்மோகன்சிங் கோஷ்டியா...?

5. எம்.பி சீட்டு கிடைச்சா உடனே கட்சியை அம்போன்னு விட்டுடணும்ங்கற உன்னதத் தத்துவத்தை உங்களுக்கு யாரு சொன்னது?

6. ரஜினிகூட எப்போ பழம் விட்டீங்க?

7. பிளைன் சட்டைக்குப் பதிலா ஏன் நீங்க 'வரி' போட்ட சட்டை போடக் கூடாது?

8. திருமண விழாவைக்கூட பட்ஜெட் விளக்கப் பொதுக்கூட்டமா மாத்திடுவீங்களாமே...?

9. போற போக்கைப் பார்த்தா, நளினி சிதம்பரம்னா யாருன்னு கேட்பீங்க போலிருக்கே...?

10. அன்புமணி, தயாநிதியை காண்பிச்சுத்தான் கார்த்திக்குக்கு சின்னப்புள்ளைல சோறு ஊட்டுவீங்களாமே...?

பத்துக் கேள்வி பரமு





வெற்றி மாநாடா...

''நம்மில் பலருக்குக் கொள்கை உறுதி குறைந்துவிட்டது. பதவி ஆசை வந்துவிட்டது. தி.மு.கவினர் கொள்கைக்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும்''

- இது தி.மு.கவின் நாளைய தலைவராக வர்ணிக்கப்படும் மு.க. ஸ்டாலின் வேலூர் மண்டல மாநாட்டில் பேசிய பேச்சு. தி.மு.க ஆட்சிக் கட்டிலில் இல்லாத நேரத்தில், உடன்பிறப்புகள் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு ஆசைப் படாமல் இருக்க, தடுக்க, கலைஞர் அரும்பாடு பட வேண்டியிருக்கிறது.

வேலூர், திருவண்ணாமலை, தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கிய வேலூர் மண்டல மாநாடு, தி.மு.கவினருக்கும், கட்சித் தலைமைக்கும் பல புதிய செய்திகளை அளித்துள்ளது. அதாவது ஸ்டாலினின் மேற்கூறிய பேச்சு, தொடர்ந்து நடக்கும் மாநாடுகளால் தி.மு.கவுக்கு ஏற்படும் லாப - நஷ்டம், தொண்டர்களுக்கு ஏற்பட்டுள்ள திருப்தி - அதிருப்தி, ஜெயலலிதா அரசின் சலுகைகள் மக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு, வரும் சட்டமன்றத் தேர்தல் கூட்டணி, விஜயகாந்த் அரசியல் பிரவேசம், தமிழகத்தில் கூட்டணி ஆட்சி, ஸ்டாலின் முதல்வராகும் வாய்ப்பு ஆகிய பல்வேறு அம்சங்கள் குறித்து, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த தொண்டர்கள் பலரிடம் உரையாடி, அவர்களிடம் ''இது வெற்றி மாநாடா... வெட்டி மாநாடா?'' என்று கேட்டபோது, பலர் தமது உற்சாகத்தை வெளிப்படுத்தினர். சிலர் இலேசாகக் குறைபட்டுக் கொண்டனர்; பெரும்பாலானோர் விஜயகாந்த்தைத் திட்டித் தீர்த்தனர்!

ஜி.கே. சுபாஷ் (சேலம் மாவட்டம்)

''தொடர்ச்சியா மாநாடு நடத்துறதால எங்களுக்கு எந்தக் கஷ்டமும் இல்லீங்க. இந்த மாநாடு, தலைவரோட பேச்சு, தளபதியோட பேச்சு எல்லாமே எங்களுக்கு சத்து மாத்திரை மாதிரி. இன்னிக்கு ஜெயலலிதா ஏகப்பட்ட அறிவிப்புகளை வெளியிடறாங்க. ஆனா இதெல்லாம் ஜெயிக்கறக்கு உதவாது. ஏன்னா, பார்த்துப் பார்த்து நல்லது செஞ்ச கலைஞரையே போன எலெக்ஷன்ல மறந்துட்டாங்க. அதனால இந்த வெற்று அறிவிப்புகளைப் பார்த்து நாங்க பயப்படல. வர்ற எலெக்ஷன்ல எங்களோட வெற்றி யாராலேயும் தடுக்க முடியாத ஒண்ணு.''

அன்பு (ராமநாதபுரம் மாவட்டம்)

''இன்னிக்கு வெற்றிங்கறது கூட்டணியை வச்சுத்தான். அதனால வர்ற ஆட்சி அநேகமா கூட்டணி ஆட்சியாத்தான் இருக்கும். அதனால அதுக்கு ஏத்தமாதிரி தொண்டர்களைத் தயார்ப் படுத்த கலைஞர் முயற்சி எடுக்கணும். அப்படிச் செய்தாத்தான், வர்ற எலக்ஷன்ல கூட்டணியோட வெற்றி உறுதியாகும். எங்க தலைவர் ஒரு ராஜ தந்திரி. அதனால இந்த கூட்டணி - கூட்டணி ஆட்சி விஷயத்துல கொஞ்சம் இறங்கி வருவார்னு நினைக்கிறோம். அதுக்காக விஜயகாந்த் மாதிரி கத்துக்குட்டிங்க பத்தியெல்லாம் எங்ககிட்ட கேட்காதீங்க. அவருல்லாம் எங்களுக்கு ஒரு மேட்டரே

- சோமசுந்தரம்



- ராமையா நாடார்



- சுபாஷ்







வெட்டி மாநாடா..?

-ரன்னிங் காமென்ட்ரி

இல்ல."

சரவணன் (நாகை மாவட்ட இளைஞரணி)

"எங்க தலைவரோட வேட்டியப் பிடிச்சுக்கிட்டே ஜனங்க கிட்ட அரசியல் ரீதியா அறிமுகமானவரு விஜயகாந்த். இன்னிக்குப் பொத்தாம் பொதுவா எல்லா ஆட்சியோடயும், கலைஞர் ஆட்சியைச் சேர்த்து கேலி பேசறாரு. ஒண்ணு சொல்றேன் சார்... இவரால எங்க கட்சிக்கு ஒரு சின்ன சிராய்ப்பைக்கூட உண்டாக்க முடியாது. இந்த எலெக்ஷன்ல மிகப் பெரிய மரண அடியை விஜயகாந்த் வாங்கப் போறது உறுதி."

சேகர் (விழுப்புரம் மாவட்டம்)

"இளங்கோவன் என்ன... இவங்க அன்னை சோனியாவே சொன்னாலும், இங்க தனிக்கட்சி ஆட்சிதான். காங்கிரஸ், வைகோ, கம்யூனிஸ்ட்டுக்கு எங்களை விட்டா வேற வழி இல்ல. ராமதாஸ்தான் இழுத்துக்கிட்டு இருக்காரு. பாண்டிச்சேரில மூணு சீட்டு எக்ஸ்ட்ரா கொடுத்தா அதுவும் நின்னுடும். ஆனா இந்த விஜயகாந்த் பண்ற லொள்ளுதான் தாங்க முடியல. வர்ற எலெக்ஷன்ல வாங்கிக் கட்டிக்கிட்டு, சினிமாவுல காமெடி வேஷம்கூடக் கிடைக்காம அல்லாடப் போறாரு பாருங்க."



• மகேஸ்வரி

ஜெயராஜ் (நாகை மாவட்டம்)

"எங்களுக்குப் பதவி ஆசை வந்துடுச்சுன்னு எந்த நினைப்புல தளபதி சொன்னாருன்னு புரிஞ்சுக்க முடியல... நகையை அடகு வச்சு, கடனை வாங்கி ஊருக்கு வர்றோம். அப்படிப்பட்ட எங்களை இப்படிச் சங்கடப்படுத்தியிருக்க வேணாம். ஆனா அதுக்காக நாங்க மனசு ஒடிஞ்சு போகலை. இப்பவும் சொல்றோம். அடுத்த முதல்வர் கலைஞர்... துணை முதல்வர் ஸ்டாலின்... 2008-ல ஸ்டாலின் முதல்வர்...இது உறுதி..."

சோமசுந்தரம் (கடலூர் மாவட்டம்)


"என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளேன்னு எங்க தலைவர் வாயில இருந்து வர்ற வார்த்தைகளைக் கேட்கறதுக்கு ஏங்கி வந்த கூட்டங்க இது. அதனால, எத்தனை தடவை, எந்த ஊர்ல போட்டாலும் நாங்க வருவோம். வர்ற எலெக்ஷன்ல பாருங்க. எங்க தலைவரு கூட்டணியை இதைவிட பலமாக்கி, தனியாவே 130 சீட்டு ஜெயிச்சு, முதல்வராகப் போறாரு... இங்க தான் ஆட்சியில இல்லியே தவிர, மத்தியில நாங்க தான் இருக்கோம்.

• குருநாதன்



• சம்பத்





அதைவச்சு தமிழகத்துக்குப் பல பணிகள் நடக்குது. அதனால இந்தம்மா எத்தனை சலுகை

கூட்டம் அதிகம்!

தண்டராம்பட்டு வேலு:

''வழக்கமா மத்த மாநாட்டுல முதல்நாள் ரொம்ப கூட்டம் வராதுன்னு சொல்வாங்க... ஆனா இந்த மாநாட்டுல முதல்நாளே பந்தல் நிரம்பிடிச்சு. இதுவே இந்த மாநாடு மிகப் பெரிய வெற்றி மாநாடுங்கறதுக்குச் சரியான உதாரணம்.''

கொடுத்தாலும் எங்க வெற்றியைத் தடுக்க முடியாது.''

குருநாதன் (சென்னை மாவட்டம்)

''எங்க கூட்டணியை உடைக்க சதின்னு நிறைய செய்திகள் வருது. ஆனா அதுல எல்லாம் எங்களுக்கு நம்பிக்கை இல்ல. எங்க கூட்டணி, ஒற்றுமையா இருந்து, ஜெயலலிதாவை வீட்டுக்கு அனுப்பிட்டு, கலைஞரை முதல்வர் நாற்காவில உட்கார வச்சுட்டுதான் மறு வேலை பார்க்கும். ஆனா ஒண்ணுங்க... மத்தியில கூட்டணி ஆட்சி நடக்கறமாதிரி தமிழ்நாட்டுல கூட்டணி ஆட்சி வர்றதுக்கு வாய்ப்பே இல்ல... நிச்சயமா அது தனிக்கட்சி ஆட்சிதான். அதுல நாங்க ரொம்பத் தெளிவா இருக்கோம்.''

ராமையா நாடார் (வேலூர் மாவட்டம்)

''விருகம்பாக்கம் சிறப்பு மாநாட்டுல இருந்து ஒண்ணுவிடாம கலந்துக்கறேன். முன்னெல்லாம் பேச்சுக்குத்தான் முக்கியத்துவம்.... இப்போ விளம்பரத்துக்குத்தான் அதிக முக்கியத்துவம் தர்றாங்க. எனக்கென்ன வருத்தம்னா, முன்னெல்லாம் குழந்தை குட்டி, குடும்பத்தோட வந்தவங்க, இப்போ தனியாளா வந்துடறாங்க. எனக்கென்னமோ இங்க வர்ற அபரிமிதமான கூட்டத்தைப் பார்த்தா அடுத்த மாநாடு தி.மு.கவோட வெற்றி மாநாடா இருக்குமோன்னு தோணுது... அதுலயும் கலந்துப்பேன்.''

மகேஷ்வரி (தொண்டரணி)

''இன்னிக்கு தமிழகத்துல இருக்குற லட்சோப லட்சம் இளைஞர் - யுவதிகளோட நம்பிக்கை நட்சத்திரமா இருக்கறவர் தளபதி ஸ்டாலின். இப்போ இளைஞர்கள் தன் பக்கம் இருக்கறதா சொல்லிக்கிட்டு விஜயகாந்த் அரசியலுக்கு வர்றார். அவரும் ஒரு காலத்துல எங்க தலைவர்



ஏன் பிரம்மாண்டம்?

ராணிப்பேட்டை காந்தி:

''ஒரு மாநாட்டை இன்னொரு மாநாடு விஞ்சுற அளவுக்கு நாங்க தொடர்ச்சியா மாநாடு நடத்திக்கிட்டு வர்றோம். இது வர்ற சட்ட மன்றத் தேர்தலுக்கு முன்னால நடத்தப்படற கடைசி மண்டல மாநாடு. அதனாலதான் இவ்வளவு பிரம்மாண்டமா பண்ணியிருக்கோம்.''

பின்னால இருந்தவர்தான். அவருக்கு ஒரு யோசனை - ''நீங்களும் கழகத்துக்கு வந்துடுங்க. எல்லாரைப் போலவும் கட்சிப் பணியாற்றுங்க. மற்ற வாய்ப்புகள் உங்களுக்குத் தானா கிடைக்கும்.''

'கொள்கை' சம்பத் (திருச்சி மாவட்டம்)

''அடிக்கடி மாநாடு போடறதால பணங்காசு செலவழியறது என்னவோ வாஸ்தவந்தான். ஆனா, ''உடன்பிறப்பேன்னு' தலைவர் கூப்பிடறப்போ எல்லாக் கஷ்டமும் பறந்துடுது. இந்த மாநாட்டுக்கு வந்த கூட்டமே சொல்லுதே, கூட்டணிக்கு 185 சீட்டு ரெடியா இருக்குதுன்னு. இப்போ எங்களைப் பார்த்து விஜய்காந்த் மாநாடு, கட்சின்னு கிளம்பியிருக்காரு. நீ எழுதி வச்சுக்க.... இந்தப் பொடியனால சின்ன துரும்பைக்கூட தி.மு.ககிட்ட இருந்து நகர்த்த முடியாது.''

- இரா. முத்துக்குமார்

படங்கள்: **ராஜன்**

சாம்பலிலிருந்து...





மாய்ந்து மாய்ந்து மெக்ராத்தும் ப்ரெட்லீயும் பந்து வீசுகிறார்கள். மறு முனையில் ஃபோரும் சிக்ஸரும் விளாசப்படுகிறது. சரி, பேட்டிங்கிலாவது பட்டையைக் கிளப்பிவிடலாம் என்றால், கிடுக்குப்பிடி போடுகிறார்கள் இங்கிலாந்தைச் சேர்ந்த ஹார்மிஸனும் ஃப்ளிண்ட்டாஃப்பும்.

இந்தியா - பாகிஸ்தான் தொடரை விட உலகம் முழுக்க ஆவலுடன் கண்காணிக்கப்படும் 'ஆஷஸ்' (Ashes). தொடரில்தான் இந்தக் காட்சிகளெல்லாம்.

1882ல் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மண்ணில் ஜெயித்ததையொட்டி, 'எரியூட்டப்பட்ட, இங்கிலாந்தின் சாம்பல் ஆஸ்திரேலியாவுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது' என்று, ஸ்போர்ட்டிங் டைம்ஸ், இதழில் எழுதப்பட, அதுவே இரு நாடுகளிடையே நடக்கும் தொடருக்கு 'ஆஷஸ்' (சாம்பல்) என்று பெயர் வைக்க ஏதுவாக அமைந்துவிட்டது.

1989லிருந்து ஒரு முறைகூட 'ஆஷஸ்' தொடரை இங்கிலாந்துக்கு விட்டுக் கொடுக்கவில்லை ஆஸ்திரேலிய அணி. இந்த முறையும் போட்டி தொடங்குவதற்கு முன்பு "நாங்கள் 5-0 என்று டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவோம்" என்று இறுமாப்பாகப் பேசினார் ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர் மெக்ராத். "இங்கிலாந்து வீரர்களைச் சமாளிப்பது ஒன்றும் கடினமில்லை" என்றார் ரிக்கி பாண்டிங். நிறைகுடமான இங்கிலாந்து இலேசில் தளும்பவேயில்லை. செயலில் காட்டுவோம் என்று களத்தில் இறங்கினார்கள்.

ஐந்து டெஸ்ட் கொண்ட தொடரில் இறுதி டெஸ்ட்டுக்கு முன்பு 2-1 என்று முன்னணியில் இருக்கிறது இங்கிலாந்து. 'அவரை மாற்று, இவரை வீசியெறி' என்று முன்னாள் ஆஸ்திரேலிய கேப்டன்கள் தங்கள் அணி மீது கல்லெறிகிறார்கள். நடுங்கிப் போயிருக்கிறது ஆஸ்திரேலிய அணி.

கடைசி டெஸ்ட் 8ம் தேதி ஓவலில் (Oval) தொடங்குகிறது. இதில் மட்டும் ஆஸ்திரேலியா தோற்றுவிட்டால், பின்னர் இங்கிலாந்து கிரிக்கெட் உலகின் சூப்பர்மேனாகி விடும்.

ஏதோ இந்தியாதான் சென்ற இடமெல்லாம் நொந்து நூடுல்ஸாகி திரும்பி வருகிறது என்றால், ஜாம்பவான் ஆஸ்திரேலியாவுக்கும் அதே கதியா? பாவம் ரிக்கி பாண்டிங்!

- எழில்

பாரதிய ஜனதா கட்சியின் அகில இந்திய செயற்குழு கூட்டம் செப்டெம்பர் 16, 17, 18 தேதிகளில் சென்னையில் நடைபெற உள்ளது. பேரணி, பொதுக்கூட்டம் எல்லாம் உண்டு. இது பற்றியும், மற்ற விஷயங்கள் பற்றியும் பா.ஜ.கவின் அகில இந்திய செயலாளர் இல.கணேசன் நமக்கு அளித்த சிறப்புப் பேட்டி:

பா.ஜ.க. தமிழகத்தில் பேரணி, பொதுக்கூட்டம் நடத்துவதன் நோக்கம் என்ன?

பா.ஜ.கவின் அகில இந்திய செயற்குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடி பல்வேறு விஷயங்கள் குறித்தும் விவாதித்து, முடிவுகள் எடுக்கும். அதில் வாஜ்பாய், அத்வானி உட்பட கட்சியின் எல்லா முக்கியத் தலைவர்களும் கலந்து கொள்வது வழக்கம். அந்தக் கூட்டம் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு இடத்தில் நடக்கும். அடுத்து தேர்தல் நடைபெற உள்ள ஐந்து மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்பதால், இந்தமுறை சென்னையில் நடக்கிறது.

கட்சிக்குள் பிரச்னைகள் ஒருபுறம் என்றால், ஆர்.எஸ்.எஸ்ஸுக்கும், பி.ஜே.பிக்கும் மோதல், வி.ஹெச்.பிக்கும் பி.ஜே.பிக்கும் மோதல் என்று சங்க குடும்பத்துக்குள்ளேயே பிரச்னைகள் ஏன்?


சித்தாந்த ரீதியாகச் சில குழப்பங்கள் இருப்பதும், சங்கம் எதிர்பார்க்கிற கட்டுப்பாடுகளை பரிவார் அமைப்புகள் சில மீறுவதும் பெருகி வருவதை உணர்ந்த காரணத்தால், இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கருதி, நல்ல நோக்கத்தோடு ஆர்.எஸ்.எஸ். எடுத்த நடவடிக்கைதான், கடந்த மாதம் கட்சி நிர்வாகிகளை அழைத்துப் பேசியது. அதற்குரிய பலன் நிச்சயமாகக் கிடைத்திருக்கிறது. பிரச்னைகள் முற்றிலுமாய்த் தீர்ந்து விடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

கட்சியில் உட்கட்சி ஜனநாயகம் கேள்விக்குறியாகிவிட்டதே. முதலமைச்சரை மாற்ற வேண்டும் என்று எதிர்ப்பு கோஷ்டி டெல்லிக்குப் போவது, கட்சி மேலிடம் கோஷ்டிகளைச் சமாதானம் செய்வது, இது பொதுவாக காங்கிரஸ் கலாசாரம். பா.ஜ.கவிலும் வந்து விட்டதே! லேட்டஸ்ட்டாக குஜராத்...?

பா.ஜ.க. ஒரு கட்டுப்பாடு மிகுந்த கட்சி என்ற காரணத்தாலும், அதன் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கை காரணத்தாலும், கொஞ்சம் கட்டுப்பாடு குறைந்தாலும் மக்களுக்கு அது அதிர்ச்சியை அளிக்கிறது. இதுவே காங்கிரஸ் கட்சி என்றால் 'சகஜம்' என்று விட்டிருப்பார்கள். மாநிலத்தில் முதலமைச்சர்களை பா.ஜ.க தலைமை திணிப்பதில்லை. மாநிலத்தில் இருப்பவர்கள் மத்தியில் கருத்து ஒற்றுமை ஏற்படுத்த மத்தியத் தலைமை உதவுகிறது. இதுதான் காங்கிரசுக்கும் பா.ஜ.கவுக்கும்

"மோடியை விமர்சிப்பது ஃபேஷனாகிவிட்டது..."

பா.ஜ.க. செயல்படுவதால்தான் சிபுசொரன் போன்றவர்கள் பதவி விலக வேண்டியதாயிற்று



–இல. கணேசன் பேட்டி

உள்ள வித்தியாசம்.

குஜராத்தில் நரேந்திரமோடி ஒரு திணிக்கப்பட்ட முதலமைச்சர் என்பதுதானே உண்மை?

குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை விமர்சனம் செய்வது என்பது இப்போது ஒரு நாகரிகமாகிவிட்டது. மோடி, ஒரு திறமையான முதலமைச்சர். நல்ல நிர்வாகி. மக்கள் அவரது ஆட்சியை விரும்புகிறார்கள். அவரை பதவியிலிருந்து விலக்கி விட வேண்டும் என்று ஒரு சிலர் விரும்பினாலும், அந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டுவிட்டது. ஐந்தாண்டுக் காலம் மோடி முழுமையாக ஆட்சி செய்வார்.

பா.ஜ.கவின் இரும்பு மனிதர் என்று வர்ணிக்கப்படும் அத்வானியின் தலைமைக்கு எதிராகவே போர்க்கொடி தூக்கப் படுகிறதே!

கட்சித் தலைவரின் கருத்து தவறு என்று ஒருவர் நினைத்தால், தன் மாற்றுக் கருத்தை நேரிடையாக அவரிடமே தெரிவிக்கும் அளவுக்கு, பா.ஜ.க.வில் உட்கட்சி ஜனநாயகம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, கட்சிக்கு உள்ளே பேசவேண்டிய விஷயங்களை, கட்சிக்கு வெளியே பேசுபவர், எவ்வளவு மூத்த தலைவராக இருந்தாலும் அது நடவடிக்கைக்கு உரியதே. ஆனால் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறாக ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்குமோ என்கிற குழப்பம் வருகிறபோது, அது குறித்து விவாதம் நடத்துவது ஆரோக்கியமானதே!

பா.ஜ.க.கூட்டணி அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த தி.மு.க. இப்போது காங்கிரஸ் கூட்டணியில் இருந்து கொண்டு, தங்களுக்கு சம்பந்தமே இல்லாதது போல, கடந்த காலத்தின் குறைகளை விமர்சித்து

வருகிறதே!

அது தி.மு.கவுக்கு இயற்கையாகவே இருக்கிற ஒரு சுபாவம். 'கொள்ளு' என்றதும் வாயைத் திறந்து, 'கடிவாளம்' என்றதும் வாயை மூடிக் கொள்ளும் குதிரை போன்றது தி.மு.க. வாஜ்பாய் ஆட்சிக் கால சாதனைகளில் தங்களுக்கும் பங்கு உண்டு என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வதும், வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் செய்யத் தவறியதாக இவர்களாக எதையாவது கற்பனை செய்து கொண்டு, அதற்கு பா.ஜ.க மீது பழிசுமத்தும் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு தானும் குற்றம் சாட்டுவதும் தி.மு.கவுக்குக் கைவந்தகலை. அதைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். ஆனால் மக்கள் முட்டாள்கள் அல்ல.

ஒரு பொறுப்பான எதிர்கட்சியாக பா.ஜ.க. பாராளுமன்றத்தில் செயல் படுவதாகத் தெரியவில்லையே?"

கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டவர்களை அமைச்சரவையில் சேர்த்துக் கொண்ட அரசாங்கம் இது. அநேகமாக தினம் ஒரு தவறை இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. இதை எல்லாம் ஜனநாயக ரீதியாக பாராளு மன்றத்தில் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. நாங்கள் எதைப்பற்றிப் பேச எழுந்தாலும், உடனே லாலுபிரசாத் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூச்சல் போடுவதும், அதற்கு ஆதரவாக காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள் பேசுவதும், அவையில் அமைதி குறைவதும், அதனால் சபை ஒத்திவைக்கப்படுவதும் வாடிக்கையாகி விட்டது.

கடைசியில், சபையில் கூச்சல் குழப்பத்துக்குக் காரணம் பா.ஜ.கதான் என்று பழி சுமத்துவதும் வழக்கமாகிவிட்டது. ஆனாலும், பொறுப்பான எதிர்கட்சியாக பா.ஜ.க. செயல்படுவதால்தான், சிபுசொரன் போன்றவர்கள் பதவி விலக வேண்டியதாயிற்று.

இப்போது தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரண்டு கூட்டணிகளிலுமே பா.ஜ.க. இல்லை. வரும் செயற்குழுக் கூட்டத்தில் கூட்டணி பற்றி புதிய முடிவு எடுக்கப்படுமா?

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தேர்தல் கூட்டணி பற்றி மீண்டும் பேசுவதற்கு அவசியமில்லை. சில மாதங்களுக்கு முன்பே சென்னையில் நடைபெற்ற சிந்தனை அரங்கத்தில், அனைவரும் விரிவாக இது பற்றிப் பேசிவிட்டோம். அதில் ஏகமனதாக எடுத்த முடிவு இதுதான்:

வரும் சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க., தமிழ் நாட்டின் இரு பெரும் கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க. இரண்டுடனும் கூட்டணி வைத்துக் கொள்ளாது. 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டி இடும் அளவுக்குத் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ளும். இந்தக் கூட்டத்தில் தேர்தலுக்கு எந்த அளவுக்குத் தயாராக இருக்கிறோம், வெற்றி வாய்ப்புகள் எப்படி உள்ளன என்று விவாதிப்போம்.

விஜயகாந்த் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்வீர்களா?

விஜயகாந்த் இன்னும் கட்சியே ஆரம்பிக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் அது பற்றிப் பேசுவது பொருத்தமற்றது.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படம்: **ஸ்ரீஹரி**



"மொய்ப் பணம் வாபஸ் கிடையாதுனு போர்டு வச்சுருக்காங்களே... ஏன்?"

"சில பேர் பந்தியில சாப்பாடு சரியில்லைனு புகார் சொல்றாங்களாம்!"

- அம்பை தேவா



கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை

அன்புடன் அழைக்கிறது

அமரர் கல்கி பிறந்த நாள் விழா

செப்டெம்பர் 9, 2005
(வெள்ளிக்கிழமை)

மயிலை, பாரதிய வித்யாபவன் அரங்கம்

மாலை 6:00 மணி.

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவுப் பரிசும் விருதும் பெறுவோர்:

இளம் இசைக் கலைஞர்கள்

சிக்கில் குருசரண்,
வயலின் வரதராஜன்

தலைமை :


சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர்

ஆர். நடராஜ்

மாலை 6:45 மணி : **இன்னிசைக் கச்சேரி**

சிக்கில் குருசரண்	:	பாட்டு
எஸ். வரதராஜன்	:	வயலின்
ஸ்ரீமுஷ்ணம் வி.ராஜாராவ்	:	மிருதங்கம்
எஸ்.வி.ரமணி	:	கடம்

அனைவரும் வருக!



6

விலகல்

கனிமொழி

எப்படிச் சொல்வாய்?
தண்டோரா அடித்து
பறைசாற்றும் போது
அருகில் இருந்தால்
என் காதுகளிலும் விழட்டும்
என்பாயா?

மென்மையாய்ப் பற்றிய
கையின் கதகதப்பில்
அடைகாத்து
வழக்கமாய்ப் போகும்
நந்தவனமொன்றில்
என் கண்களைத் தவிர்த்து
இலைகளின் மீது உருளும்
நீர்த் திவலைகளைப் பார்த்தபடி
சொல்வாயா?

முகத்தில் மினுக்கும்
வெட்கமும்
சூல்கொண்டு பூரித்த
உடலுமாய்
அவளைப் பார்த்து
தெரிந்து கொள்வேன்
என்றிருப்பாயா?

அலுவலகத்தில்
பகிர்ந்துகொண்ட
இனிப்பின் மிச்சங்களோடா?
அடிச்சரடாய் இழையும்
உறுத்தலோடா?

விடைபெறுதலின்
உபசார வார்த்தைகளுக்கும்
கையசைப்பிற்கும் உள்ள
வழக்கமான மௌனத்தைக்
கலைத்தா?
வேட்கை தணிந்து
வியர்வைத் துளிகள்
காயத்துவங்கும் கிறங்கிய
தருணத்திலா?

எப்போது சொல்வாய்
என்று காத்திருக்கிறேன்.
நல்லெண்ணங்களையும்
புன்னகையையும்
ஒரு நேர்க்கோட்டில் குவித்து
உன் கண்களைச் சந்தித்து
உறுதியான கைகுலுக்கலுடன்
வாழ்த்துச் சொல்ல...!

ஓவியம்: மருது



கோவிந்தா சைபர் கிளினிக்.

மனநல மருத்துவர் ப்ரௌஸர் பாண்டியனிடம் மாலை 7 மணிக்கு கோ_சாமி@2005க்கு (கோயிந்தசாமியின் 'நெட்' நேம்!) அப்பாயின்மெண்ட். ப்ரௌஸர் பாண்டியன் தமிழ்நாட்டிலேயே நெம்பர் 1 - நெட்னீஷியா மன நோய் கன்சல்டன்ட்! (நெட்னீஷியான்னா என்னன்னு கேட்கறீங்களா, அதாங்க, எப்பப் பாத்தாலும் நெட்லயே ப்ரௌஸ் பண்ணிக்கிட்டு இருக்கறதால வர்ற நோய்!) 'லப்-டப்' செக் பண்ணுற டாக்டர், லாப் டாப்ல் மெயில் செக் பண்ணிக் கொண்டிருந்தார். கோயிந்தசாமி வருகிறார் மெயில் வழியாக.

'சார், வந்துக்கிட்டே இருக்கேன். ஸாரி, 5 நிமிஷத்துல வந்துடுவேன்.' இது கோயிந்தசாமியின் முதல் மெயில்.

'சார், இந்தா வாசலுக்கு வந்துட்டேன். ப்ளீஸ் 2 நிமிஷம். காரை பார்க் பண்ணிட்டு வந்துடுறேன்' - இது 2வது மெயில். இரண்டு நிமிடங்கள் கழித்து...

டாக்டர் : வாங்க மிஸ்டர் கோ_சாமி, எப்படி இருக்கீங்க!

கோ_சாமி : நல்லா இருந்தா நான் எதுக்கு உங்களைப் பார்க்க வர்றேன். ஸாரி டாக்டர், எனக்கு வர வர யார்கிட்டயும் நேரடியா வாயால பேச முடியல. அதனால் ப்ளீஸ், 'யாஹூ மெஸஞ்சர்'ல சாட் பண்ண வர்றீங்களா, அப்பத்தான் எனக்குப் பேச வசதியா இருக்கும்.

டாக்டர் : ஓ.கே. பேசலாம். (யாஹூ மெஸஞ்சரில் சாட் தொடர்கிறது).

கோ_சாமி : டாக்டர், வரவர நான் ரொம்ப மெயில் செக் பண்ணுறனோன்னு தோணுது.

டாக்டர் : இதுல என்ன தப்பு? உங்க மெயில் ஐ.டி.க்கு வர்ற எல்லா மெயில்களையும் செக் பண்ணுறீங்க, அவ்வளவுதானே!

கோ_சாமி : இல்ல டாக்டர், யாஹூல 36 மெயில் ஐ.டி., கூகுள்ல 23 மெயில் ஐ.டி., ஹாட்மெயில்ல 14 மெயில் ஐ.டி. இதுபோக இலவசமாக் கெடைக்குற எல்லாத்துலயும் தலைக்கு ஒண்ணுன்னு மொத்தம் 108 மெயில் ஐ.டி.ங்க மட்டும்தான் வைச்சிருக்கேன்.

ஜாவா தோஷம்: செவ்வாய் விரதம்!


டாக்டர் : 108ஆ? எப்படிங்க பாஸ்வேர்டை ஞாபகம் வைச்சிக்குவீங்க?

கோ_சாமி : டாக்டர்கிட்ட எதையும் மறைக்கக்கூடாது. அதனால சொல்லிடுறேன். மறக்கக்கூடாதுன்னு எல்லாத்துக்கும் 'பாஸ்வேர்டு'ன்னே பாஸ்வேர்டு வைச்சுட்டேன்.

டாக்டர் : ஓ. நல்ல ஐடியா! அது சரி, எப்பல்லாம் மெயில் செக் பண்ணுவீங்க.

கோ_சாமி : பல் தேய்க்கறதுக்கு முன்ன-பின்ன, டாய்லெட் போறதுக்கு, குளிக்கிறதுக்கு, சாப்பிடுறதுக்கு, ஷூ போடுறதுக்கு முன்ன-பின்ன - இப்படி

எது செஞ்சாலும் அதுக்கு முன்ன-பின்ன என்னால மெயில் செக் பண்ணாம இருக்க முடியாது டாக்டர். மெயில் செக் பண்ணுறதுக்கு முன்ன-பின்னகூட மெயில் செக் பண்ண ஆரம்பிச்சுட்டேன். ஒரு நாள் நைட்டு 2.55க்கு தூங்கப் போனேன். எனக்கு மெயில் வர்ற மாதிரி கனவு வந்துச்சு. உடனே எந்திருச்சு



டக்குன்னு 108 மெயில் ஐ.டி.க்கும் போயி மெயில் செக் பண்ணிட்டுத்தான் படுத்தேன். இதுல எதுவும் தப்பிருக்கா டாக்டர்?

டாக்டர் : ம்... சொல்றேன். உங்க மனைவி, குழந்தைகளெல்லாம் இதைப் பத்தி என்ன நெனைக்கிறாங்க?

கோ_சாமி : ஸாரி டாக்டர், என் மனைவி பேரு www.lalitha.com-ஆ, இல்ல.net-ஆன்னு ஞாபகம் இல்ல, ஆனா என்னோட ரெண்டு பசங்களுக்கு லினிக்ஸ், விண்டோஸ்ன்னு பேரு வைச்சேன். அது நல்லா ஞாபகம் இருக்கு. ஆனா அவங்க சொல்லுறது எதுவும் என்னோட இன்பாக்ஸ்ல விழுறதில்லை, எல்லாம் 'ஜங்க்' மெயில் ஆயிடும்.


டாக்டர் : ஓ. சரி, உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா?

கோ_சாமி : நிறைய உண்டு சார். நான் 'கூகுளை'த்தான் என்னோட குலதெய்வமா கும்புடுறேன். அவர்தானே சார், நான் கேட்குற எல்லாத்தையும் தேடிக் கொடுக்கறாரு. சொன்னா நம்ப மாட்டீங்க. போன பங்குனி மாசம், கூகுளுக்கு கடா வெட்டி, பொங்கல் வைச்சு பூசை போட்டேன் தெரியுமா!

டாக்டர் : அட அசத்தியிருக்கிங்களே!

கோ_சாமி : நீங்க வேற, போனவாரம் என்னோட செருப்பு ஒண்ணு காணாமப்

Mr.மெட்ராஸ்



போச்சு, அதைக்கூட 'கூகுள்'ல தான் தேடுனேன் தெரியுமா!

டாக்டர் : வேற என்னவெல்லாம் சமீபத்துல புதுசா பண்ணுனீங்க?

கோ_சாமி : போனவாரம் கல்கியில வந்த 'வலைபாயுதே' பக்கத்தை ஒரு கழுதை திங்கப் போச்சுது. அவ்ளோதான், அதுகூட கட்டிப் பொரண்டு சண்டைபோட்டு பேப்பரைப் புடுங்கிட்டேன் தெரியுமா! அப்புறம் டெய்லி காலைல 'இன்டெர்நெட் எக்ஸ்ப்ளோரர்' முகத்துலதான் கண் விழிக்கிறேன். என்னோட போன் நம்பர் சுத்தமா மறந்து போச்சு. போனை எடுத்தாலே 'நெட்'டை கனெக்ட் பண்ற டயல்-அப் நம்பரை டயல் பண்ண ஆரம்பிச்சுடுவேன். போனவாரம் என் ப்ரெண்ட் ஜான் 77கூட அவரு புதுசா வாங்குன பைக்கை நிறுத்த எங்க வீட்டுல இடம் இருக்கான்னு கேட்டாரு. அவருக்கு 100 GB ஸ்பேஸ் உள்ள ஒரு மெயில் ஐ.டி. கிரியேட் பண்ணிக் கொடுத்திட்டேன். அப்புறம் ரேஷன் கார்டு அப்ளை பண்ணுற ஃபாரத்துல, 'முகவரி'ங்கிற இடத்துல என்னோட வெப்சைட் அட்ரஸைக் கொடுத்திட்டேன். அதனால அது கெடைக்காமப் போயிடுச்சு. எனக்கு ஜாவா தோஷம் இருக்கறதால, வாராவாரம் செவ்வாய்க்கிழமை 'சன்'னுக்கு விரதம் இருக்கேன். டாக்டர், நான் பண்ணுறதுல எதுவும் அதிகபட்சமா தெரியுதா? 'நார்ட்டான் ஆன்டி வைரஸ்' சாப்ஃட்வேர் மூலமா என் உடம்பை ஸ்கேன் பண்ண எதுவும் வழி இருக்கா?

டாக்டர் : ம், இல்ல. ஒண்ணும் பிரச்னை இல்ல! நான் எதுக்கும் ஒரு மருந்து எழுதித் தாரேன். அதை சாப்பிட்டீங்கன்னா நிவாரணம் கிடைக்கும்.

கோ_சாமி : அப்படியா, ஓ.கே. மருந்தை என்னோட மெயில் ஐ.டிக்கு ஃபார்வர்டு பண்ணிடுங்க! நான் டௌன்லோட் பண்ணிக்குறேன்.

டாக்டர் : (அதிர்ச்சியாகி, பின்பு நிதானித்து) மிஸ்டர் கோ-சாமி, மருந்து சாப்பிட்டா மட்டும் போதாது. நான் சொல்ற சில டெர்ம்ஸ் கண்டிஷனுக்கு நீங்க ஒத்துக்கணும். கோவப்படக்கூடாது. பத்து நாளைக்கு நீங்க ப்ரௌஸ் பண்ணக்கூடாது. உங்க லாப்டாப்பை தூக்கிக் கடாசிட்டு, மோடத்தை மண்ணுக்குள்ள புதைச்சிட்டு, வலை வாசனையே இல்லாம, எங்கேயாவது நெட் கனெக்ஷன் இல்லாத ஊராப் பாத்துபோய், ரெஸ்ட் எடுத்துட்டு வாங்க!

கோ_சாமி : (கோபமாக) யோவ், லூஸா நீ! மனுஷனை சாவடிக்கப் பாக்குற! உன் சிஸ்டத்துக்கு வைரஸ் வந்து வாந்தி-பேதி ஆகட்டும். உன் பரம்பரைக்கே மெயில் ஐ.டி. டெலிட் ஆகட்டும். உன் விண்டோஸ் வீணாப் போகட்டும். நீ ஒரு வெர்ச்சுவல் போலி டாக்டர். (கோ-சாமி அங்கிருந்து 'லாக்-அவுட்' ஆகிறார்)

- கற்பனை : **முகில்**

இன்னா... ஹாக்கியும் கோல்ஃப்பும் ஒன்னா?

கோல்ஃப் விளையாடுபவர்கள், கையில் வாட்ச் கட்டிக் கொண்டு ஆடவே கூடாது. ஏன்?

மணிக்கட்டில் அதன் பாரம் அழுத்தும். வாட்சின் ஸ்ட்ராப் லூஸாகவோ அல்லது டைட்டாகவோ, எப்படியிருந்தாலும் கலபமாக கையைச் சுழற்ற முடியாது. வாட்சும் நாசமாகி விடும்.

இப்பொழுது இந்தக் காரணங்கள் அத்தனையும் ஓரங்கட்டப்பட்டு உலகிலேயே முதன்முறையாக கோல்ஃப் வீரர்களுக்கென்று பிரத்யேகமாக வாட்ச் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளது விளையாட்டு வாட்ச்களின் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் டேக் ஹுயர் நிறுவனம். ரப்பர் ஸ்ட்ராப் என்பதால் வழுக்கி விழாது. எடை 55 கிராம் மட்டுமே.



உலகின் நெ.1 கோல்ஃப் வீரர் டைகர் வுட்ஸின் ஆலோசனையோடு உருவாக்கப்பட்டுள்ள இதனை சென்னைக்கு அறிமுகப்படுத்தியவர், பாலிவுட் நட்சத்திரம் ஷாருக்கான்! விலை ஐம்பத்தையாயிரத்தி விருந்து...

ஏன் ஷாருக்கான்? பன்னாட்டுக் கம்பெனிகள் இந்தியாவில் முத்திரை பதிக்க முதன்முதலில் நாடுவது பாலிவுட் மேன் மக்களைத் தான்.


பெப்ஸி, ஃபியட், எம்.ஆர்.எஃப், பிரிட்டானியா போன்ற கம்பெனிகளுக்காக டீ.வியில் புன்னகை செய்பவர் சச்சின் டெண்டுல்கர். அமிதாப் பச்சனை பெப்ஸி, நெரோலெக் பெயின்ட்ஸ், ரீட் & டெய்லர், பார்க்கர் பேனா போன்ற கம்பெனிகள் வளைத்துப் போட, அமீர் கானையும் ஐஸ்வர்யா ராயையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது கோகா-கோலா. சமீபத்திய சர்வேயின்படி 'யூத் ஐகான்' போட்டியில் ஜெயித்தவர் ஷாருக்கான். இவரை இலேசில் விட்டுவிடுவார்களா?

சரி, ஷாருக்குக்கு கோல்ஃப் பற்றி ஏதாவது தெரியுமா?

''யா, சில வருடங்களுக்கு முன்பு கபில்தேவ் கையைப் பிடித்து ஆடக் கற்றுக் கொடுத்தார். அவ்வளவுதான். ஆங்... என் மாமனார் ஒரு கோல்ஃப் ப்ளேயர். ஒருமுறை என்னிடம், "நீங்கள் கோல்ஃப் ஆடுவீர்களா?" என்று கேட்டார். அதற்கு, "நான் ஹாக்கிதான் ஆடுவேன். ஆமா, இரண்டும் ஒண்ணு தானே"ன்னு கேட்டேன். அதுக்கப்புறம் அவர் அதைப்பத்தி என்கிட்ட எதுவும் பேசறதில்லை" என்று உற்சாகமாகக் கற்றை முடியை சிலுப்பிக் கொள்கிறார்.

- செந்தில் படம்: ஸ்ரீஹரி

கூடா சிரிங்க!



“அந்தக் காலத்திலே நான் மண்ணெண்ணெய் விளக்கிலே வீட்டுப்பாடம் படிச்சேண்டா!”

“இப்போ அப்படி முடியாதுப்பா... மண்ணெண் ணெய் ஒரு லிட்டர் 25 ரூபாய்!”

- கு.அருணாசலம்



“உனக்குத் தெரிஞ்ச உலக அதிசயம் ஒன்றைச் சொல்லு பார்க்கலாம்...”

“தப்பில்லாம கிடைச்ச ரேஷன் கார்டு...!”

- ஆர்.ஜெயச்சந்திரன்



“விளம்பரத்தைப் பார்த்து நம்ம இன்ஸ்பெக்டர் ரொம் பவே வெறுப்பேத்தறாரு!”

“என்ன சொல்றே?!”


“சன்டே அன்னிக்கு வர்ற வங்கக்கிட்ட மட்டும் ரெண்டு தடவை மாமுல் வாங்கறாரு!”

- யமுனா ரெங்கநாதன்

“சென்சார் அதிகாரி மேல செல்போனை வீசினீங்களாமே...ஏன்?”

“அவர் தான் அவசரமா ஒரு கால் பேசணும்னு போனைக் கேட்டார்!”

- அம்பை தேவா



உண்மையான பக்தன் யார்?

வாழ்க்கை என்கிற தடை ஓட்டப் பந்தயத்தில் வெற்றிகரமாக தடைகளைத் தாண்டிக் குதித்து ஓடுவதற்குப் பதிலாக, தட்டுத் தடுமாறி நிலை குலைந்து விழுந்து விடுகிறோமே!

விழுந்தவர்கள் மறுபடி எழுந்திருக்க என்ன வழி?

பெரும்பாலானவர்களுக்கு, பிரச்னை என்றால்தான் ஆண்டவன் என்று ஒருவர் இருப்பதே நினைவுக்கு வரும். "பகவானே! எல்லாம் நல்லபடியாக முடிந்தால், உனக்குத் தேங்காய் உடைக்கிறேன்" என்று பிரார்த்தனை செய்து கொள்ளுவார்கள்.

இன்னும் சிலருக்கோ பிசினஸ் மென்டாலிடி. "எனக்கு இன்ன காரியத்தை நடத்திக் கொடு; நான் இத்தனை தேங்காய் உடைக்கிறேன்; அல்லது இவ்வளவு ரூபாய் காணிக்கை செலுத்துகிறேன்" என்று இறைவனிடமே பிசினஸ் டீல் போடுவார்கள்.

எல்லாம் எதற்காக? தங்கள் பிரச்னையை, இறைவன் தீர்த்து வைத்து விட வேண்டும் என்றுதான்!

ஆனால், யாராவது ஒருவராவது, கோவிலுக்குப் போய், "இறைவா! நான் கேட்டவை மட்டும் இல்லாமல், கேட்காத பலவற்றையும்கூட எனக்குக் கொடுத்திருக்கிறாயே! உனது கருணையே கருணை! போதும்! எனக்கு இதுவரை நீ கொடுத்ததே அதிகம்! இனிமேல் எனக்குக் கொடுக்க வேண்டாம்! எனக்கு பதிலாக வேறு யாருக்காவது கொடு!" என்று இறைவனிடம் சொன்னது உண்டா?

"நான் ஒருவன் இருக்கிறேன். என் தேவைகள் இன்னமும் முழுமையாக நிறைவேறியபாடில்லை. கொஞ்சம் கவனிக்கக் கூடாதா?" என்று நினைவூட்டுவதற்குத்தான் பலர் கோயிலுக்கே போகிறார்கள்.

கடவுளிடம் யாசகம் கேட்பதற்காகவோ, பிசினஸ் பேரம் பேசுவதற்காகவோ கோயிலுக்குப் போகாதீர்கள். கடவுளுக்கு நன்றி

சுனந்தாஜி



• தந்தை பார்த்தசாரதியுடன்...

5

சொல்வதற்காகப் போங்கள்.

உண்மையான பக்தன் யார்? தினசரி கோயிலுக்குச் செல்வதோ, வேளா வேளைக்கு பூஜை செய்வதோ, இதிகாசங்கள், புராணங்களைப் படிப்பதோ, ஏராளமான சுலோகங்களை மனப்பாடம் செய்வதோ, உண்மையான பக்தனுக்குரிய அடையாளம் கிடையாது. உண்மையான பக்தன் எப்படி இருக்க வேண்டும் என்று, பகவத்கீதை முப்பத்து மூன்று குணங்களைப் பட்டியல் போடுகிறது.

அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் முதல் தகுதி, அடுத்தவர் யாரையும் வெறுக்காமல் இருப்பதுதான். ஒருவர் தன் செயல்களால் தனது வெறுப்பை வெளிப்படுத்தினால்தான் அவர் பக்தன் என்கிற தகுதியை இழக்கிறார் என்று இல்லை. 'மனத்தளவில் சிறிது வெறுப்பைக் கொண்டிருந்தாலும், நீ பக்தனில்லை' என்கிறார் பகவான். இப்போது சொல்லுங்கள், நம்மில் எத்தனை பேர் உண்மையான பக்தர் என்று சொல்லிக் கொள்வதற்குத் தகுதி படைத்தவர்கள்?

நம் இந்தியக் கலாசாரத்தில் புது வருடப் பிறப்பன்று பூஜை செய்து, ஒரு பிரசாதம் கொடுப்பார்கள். அதன் சுவையே அலாதியாக இருக்கும். எப்படித் தெரியுமா? இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, காிப்பு என்று அத்தனை விதமான சுவைகளின் கூட்டணிதான் அது. பெரியவர்களுக்கு, அதன் சுவை எப்படி இருக்கும் என்று தெரியுமாதலால், புத்தாண்டு விசேஷப் பிரசாதம் என்று வாங்கிச் சாப்பிடுவார்கள். ஆனால் குழந்தைகள், ஆசையாகத்தான் வாங்கிக் கொள்வார்கள். அப்புறம் பார்க்க வேண்டுமே அவர்கள் முகம் போகும் போக்கை! திருதிருவென்று சில நிமிடங்கள் விழிப்பார்கள். அப்புறம் வாயில் போட்டுக் கொண்ட 'பல்சுவைக் கூட்டணி' கொண்ட பிரசாதத்தைத் துப்பி விடுவார்கள்!

அது போலவே, கடவுள் நமக்கு இன்பங்களையும் துன்பங்களையும் தருவார்; லாபங்களையும் நஷ்டங்களையும் அளிப்பார்; நாம் கஷ்ட நஷ்டங்களைப் பார்த்தவுடன், பிரசாதம் சாப்பிடப் பிடிக்காத குழந்தைகள் மாதிரி அவற்றை நிராகரிக்கிறோம்! நிராகரிப்பதால் கஷ்டம் இல்லாது போய்விடுமா என்ன! கஷ்டமே இல்லாத வாழ்க்கையைக் கற்பனை செய்து பாருங்கள். ஒரே நாளில் அது அலுத்துவிடும்! கஷ்டங்களையும் பிரச்னைகளையும் தெளிவான மனத்துடன் சமமாகவே ஏற்கிறபோது, அவற்றை தீர்க்கவோ ஜெயிக்கவோ வழி உருவாக்கிக் கொள்கிறோம். 'தீராது' என்ற ரக கஷ்டங்களை ஒப்புக்கொண்டு, வாழ்க்கையைத் தொடரும் பக்குவமும் ஏற்படுகிறது. வாழ்வின் தடையோட்டத்தில் வீழ்ந்தாலும் எழ ஒரே வழி இதுதான்! கடவுளை நோவதோ, வேரோடு பிடுங்கிப் பிரார்த்திப்பதோ மட்டும் பயன் தராது!

ஒரு சிறிய பக்தனின் கதை சொல்லட்டுமா? அபு எந்த நேரமும் பிறருக்கு எப்படியாவது உதவுவது என்று சபதம் ஏற்றிருந்தான்.

ஒருநாள் அவன் தனிமையில் இருந்த சமயம் பார்த்து, ஒரு தேவதை அவனுக்கு



''எங்க சீரியல்ல மருமகள் கேரக்டர்ல நடிக்கிறீங்க!

''தேங்க்யூ சார்!''

''அது அப்புறம்! முதல்ல உங்க மாமியார்கிட்டருந்து நீங்க நல்ல மருமகள்தான்னு ஒரு சர்டிஃபிகேட் வாங்கியாந்துருங்க!''

- அம்பை தேவா

"என்னங்க! நம்ம பையன் டீவி சீரியல் எடுக்கப் போறானாம். பணம் கேட்கிறான்"

"சரி, அழுது தொலை!"

- அ.ப. ஜெயபால்



முன்பு தோன்றியது. அந்த தேவதையின் கையில், தங்க நிற ஏடுகளாலான ஒரு புத்தகம் இருந்தது. தனது கையிலிருந்த புத்தகத்தின் பக்கங்களை இலேசாகத் திருப்பிப் பார்த்துக் கொண்டு இருந்தது.

"அது என்ன புத்தகம்?" என்று ஆர்வமுடன் தேவதையைக் கேட்டான் அபு.

"ஓ! இதுவா! 'இறைவனிடம் அன்பு செலுத்தும் மக்கள் யார்?' என்ற பட்டியல் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது" என்றது தேவதை.

"அப்படியா! நான்கூட இறைவன் மீது அன்பு கொண்டவன்தான். என் பெயர் அந்தப் பட்டியலில் இருக்கிறதா என்று பாருங்கள்!" என்றான் அபு.

தேவதை, தேடிப் பார்த்தது.

அபுவின் பெயர் அந்தப் பட்டியலில் இல்லை. அவனுக்கு ரொம்ப ஏமாற்றமாக இருந்தது.

"அந்தப் பட்டியலில் என் பெயரும் இடம் பெற வேண்டும் என்றால், நான் என்னென்ன செய்ய வேண்டும் என்று தயவு செய்து எனக்குச் சொல்லுங்கள்" என்றான் அபு.

தேவதை சொன்னது: "அவசரப்படாதே அபு! புத்தகத்தில் மொத்தம் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. முதல் பகுதியில், கடவுளை நேசிப்பவர்களின் பட்டியல் இருக்கிறது. இரண்டாவது பகுதியில் இன்னொரு பட்டியல் இடம் பெற்றிருக்கிறது. அது என்ன பட்டியல் தெரியுமா? கடவுளின் அன்புக்குப் பாத்திரமானவர்களின் பட்டியல்" என்று சொன்ன தேவதை, இரண்டாவது பட்டியலைப் புரட்டியது.

அட! என்ன ஆச்சரியம்! கடவுளின் அன்புக்குப் பாத்திரமானவர்களின் பட்டியலில், முதல் பெயராக அபுவின் பெயர் தான் இடம் பெற்றிருந்தது!

அபுவால் நம்பவே முடியவில்லை.

நாம் கடவுளை நேசிப்பவர்களாக இருப்பதைவிட, கடவுளால் நேசிக்கப்படுபவராக இருக்க வேண்டும். அதற்கு எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல், வரையறைகள் வகுத்துக் கொள்ளாமல் மனிதர்களிடத்தில் மட்டுமின்றி, எல்லா வகையான உயிர்களிடத்தும் அளவில்லாத அன்பைச் செலுத்த வேண்டும்.

பலனை எதிர்பார்த்துச் செலுத்தும் அன்பு, வியாபாரமாகிவிடும். ஒவ்வொரு நாளும் இருபத்து நான்கு மணி நேரமும், வருடத்தின் 365 நாளும் பலனை எதிர்பார்க்காமல் நாம் அன்பு செலுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.

வருடத்தில் ஒரு சில நாட்களைத் தேர்ந்தெடுத்து, அதற்கு 'அன்னையர் தினம், தந்தையர் தினம், காதலர் தினம், நட்பு தினம்' என்று பெயரிட்டு, நம் அன்பை வெளிப்படுத்துவது மேல் நாடுகளில் வேண்டுமானால், தேவையானதாக இருக்கலாம். நமக்கு இந்தக் கொண்டாட்டங்கள் எல்லாம் சுத்த அபத்தம் என்று சொல்வேன். இது கோடீஸ்வரனை, பிச்சைக்காரன் ஆக்குவது மாதிரி.

நண்பர்களே! தினம் தினம் எல்லாரிடமும் அன்பை வெளிப்படுத்துங்கள். ஒவ்வொரு நாளையும் அன்னையர் தினமாக, தந்தையர் தினமாக, காதலர் தினமாக, நட்பு தினமாக, இன்ன பிற தினங்களாகக் கொண்டாடி சந்தோஷப்படுங்கள்.

(வெற்றி தொடரும்)

"எங்கு பார்த்தாலும் எய்ட்ஸ் நோய் தடுப்புப் பிரசாரம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எய்ட்ஸ் விழிப்புணர்வுத் திட்டங்களுக்குக் கிடைக்கும் விளம்பரமும், நிதி உதவிகளும் எக்கச்சக்கம் என்பதும் இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் எய்ட்ஸைவிட மிக அதிகமாகப் பெண்களைத் தாக்கும் உயிர்க்கொல்லி நோய்களாக ரத்தசோகை, காசநோய், கர்ப்பவாய் புற்றுநோய் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று ஒரு குண்டைத் தூக்கிப் போடுகிறார் மகப்பேறு நிபுணர், டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன்.

கடந்த ஆறு வருடங்களாக தமது 'பெண் சக்தி இயக்கம்' மூலமாகவும், பா.ஜ.க மருத்துவ அணி சார்பாகவும் நூற்றுக் கணக்கான மருத்துவ முகாம்களை கிராமப்புறங்களில் நடத்தியிருக்கிறார் டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன்.



• தமிழிசை சௌந்தர்ராஜன்



"பொது மருத்துவமுகாம்கள் என்றுதான் அழைக்கிறோம். ஆனால் பெண்கள்தான் அதிகமாக வருகிறார்கள். அதுவும், ஆண்களை அழைத்து வரும் பெண்கள் மிக அதிகம். ஆனால் பெண்களை அழைத்து வரும் ஆண்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. தங்கள் வீட்டுப் பெண்களின் ஆரோக்கியத்தில் ஆண்களுக்கு அவ்வளவு அக்கறை!

பெண்களும் நோய்கள் முற்றும்வரை சகித்துக் கொள்கிறார்கள் என்பது கொடுமை!

தடுப்பூசி முகாம்களில் பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகள்தான் அதிகம் வருகின்றன. "பொட்டைக் குழந்தைக்கு ஊசி எல்லாம் போட்டு வளர்க்கணுமாக்கும்?" என்ற அலட்சியம்தான் காரணம்.

"நூறு பெண்களைப் பரிசோதித்தால், அதில் அறுபது சதவிகிதப் பெண்களுக்கு, ரத்தசோகை இருப்பது தெரிய வருகிறது. இத்தனைக்கும் அனீமியா என்பது சுலபமாகத் தவிர்க்கக் கூடிய, விரைவாகக் குணமாகக்கூடிய உடல் கோளாறுதான். ஆனால் நான்பட்ட அனீமியா, இதயம், சிறுநீரகம் போன்ற உறுப்புகளை பாதித்து, உயிருக்கே உலை வைத்துவிடுகிறது'' என்கிற டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன், சில சம்பவங்களையும் நினைவு கூர்ந்தார்.

"ஒருமுறை ஒரு கிராமத்து மருத்துவமுகாமில், சில கர்ப்பிணிப் பெண்களுக்கு, ரொட்டீன் செக் அப் செய்த பிறகு, இரும்புச்சத்து மாத்திரைகளை இலவசமாகக் கொடுத்தோம். மத்தியானம் நான் சாப்பிட்டுவிட்டு, கை கழுவப் போனபோது, ஒரு குப்பைத் தொட்டியில் நிறைய இரும்புச்சத்து மாத்திரைகள் வீசி எறியப்பட்டிருந்ததைக் கண்டேன். வழியில் தென்பட்ட

சில கர்ப்பிணிப் பெண்களைக் கேட்ட போது,

"கறுப்பு மாத்திரை சாப்பிட்டா, குழந்தை கறுப்பா பிறக்கும்னு சொன்னாங்க... அதான் வீசி எறிஞ்சுட்டோம்" என்றார்கள் கூலாக!

"குழந்தையின் நிறத்துக்கும் இந்த சத்து மாத்திரைக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. பிரசவம் நல்லபடியா இருக்கும். தாயும் சேயும் தெம்பா இருப்பீங்க. நிறைய தாய்ப்பால் சுரக்கும்" என்றெல்லாம் எடுத்துச் சொல்லி, மறுபடி மாத்திரைகளைத் தந்து அனுப்பினேன். சமீபத்தில்கூட ஒரு டி.வி நிகழ்ச்சியில் ஒரு சித்த மருத்துவரின் பேட்டியைப் பார்க்க நேர்ந்தது. "இரும்புச் சத்து மாத்திரையைச் சாப்பிட்டால், இடுப்பு எலும்பு இறுகிப் போய் பிரசவம் சிக்கலாயிடும்" என்று சொல்லிக் கொண்டிருந்தார். அதைக் கேட்டு நான் அதிர்ந்தே போனேன். ஏற்கெனவே அறியாமையில் இருக்கும் மக்களிடம், தவறான பிரசாரமும் செய்யப்பட்டால், மக்கள் நலம் எப்படி மேம்பாடு அடையும்?" என்று அந்த நாள்பூராவும் மன உளைச்சலில் தவித்தேன்.

"சென்னையைச் சுற்றியுள்ள பல புறநகர் இடங்களில் மிகச் சமீபத்தில் மருத்துவ முகாம் நடத்தியபோது, நாற்பதைக் கடந்த பல பெண்களுக்கு காசநோயும், செர்விகல் கேன்ஸரும் வருவதற்கான வாய்ப்புக்கான அறிகுறிகளும் அதிகமாக இருப்பதைக் கண்டு பிடித்தோம். ஆரம்ப நிலை என்பதால், தடுப்பதற்கான ஆலோசனைகளை வழங்கினோம்.

"எடை குறையுது. சாப்பிட முடியல. இருமல் குறையல. மூச்சிறைக்குது. நெறி கட்டி" போன்றவை பொதுவான புகார்கள். சோதனை செய்து பார்த்தால், ஜெனிடோ யூரினரி டி.பி!

"டயர்டா இருக்குது. வெள்ளைபடுது. உடலுறவுக்குப் பிறகு ரத்தம் வருது" என்பார்கள். கருப்பை வாய் புற்றுநோய்!"

"சின்ன வயசுலேயே கல்யாணம் பண்ணி, நிறையக் குழந்தைகளைப் பெத்துக்கறீங்க. அதிக உடலுறவு,

"மன உளைச்சலில் தவித்தேன்!"

- டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன்

பிறப்புறுப்புக்களை சுத்தமாகப் பராமரிக்காதது, சுகாதாரமின்மை. இதனால தான் கருப்பை வாய் புற்றுநோய் வருது. சுத்தமா இருங்க... வெள்ளைபட்டா, கவனக்குறைவா இருக்காதீங்க"னு சொல்லிச் சொல்லி தொண்டை வலி வந்துடும்... ஆனால் அதற்கெல்லாம் பலன் இல்லாமல் இல்லை... எங்களுடைய 'ரிவ்யூ கேம்பு'களில் கண்ணீர் பொங்க நன்றி சொல்லும் பெண்கள் அதிகமாகிக் கொண்டே போகிறார்கள்.

"இப்ப மேலுக்கு சுகமா இருக்கு... வாய்ப்புண் ஆறிடுச்சு. வயித்து வலி வர்றதில்ல. நீங்க மறுபடி எப்ப எங்க ஊருக்கு வருவீங்க?" என்று போஸ்ட் கார்டில் யாரையாவது விட்டு எழுதச் சொல்லும் பெண்களும் உண்டு!"

"வறுமையைப் போக்கி, தூய்மையான குடிநீர் தந்து, அடிப்படை சுகாதாரம் கற்றுத் தந்ததால்தான், கிராமத்து மக்களின், குறிப்பாக, ஏழை எளிய பெண்களின் இறப்பு சதவிகிதம் குறையும். இதை அரசியல்வாதியும், மருத்துவருமாகிய நானும் 2005லும் சொல்லிக் கொண்டிருப்பதுதான் வெட்கக்கேடு" என்று பெருமூச்செறிந்தார் டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன்.

- மினி

அருள்வாக்கு




ஹ்ருதயத்தை அடியோடு புறக்கணித்து விட்டு, மூளைக்கு மட்டும் சரக்கு ஏற்றுகிறதே கல்வி முறை என்றாகிவிட்டது.

ஸ்வராஜ்யம் வந்தபின் அந்த முறை மாறவேண்டும் என்று ஆசைப் பட்டோம். மாறவும் மாறிற்று. எப்படி யென்றால், முன்னைவிட மோசமான கல்வி முறையாக! இதில் கல்வியும் இல்லை; முறையும் இல்லை. ஏன், நிஜமாகவே மூளைக்காவது சரக்கு ஏற்றுகிறார்களா என்றால், அதுவும் கேள்வியாகத்தானிருக்கிறது! யோக்ய தாம்சம் என்பதைப் பின்னுக்குத் தள்ளி ஜாதி, பணபலம், மிரட்டல் என்கிறவற்றை வைத்துக் கல்வி, பட்டம் என்றால் வேறே எப்படி இருக்கும்? லஞ்சத்தை லஞ்சம் என்ற அஸல் ரூபத்திலும், டொனேஷன் என்ற பெயரிலும் கொடுத்து அட்மிஷன் பெறுவது, பாஸ் போடப் பண்ணுவது; மிரட்டி உருட்டியுங்கூடப் பாஸ் போடப் பண்ணுவது; இப்படி மாணவன் பண்ணுவதற்கு வாத்தியார்களும் மானேஜ்மெண்டும் இடம் கொடுத்து, ஸலாம் போடுவது; போதாக்குறைக்கு கவர்மென்டே வேறு பண்ணுகிற பக்ஷபாதம் - எந்த வரம்பில் நின்றால் முறை என்கிறதை யோஜித்துப் பார்க்காமல், வோட்டைப் பற்றியே யோஜனை பண்ணிக் கொண்டு, நாளுக்கு நாள் ஜாஸ்தியாக்கிக் கொண்டிருக்கும் ரிஸர்வேஷன் - என்று ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, இந்த தேசத்தில் தர்ம நியாயமான கல்வி முறை நடக்கிறதா; நடக்குமா என்பதே கேள்வியாயிருக்கிறது!

தேசத்தின் வருங்கால ப்ரஜைகளை நல்லவர்களாக்குவதற்கு எந்த ஏற்பாடுமே இல்லாதபோது, அதை சீர்ப்படுத்த வேண்டும் என்ற ப்ரக்ஞையே அரசாங்கத்திற்கு இருக்கிறதாகத் தெரியாததுதான் எல்லாவற்றையும் விட ரொம்பவும் கவலை தருவதாக இருக்கிறது. வருங்காலத்திற்கே விதை முதல் கல்விதானே? அதற்கு priority தந்து ஸரி பண்ண வேண்டுமோ, வேண்டாமோ? அப்படிக்கில்லாமல், இருக்கிறதும் இன்னும் சீர்கெட்டுப் போகப் பண்ணிக் கொண்டிருக்கிறார்களே என்றுதான் ரொம்பக் கவலையாயிருக்கிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



உ

ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத
ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்
ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501.

✆ : 04364 273900

த்ரிதின ஸ்ரீ ருத்ர த்ரிசதீ, ஸ்ரீ லலிதா த்ரிசதீ லட்சார்ச்சனை,
ஸ்ரீ ருத்ராபிஷேகம், ஆவணி கடை ஞாயிறுப் பெருவிழா
மற்றும் திருக்கல்யாண உற்சவம்
8.9.2005 முதல் 11.9.2005 வரை நான்கு நாட்கள்

அன்புடையீர்,

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா குருவருள் இறையருள் துணை கொண்டு பல நற்பணிகளை ஆற்றி வருகிறது. இவற்றின் தொடர்ச்சியாக நிகழும் பார்த்திப வருடம் ஆவணி மாதம் 23-ஆம் தேதி வியாழன் துவங்கி 26-ஆம் தேதி ஞாயிறு முடிய (8.9.2005 - 11.9.2005) **ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வர பெருமான் திருக்கோயிலில் ஆவணி கடை ஞாயிறுப் பெருவிழா நான்கு நாட்கள் நடைபெற இருக்கிறது.** இதனை முன்னிட்டு உலக நலன் கருதி பல விசேஷ ஹோமங்கள், த்ரிதின ஸ்ரீ ருத்ர த்ரிசதீ, ஸ்ரீ லலிதா த்ரிசதீ லக்ஷார்ச்சனை, ஸ்ரீ ருத்ராபிஷேகம், கடை ஞாயிறு தீர்த்தவாரி, திருக்கல்யாண உற்சவம் முதலியன நடைபெறுகின்றன. அத்துடன் தினமும் கோ பூஜை, ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், ஸ்ரீ நவக்ரஹ ஹோமம் மற்றும் மஹாபிஷேகமும் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிகள் தினம் காலை 7 மணிக்கு துவங்கி இரவு 8 மணி வரை நடைபெறும். ஞாயிறு அன்று திருக்குளத்தில் காலை 7 மணிக்கு தீர்த்தவாரி, மாலை 4 மணிக்கு திருக்கல்யாண உற்சவம். இரவு 8 மணிக்கு ஸ்வாமி, அம்பாள் வீதி உலா. 4 தினங்களும் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை சிறப்பு இன்னிசை / சொற்பொழிவு நிகழ்ச்சிகள் உண்டு. நான்கு நாட்களிலும் நடைபெறும் சிறப்பு வழிபாடுகளில் இறையன்பர்கள் அனைவரும் வழக்கம்போல் ஆர்வத்துடன் பங்கு கொண்டு பேரருள் பெற வேண்டுகிறோம்.

என்றும் இறைபணியில்

Dr. V. ***கிருஷ்ணமூர்த்தி***
பரம்பரை அறங்காவலர்

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா (Regd).
32/18, டபீர் புதுத்தெரு, கும்பகோணம் - 612 001.
போன்: 0435 / 2423297 மற்றும் **கிராமவாசிகள்**

ஆவணி கடை ஞாயிறு தீர்த்தவாரிக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக கும்பகோணம், காசிராமன் தெரு, வேதவிநாயகர் கோவிலிலிருந்து வேன்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஞாயிறு (11.09.2005) விடியற்காலை மணி 5.00 - 5.30க்குள் புறப்படுகின்றன. புனித நீராட விரும்புபவர்கள் கீழ்கண்ட முகவரிகளில் ஏதேனும் ஒன்றில் முன்னதாகவே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நன்கொடை அனுப்ப விரும்பும் அன்பர்களும் கீழ்கண்ட முகவரியாளர்களையே தொடர்பு கொள்ளலாம்.

சிறப்பு வழிபாட்டு விவரங்களும் அவற்றுக்கான கட்டணங்களும்:

1) சிறப்பு சூர்ணாபிஷேகம் (மஞ்சள்பொடி) ரூ.100/-
2) ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், ஸ்ரீ நவக்ரஹ ஹோமம் முதலியவற்றிற்கு ரூ. 200/-
3) சிறப்பு அபிஷேகம் ரூ. 200/-
4) லட்சார்ச்சனை ரூ.200/-
5) வஸ்த்ரதானம் (ஒரு ரித்விக்கிற்கு) (20) ரூ. 400/-
6) அன்னதானம் (ஒரு வேளை) ரூ.500/-
7) புஷ்ப கைங்கர்யம் (ஒரு வேளை) ரூ:500/-
8) தம்பதி பூஜை (ஒரு தம்பதிக்கு) ரூ. 1000/-
9) ஸ்ரீருத்ர ஜப, ஹோம ஸங்கல்பம் ரூ.1000/-
10) ஸ்வாமி, அம்பாளுக்கு வேஷ்டி(9x5) புடவை (9கஜம்) ரூ.1000/-
11) ஸந்தர்ப்பனை (ஒரு நாள்) ரூ.2500/-
12) திருக்கல்யாண உற்சவம் ரூ.2500/-

குறிப்பு: மேலே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் அவற்றுக்கான தொகையை **"ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா"** என்ற பெயருக்கு மணியார்டர் மூலமோ அல்லது வரைவுக் காசோலை (D.D) மூலமோ கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதேனும் ஒன்றிற்கு அனுப்பக் கோருகிறோம்.

G. குஞ்சிதபாதம், FCA., G. நடேசன் & கோ. டபீர் மேலத்தெரு, கும்பகோணம்–612 001 போன்: 0435 2420047, **G. கண்ணன்,** D/127-A, ராஜமன்னார் சாலை, கே.கே.நகர், சென்னை –78. போன்: 044-24836495 **V.L. நாராயண சாஸ்திரிகள்,** 25/1 சுப்பாரெட்டித் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. போன்: 044-24897125 **R. வைத்தியநாதன்,** மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பிளாட் நெ. 4, கதவு எண் 12, 29வது தெரு, தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை - 600 061. போன்: 044 - 22333361 **K.R. முரளி, BBA ACA,** Rama Gowri Financial Services (P) Ltd. D.V. Road, Coimbatore, Cell: 9843265404 **S. கணேசன்,** 10/108, 2nd Main Road, West End, Vijaya Nagar, Velacherry, Chennai - 600 042. Ph: 044-55875431

உள்ளங்கையில் உலகம்!

டானிக் தொடர்

மனசைத் தொட்ட கேள்வி!

அனந்த் என் நண்பர். சமூகம் சார்ந்த விஷயங்களில் சற்றே உணர்ச்சி வசப்படுபவர். சுனாமி தாக்கியபோது, நிறையப் பொருள்களை வாங்கி எடுத்துக் கொண்டு போனார். நான் அங்கே கிளம்புவதற்கு முன்னால் அவருடைய அனுபவங்களைக் கேட்க விரும்பினேன்.

''நிவாரணப் பொருள்களை வழங்குவதில் எக்கச்சக்க குழப்பம். அங்கே ஏராளமான பொருள்கள் வந்து குவிந்திருக்கின்றன. வாங்கிக் கொண்டவர்களே திரும்பத் திரும்ப வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தொண்டு நிறுவனங்கள் எல்லாம் பொருள்களை கலெக்டர் அலுவலகத்தில் கொடுத்துவிட வேண்டும் என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. அதை அவர்கள் சரிசமமாக, பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுத்து விடுவார்களாம்!''

''நீ கொண்டு போனதை என்ன செய்தாய்?''

''நான் முதலில் யாரைப் பார்த்தேனோ, அவர்களுக்குக் கொடுத்தேன்!''


இப்போதுதான் அரசின் முடிவு சரியே என்று புரிந்தது. எனக்குத் தெரிந்து நிறையப் பேர் நல்ல எண்ணத்துடன் அங்கே போனாலும், யார் கேட்டார்களோ, அவர்களுக்குப் பொருள்களைக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார்கள். கூட்டத்தில் பிச்சைக்காரர்கள், பேராசைக்காரர்கள், சம்பந்தமே இல்லாதவர்கள் எல்லாம் இருப்பார்கள். அவர்களை வகைப்படுத்த முடியாது. நாங்கள் எங்கள் லாரிகளுடன் போனவுடன், செய்த முதல் காரியம், அரசு அலுவலகத்தைத் தொடர்பு கொண்டதுதான். எந்தக் கிராமங்கள் எல்லாம் விடுபட்டுப் போய்விட்டன, எதுவுமே கிடைக்காமல் போய்விட்டன என்று விசாரித்தேன்.

அரசு அதிகாரிக்குக் குழப்பமாகிவிட்டது. நான் விளக்கிச் சொல்ல ஆரம்பித்தேன்.

ஒரு நிமிடம் அவர் மௌனமாக இருந்தார். பிறகு,

சுதா மூர்த்தி

6



"என்ன ஃபவுண்டேஷன்?" என்று கேட்டார்.

"இன்ஃபோஸிஸ் ஃபவுண்டேஷன், பெங்களூர்."

அவர் புன்னகையோடு, "ஒரு பிரச்னையும் இல்லை. வேறு எந்த ஆதாயமும் தேடாத சுத்தமான தொண்டு நிறுவனம் உங்களுடையது. நீங்கள் நேராகவே பொருள்களை வழங்கலாம்."

நாங்கள் எல்லாவற்றையும் விநியோகம் செய்துவிட்டுத் திரும்பினோம்.

இதை நான் அனந்திடம் சொன்னபோது, அவருக்கு வியப்பு. "ஓ, நீங்கள் உங்கள் பெயர் காரணமாக அப்படி எளிதாகச் செய்துவிட முடிந்தது!"

அனந்த் சொன்னதை ஏற்கிறேன். என் சமூக நிலை காரணமாக, எத்தனையோ வேலைகள் எனக்குச் சிரமம் இல்லாமல் நடக்கின்றன. அரசு அதிகாரிகள் எங்களிடம் எதையும் எதிர்பார்க்காமல், எங்களால் சிறப்பாகப் பணியாற்ற முடிகிறது. சுனாமி நிவாரணப் பணிகளுக்காகவோ, வேறு நிவாரணப் பணிகளுக்காகவோ நான் ரயிலில் பயணம் செய்யும்போது, ரயில்வே நிர்வாகத்தினர் உற்சாகத்தோடு உதவியிருக்கிறார்கள்.

சமீபத்தில் எனக்குத் தெரிந்த பையனுக்குத் திருமணம். பையன் ஆனந்த். நான் திருமணத்துக்குக் கட்டாயம் வர வேண்டுமென்றும், விருந்தைச் சாப்பிட்டு விட்டே போக வேண்டும் என்றும் வற்புறுத்தி அழைத்தான். எனக்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஆசைதான். ஆனால் வேலைப் பளு காரணமாக அது முடியவில்லை.

திருமணம் தடபுடலாக இருந்தது. வகை வகையான உணவுகள்.

ஏதாவது சாப்பிடலாம் என்று நினைத்தேன். நான் ஆனந்தையும் அவன் மனைவியையும் வாழ்த்த சென்றபோது, அவன் தன் பெற்றோர், மாமனார், மாமியார் எல்லோரையும் அழைத்து என்னுடன் நின்றுகொண்டு, புகைப்படக்காரரைக் கூப்பிட்டு, படம் எடுக்கச் சொன்னான்.

இது முடிந்ததும், அவன் பெற்றோரும், மாமனார் - மாமியாரும் என் கையைக் குலுக்கி, "ஆகா, நீங்கள் வந்திருப்பது எங்களுக்குப் பெரிய கவுரவம். வந்ததற்கு மிகுந்த நன்றி!" என்றார்கள்.

என் கூடவே வந்த ஒருவர், "இந்த வழியாக, அம்மா!" என்று அழைத்துச் சென்றார். அவர் விருந்து மண்டபத்துக்குத் தான் என்னை அழைத்துக் கொண்டு போகிறாரோ என்று நினைத்தேன். ஆனால் அது நுழைவு வாயில்!

வேறு வழியில்லாமல் நான் வெளியே வர வேண்டியதாயிற்று!

அதற்குப் பிறகு, என் இன்னொரு சிநேகிதியைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது. "சுதா, உன் தலைமுடி என்ன இத்தனை வெளுத்துவிட்டது? ஆனந்தின் திருமணத்தின்போது இளமையாக இருந்தாயே?" என்று கேட்டாள்.

"உனக்கு எப்படித் தெரியும்?"

"ஆனந்தின் மனைவி என் சிநேகிதி. அவள் திருமணத்துக்கு என்னால் போக முடியவில்லை. அதனால் அவள் வீட்டுக்குப் போனேன். அங்கே வரவேற்பின் போது உன்னுடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தைப் பெரிதுபண்ணி ஹாலில் ஷோ கேஸில் வைத்திருந்தாள்!"



"சுக்குக்கு மிஞ்சின மருந்து கிடையாதுன்னு பழமொழியே இருக்காமே டாக்டர்?"

"ஆமாம் இருக்கு... இனிமே நானும் பிரிஸ்க்ரிப்ஷனுக்குப் பதிலா பழமொழியை எழுதிக் கொடுத்துடவா?"

- பம்மல் நாகராஜன்

"வாக்கப் ரூம்ல கபாலி மேக்கப் போட்டுக்கிட்டிருக்கானே... எதுக்கு?"

"வீடியோ கான்ஃபரன்ஸ் மூலம் விசாரணைனு சொல்லித் தொலைச்சுட்டேன்!"

- அம்பைதேவா



நான் புன்னகை செய்துகொண்டேன்.

ஒருநாள் என் செயலர் என்னிடம், "உங்களுடன் படித்த டாக்டர் மந்தார் உங்களிடம் பேச வேண்டும் என்றார். அவரை நினைவு இருக்கிறதா?" என்று கேட்டான்.

எந்த மந்தார்? எனக்கு ஒரு மந்தாரைத் தெரியும். ஆனால் அவர் டாக்டர் மந்தார் அல்லவே... மந்தார் என்பது வழக்கமாகக் கேட்கும் பெயரும் அல்ல...

போனை எடுத்துக் கேட்டபோது, "நான்தான் ஷிதர். டாக்டர் மந்தாரின் பக்கத்து வீட்டுக்காரர். மந்தார் உங்கள் நெருங்கிய நண்பர்... உங்களுடன் படித்தவர்..." என்றார்.

"எனக்கு எந்த மந்தாரையும் தெரியாது. எப்போது என்னுடன் அவர் படித்தார்?" என்றேன் அதிர்ச்சியோடு.

"அவர் மும்பையில் இருக்கிறார்."

"நான் மும்பையில் படிக்கவுமில்லை. எந்த மந்தாரையும் எனக்குத் தெரியவும் தெரியாது!"

"நீங்கள் பிரபலமானவர். நீங்கள் நிறையப் பேரைச் சந்திக்கிறீர்கள். அதனால் நினைவு இருக்க வாய்ப்பில்லை. ஆனால் மந்தார் உங்களை நன்றாகத் தெரியும் என்கிறார். அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் கேசவ்வையும் எனக்குத் தெரியும்"

அப்போதும் எனக்கு இரண்டு பேரையுமே இணைத்துப் பார்க்கத் தோன்றவில்லை. அவர் அழைப்பை ஏற்க முடியாமல் போனதற்கு எனக்கு நேரம் இல்லாமல் போனதுதான் காரணம். ஆனாலும் இந்த மந்தார் என் தலைக்குள் குடைந்துகொண்டே இருந்தார்.

வீட்டுக்கு வந்து என் தாயாரிடம் கேட்டேன். என்னைவிட அவருக்கு ஞாபக சக்தி அதிகம்.

"யார் அம்மா இந்த டாக்டர் மந்தார், கேசவ் எல்லாம்? எனக்கு இவர்களை எப்படித் தெரியும்?"

அவளும் யோசித்துவிட்டு, "யாருமில்லை" என்றதும் 'சரி, நமக்குத் தெரிந்தவர்களல்ல' என்று விட்டுவிட்டேன்.

ஆனால் அடுத்த நாள் அவள் என்னை அழைத்து, "உனக்கு என் பழைய சிநேகிதி அம்பாவை நினைவு இருக்கிறதா - 1968ல் என்னை மும்பையில் வந்து பார்த்தாளே? நீ அப்போது இஞ்சினீயரிங்கில் முதல் ஆண்டு படித்துக் கொண்டிருந்தாய். அப்போது அவள் மருமான் மந்தாருடன் வந்தாள். அவள் பையன் பெயர்தான் கேசவ். அப்போது மந்தாருக்கு பன்னிரண்டு வயது இருக்கும்."

மந்தாரின் தொடர்பு பற்றியும், என் அம்மாவின் ஞாபகசக்தி பற்றியும் எனக்கு ஒரே வியப்பு!

இதை நான் என் செயலரிடம் தெரிவித்தபோது, அவன் ஒரு கேள்வி கேட்டான். மனத்தைத் தொட்ட கேள்வி அது.

"அம்மா, உங்களை ஒரு சாதாரண மனுஷியாகப் பிறர் நினைப்பதில்லை என்பதில், உங்களுக்கு வருத்தம்தான் என்று தெரிகிறது. முதலில் சாதாரண மனுஷி. அப்புறம்தான் பிரபலங்களில் ஒருத்தி. சரிதானா?"

"ஒரு கூரிய கத்தியால் நல்லதும் உண்டு, கெட்டதும் உண்டு. இல்லையா?" என்றேன் நான் பதிலுக்கு.

(பேசுவோம்)

நேற்றுவரை என்.சி.சி. மாணவியாக சல்யூட் அடித்துக் கொண்டிருந்த ப்ரியதர்ஷிணியைப் பார்த்து, இன்று அனைவரும் ஒரு ராயல் சல்யூட் அடித்துச் செல்கின்றனர்.

சென்னை கிறிஸ்துவக் கல்லூரி மாணவியான இவர், இந்தியாவிலேயே சிறந்த பன்னிரண்டு என்.சி.சி. மாணவிகளில் ஒருவராக, தேர்ந்தெடுக் கப்பட்டு, லண்டன் சென்று திரும்பியிருக்கிறார். சாதனை அதுவல்ல. இதுபோல பன்னிரண்டு நாடுகளிலிருந்தும் வந்து குவிந்த மாணவிகளோடு போட்டியிட்டு, 42 பிரிவுகளில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார் இந்த தங்கத் தமிழ்ப் பெண்.

பி.ஏ.பொலிடிக்கல் சயின்ஸ் படிக்கும் ப்ரிய தர்ஷிணிக்கு, பரதநாட்டியம் முதல் பாட்டு, அம்பு எய்தல் (Archery) மலையேறுவது வரைக்கும் ஆய கலைகளும் அத்துப்படி.

"இந்தியாவிலேயே என்.சி.சி. கப்பற்படை பிரிவுல வெளிநாட்டுக்கு முதன்முதலா தேர்வானது நான்தான். லண்டன்ல இந்தியர்களோட வாழ்க்கை முறையையும், ஆங்கில அறிவையும் கண்டு வியந்து போனாங்க. ஒரு பக்கம் ட்ரில் வாங்குற போட்டி களும் நடந்தன. இன்னொரு பக்கம் கல்ச்சரல்ஸ் போட்டிகளும் வைச்சாங்க. அத்தனை வெள்ளைக் காரங்க முன்னாடியும் பாரதியாரோட 'நின்னைச் சரணடைந்தேன்' பாடினேன். அதோட ட்யூன் லயும், என் குரல்லேயும் மயங்கி முதல் பரிசு கொடுத்துட்டாங்க" என்று குதூகலிக்கிறார்.

இவரது தாத்தா, பெரியப்பா, அப்பா என தலை முறை இடைவெளி இல்லாமல் காவல்துறையில் பணிபுரிவதால், ப்ரியதர்ஷிணிக்கும் காக்கிச் சட்டை மீது ஆர்வம் அதிகம்.

"பொலிடிக்கல் சயின்ஸ் மாணவிக்கு அரசியல் ஆர்வம் உண்டா?"

"காலேஜ்ல கப்பலோட்டிய தமிழன் பற்றி யெல்லாம் படிச்சா, உடம்பு புல்லரிக்குது. இதே பற்றோட இன்றைய அரசியல்வாதிகள் இருந் திருந்தா, இந்தியா எப்பவோ சைனா மாதிரி உயர்ந்திருக்கும்...ம்... நான் ஐ.பி.எஸ். ஆனபிறகு இருக்கு எல்லோருக்கும்" என்று தீப்பிடிக்கப் பேசுகிறார்.

ஏது, இவர் ஐ.பி.எஸ் ஆகிவிட்டால் ஒரு ரகளையே நடக்கும் போல!

- சநகன்

படங்கள்: ஸ்ரீஹரி




இல்லை!

பிளேர், புஷ், புல்டோஸர்!

காலையில் கண் விழித்ததும் பல் தேய்த்து முடித்த கையோடு, பிரிட்டிஷ்காரர்கள் செய்யும் முதல் காரியம் டோனி பிளேரை கன்னா பின்னாவென்று திட்டுவதுதான். இதுநாள் வரை சந்தேகப்படுபவர்களையெல்லாம் கண்டவுடன் சுட்டுக் கொண்டிருந்த பிரிட்டிஷ் பாதுகாப்புப் படையினர், இப்பொழுதெல்லாம் சுட்டுவிட்டு, நேரம் கிடைத்தால்தான் என்ன ஏது என்றே கண்டு கொள்கிறார்கள். விழுந்து கிடப்பவரின் முகத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு, 'அச்சச்சோ, இவரையா சுட்டோம். ஸாரி, ராங் நம்பர்' என்று துப்பாக்கியைத் தூக்கி தோளில் போட்டுக் கொண்டு போய்விடுகிறார்கள். தாடி, தலைப்பாகை இரண்டும் ஒரே நபரிடம் ஒரே சமயத்தில் இருந்தால், அவரை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்து விட்டுத்தான் வீட்டுக்கோ அல்லது வேறு உலகுக்கோ அனுப்பி வைக்கிறார்கள்.

சரி, டோனி பிளேர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவசர அவசரமாக பத்திரிக்கையாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி, தீவிரவாதத்துக்கு எதிரான 12 யோசனைகளை வெளியிட்டார். (அதைப் பார்த்து குட்டிக் குழந்தைகள் கூட விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கின்றன.) பிறகு 'ஆஸ் ஐயாம் சஃபரிங் ஃப்ரம் ஃபீவர்' என்று லெட்டர் எழுதி வைத்து விட்டு விடுமுறைக்குப் போய்விட்டார். எங்கே என்று அபசகுனமாகக் கேட்க வேண்டாம். பாதுகாப்பு கருதி யாருக்கும் அதை தெரியப்படுத்தவில்லை. பின்னால் சுயசரிதை எழுதும்பொழுது சொல்வார்.


இவராவது பரவாயில்லை. இவருடைய கவுன்டர்பார்ட் புஷ்ஷின் நிலைமை இன்னமும் மோசம். காலையில் கண் விழித்ததும் பல் கூடத் தேய்க்காமல் புஷ்ஷைத் திட்டிக் கொண்டிருக்கிறார்கள் அமெரிக்கர்கள். வொயிட் ஹவுஸ், மீடியா, பென்டகன், ராணுவம், பள்ளிக்கூடம், பீட்ஸா கார்னர் என்று சகல தரப்புகளிலிருந்தும் பேய் போல எதிர்ப்பு கிளம்பிக் கொண்டிருக்கிறது. டக் டக் கென்று புது பூட்ஸ் போட்டுக் கொண்டு ஈராக் சென்ற அமெரிக்கப் படையினர் திரும்புவதாகத் தெரியவில்லை. அவர்களது உயிர் சேதத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஈராக்குக்கும் 'சுதந்தரம்' கிடைத்தது போல் தெரியவில்லை. ஆனால் புஷ் மட்டும் 'எப்படியும் ஜெயித்தே தீருவோம்' என்று இரண்டு விரல்களை ஆட்டி டீ.விக்கு போஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அமெரிக்காவையும் ஹாம்பர்கரையும் இரண்டு கண்களாக பாவிக்கும் போர் ஆதரவாளர்கள் கூட, புஷ் செய்வதைப் பார்த்து மண்டையை கீறிக் கொண்டு குழம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

எஞ்சியிருப்பவர் திருவாளர் புல்டோஸர்தான். சென்ற வாரம் ராட்சச புல்டோஸர்களை காஸாவில் கொண்டு வந்து இறக்கி, 8000 இஸ்ரேலியர்களின் வீடுகளை இடித்துத் தள்ளியிருக்கிறது இஸ்ரேல் அரசாங்கம். 'சட்ட விரோதமாக குடியிருப்பவர்கள் யூதர்களாகவே இருந்தாலும், அவர்களை வெளியேற்றிவிட்டோம் பார்த்தீர்களா' என்று கொக்கரிக்கிறார் ஏரியல் ஷரோன். புல்டோஸருக்கும் இவருக்கும் உள்ள ஒரே வித்தியாசம், புல்டோஸருக்கு கோட், சூட் போட்டுக் கொள்ளத் தெரியாது என்பதுதான்.

காஸாவிலிருந்து அகற்றப்பட்டவர்களில் சில இந்தியக் குடும்பங்களும் அடக்கம். பெரிய ஹால், டபுள் பெட் ரூம், டீ.வி ரிமோட் எல்லாம் தருகிறோம் என்று சொல்லி புல்டோஸரை அவர்களது வீட்டுக்கு உள்ளே இறக்கி விட்டு, இப்பொழுது ஒரு குட்டி குருவிக் கூண்டைக்



உலகம் இவ்வளவுதான்!



கொடுத்திருக்கிறார்களாம்.

புல்டோஸரும் ஷரோனும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். 'மேற்குக் கரையை மேலும் விரிவுபடுத்துவோம்' என்று மைக் செட் போட்டு முழங்கிக் கொண்டிருக்கிறார் ஷரோன். காஸாவை பிரெட் போல துண்டாக்கி, எப்படியாவது தம் சட்டைப் பையில் போட்டுக் கொள்ள வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறார்.

'சட்ட விரோதக் குடியேற்றங்களின் தந்தை' என்ற பட்டத்தை ஷரோனுக்கு யாராவது வழங்கி கௌரவிக்கலாம். கூப்பிட்டால் கட்டாயம் வருவார். அடுத்த வாரம் மெரீனா கடற்கரை கூட சும்மாதான் இருக்கப் போகிறது.

- மருதன்

"கோழி, உங்க அம்மா இறந்துட்டாங்கன்னு போன் வந்தது. உடனே கிளம்பு. எல்லாக் காரியமும் முடிஞ்சப்புறம் வா. இதுல இரண்டாயிரம் பண மிருக்கு. செலவுக்கு வைச்சுக்க" என்று மேலாளர் சொன்னதும் அதிர்ந்துபோய், அங்கிருந்த நாற்காலியில் விழுந்தான் அவன்.

சில நிமிடங்களிலேயே அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு, மிதிவண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான். பஞ்சாலைக்கும் வீட்டுக்கும் இடைப்பட்ட இரண்டு கிலோ மீட்டர் தூரப் பயணத்தில் மிதிவண்டியை அவன் அழுத்த, துக்கம் அவனை அழுத்தியது.

அம்மாவை நினைக்க, நினைக்க அழுகையும், கண்ணீரும் பொங்கின.

வீடிருக்கும் தெரு முனையில் எதிர்ப்பட்ட அவனது நண்பன் பாலு, "கோழி, நான்தான்டா போன் செஞ்சேன். திடீர்னு நெஞ்சு வலிக்குதுன்னு சொல்லி மயக்கமாயிட்டாங்க. கொஞ்ச நேரத்துல மூச்சு நின்னுடுச்சு. மனசைத் தேத்திக்குடா, கோழி. நான் போயி பாடை கட்டுறவங்களுக்குச் சொல்லிட்டு வர்றேன்" என்று அவசர அவசரமாக நடையைக் கட்டினான்.


வீட்டின் முகப்பில் சொந்தக்காரர்களும், தெருக்காரர்களும் கூடி நின்று பேசிக் கொண்டிருந்தனர். வீட்டுக்குள்ளிருந்து வந்த ஒப்பாரிச் சத்தம் அவன் வயிற்றைக் கலக்கியது. மிதிவண்டியை நிறுத்திவிட்டு வந்த அவனைக் கண்டதும், வாசற்படியில் அமர்ந்திருந்த பக்கத்து வீட்டு கண்ணம்மாக் கிழவி பெருங்குரலெடுத்தாள்.

"கோழி, உனக்கு ஒரு கண்ணாலம் செஞ்சிப் பார்த்துடணும்னு ஆசைப் பட்டாளே! நேத்துகூட எங்கிட்ட சொல்லிக்கிட்டு இருந்தாளே. இப்படி திடுதிப்னு கண்ண மூடிட்டாளே, மகராசி" அரற்றினாள் அவள்.

இழவு வீட்டுக்கே உரிய அடையாளங்களோடு மாறியிருந்த வீட்டின் நடுவில் கிடத்தப்பட்டிருந்தது அம்மாவின் பிணம்.

பிணத்தைச் சுற்றி அழுது கொண்டிருந்த பெண்கள் ஒரு கணம் ஒப்பாரிச் சத்தத்தைக் குறைத்துக் கொண்டு அவனையே பார்த்தனர்.

தன் தாயின் பாதங்களைத் தொட்டு வணங்கி, கண்களில் ஒத்திக் கொண்டு, ஒரு பக்கமாய் ஒதுங்கி நின்று கொண்டான் அவன். அந்த ஒப்பாரிப் பெண்கள் அவனது அழுகையை எதிர்பார்த்தார்களோ, என்னவோ! அவனது செய்கையால் ஏமாந்தபடி, ஒப்பாரிச் சத்தத்தை மேலும் கூட்டினர்.



ஆறு மாதக் கைக்குழந்தையாக இருந்தபோதே, அவனுடைய அப்பா இறந்து விட, எத்தனையோ இன்னல்களுக்கு நடுவில் அவனை வளர்த்து ஆளாக்கியது, அவனது தாய்தான். தன் தாய் தன்னை வளர்க்க எவ்வளவு துன்பங்களை அனுபவித்திருப்பாள் என்பதை அறியாதவனில்லை அவன்.

அந்தத் தாயின் இழப்பு, அவனை விட வேறு எவருக்கும் அதிக வலியை ஏற்படுத்திவிடப் போவதேயில்லை.

இருப்பின் இறப்பு



நாணற்காடன்

"கோழி, முக்கிய மான சொந்தக்காரங் களுக்கு தகவல் கொடுத்தாச்சு. பக்கத்து ஊர்ல இருக்கற உங்க தாய்மாமனுக்கும் ஆள் அனுப்பி யாச்சு. கொஞ்ச நேரத்துல அவரு வந்துடுவாரு. அவரு வந்ததும் சடங்கு வேலையெல்லாம் ஆரம்பிச்சுடலாம்" என்று அவனிடம் சொல்லிவிட்டு நகர்ந்தார் உறவுக்காரர் ஒருவர்.

சில நிமிடங்களிலேயே தலையிலும், மார்பிலும் அறைந்து கொண்டே வந்து சேர்ந்த அவனது தாய்மாமன், நேராக பிணத்தின் தலைமாட்டில் போய் உட்கார்ந்து கொண்டு அழுது ஆர்ப்பரித்தார்.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2005ல் பிரசுரத்துக்குத் தேர்வான கதை



"பாவி மகளே! கோழிய தனியா வுட்டுட்டுப் போயிட்டியே! எம் மவள மருமகளாக்கிப் பார்க்கணும்னு ஆசப் பட்டியே! அதுக்குள்ள இப்படி கண்ண மூடிட்டியே!" என்றபடியெல்லாம் அவர் கதறியது, ஒப்பாரிப் பெண்களின் சத்தத்தை ஓரேயடியாய் அமுக்கிவிட்டது.

கண்ணீர் தீர்ந்து போனதும் எழுந்து வந்த அவர், "கோழி, இந்தா, இதுல மூவாயிரம் ரூவா இருக்கு. இழவு காரியத்துக்கு வச்சிக்க. வர்ற வைகாசியிலயே உனக்கும், எம் மவளுக்கும் கல்யாணம் செஞ்சி வச்சிடறேன். உனக்கு யாரும் இல்லைனு நினைச்சுடாதடா கோழி. நான் இருக்கேன்" என்று தாழ்ந்த குரலில் அவனிடம் சொல்லிவிட்டு, சடங்குக் காரியங்களில் மும்முரமாகிப்போனார்.

எல்லாரிடமும் அனுசரணையாகவும், அன்பாகப் பழகும் தன்மையாலும் அவனது தாய் நிறைய உள்ளங்களில் இடம் பிடித்திருந்தாள். சொந்தங்களும் சரி, தெருக்காரர்களும் சரி, அவளை எந்த விஷயத்திலும் ஒதுக்கி வைத்ததேயில்லை.

தாயாக மட்டுமின்றி, ஒரு தந்தையாகவும் இருந்துதான் அவனை வளர்த்தாள். அவள் அவனுக்கு அன்பு மட்டுமின்றி, அறிவும் புகட்டியிருக்கிறாள். ஒழுக்கத்தையும், நம்பிக்கையையும் கற்றுத் தந்திருக்கிறாள். அந்தத் தாயின் இழப்பு கண்ணீராலும், அழுகையாலும் தீர்ந்து விடக் கூடிய அளவுக்குச் சாதாரணமானதில்லை.

"ரஞ்சித்து, சாவுங்கறது எல்லாருக்கும் வர்றதுதானே! செத்துட்டாங்களேன்னு அழுவறதைவிட, செத்தவங்க எப்படி வாழ்ந்தாங்கன்னு நினைச்சுப் பார்க்கணும். வாழ்ந்த வாழ்க்கை நல்லா இருந்தாத்தானே அந்த சாவுக்கே ஒரு மரியாதை" என்று இறப்பைப் பற்றிக் கூட சொல்லித்தந்தவள் அந்தத் தாய்.

தன் தாயைப் பற்றிய நினைவுகளில் மூழ்கியிருந்தவனின் தோளில் ஆறுதலாய்ப் படர்ந்தன மாரிமுத்து முதலாளியின் கைகள். அவர்தான் ரஞ்சித் என்ற அவன் பெயரை, கோழி என மாற்றி வைத்த பெருமைக்குரியவர்.

"கோழி, நானிருக்கேன். எதுக்கும் கவலைப்படாதே" என்று அவர் சொன்னதும் அவனுக்கு அழவேண்டும் போல் தோன்றியது.

மாரிமுத்து முதலாளி மேல், அவனுக்கு எப்போதுமே நல்ல மரியாதை. அவருக்கும் அவன் மேல் ஒரு விதப் பாசம் இழையோடியே வருகிறது.

பள்ளிக்குப் போகாமல் அடம் பிடித்தவனை மாரிமுத்துவின் மிதிவண்டிக் கடையில்தான் கொண்டு வந்து சேர்த்தாள் அவனது தாய். சில ஆண்டுகளுக்குப்பின் அவனை பஞ்சாலையில் வேலைக்குச் சேர்த்துவிட்டதுகூட மாரிமுத்து முதலாளிதான்.

அவரது மிதிவண்டிக் கடையில் வேலைக்குச் சேர்ந்த புதுசில், ஒரு நாள் வெளியே சென்றிருந்த மாரிமுத்து, கடைக்குத் திரும்ப இரவு பத்து மணிக்கும் மேலாகிவிட்டது. கடை வாசலிலேயே உட்கார்ந்தபடி தூங்கிக் கொண்டிருந்த

'காக்காய் வலிப்புக்கு பயன்படுத்தப்படும் ஒரு வித மருந்துக்கு எச்.ஐ.வி கிருமிகளை ஒழித்துக் கட்டும் திறன் இருக்கிறது' என்று டெக்ஸாஸ் பல்கலைக்கழகம் தனது ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளது.



வனைப் பார்த்து, "டேய்! ஏண்டா இப்படிக் கோழி மாதிரி உட்கார்ந்து கிட்டே தூங்குற. சரி, சரி... வீட்டுக்குப் போயிட்டு காலையில வந்து சேரு" என்று சொல்லி அனுப்பினார்.

அடுத்த நாள் காலையில் வந்தவனை, "வாடா, கோழிப்பயலே! போயி, இரண்டு டீ வாங்கியா, போ" என்று சொல்லி யனுப்ப, அப்போதிருந்து ரஞ்சித் என்ற பெயர் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து, கோழி என்றே நிலைத்துவிட்டது.

சடங்குகளெல்லாம் முடிந்து பாடை புறப்பட்டது. பாடைக்குப் பின்னால் வந்த கூட்டத்தைப் பார்த்து அவனுக்குப் பெரு மிதமாயிருந்தது. தனக்காக நிறைய மனிதர் களையும், அவர்களது அன்பையும் சேர்த்து வைத்துவிட்டுத்தான் தன் தாய் செத்திருக்கிறாள் என்பதே, அவளது வாழ்வு தரும் செய்தியாக அவனுக்குப் பட்டது.

இடுகாட்டில் புதைக்கும்போதும், கடைசியாய் முகம் பார்த்தபோதும் கூட அழவேண்டுமென்று தோன்றவில்லை அவனுக்கு.

வீடு திரும்பியபோது ஒரு சில முக்கிய மான சொந்தங்களையும், தெருக்காரர் களையும் தவிர, மற்றவர்கள் போய்விட்டி ருந்தனர்.

வாசலில் கிடந்த கண்ணம்மாக் கிழவி தான், "ஏண்டா கோழி, ஒரு சொட்டுத் தண்ணி கூட உங்கண்ணுலயிருந்து வரல லையேடா? உங்கம்மா மேல உனக்குக் கொஞ்சங்கூட பாசமே இல்லியா? சொல்லுடா கோழி?" என்று கோபமா கவே கேட்டாள்.

அவள் கேட்டது அவன் காதில் விழா மலில்லை. ஆனால், பதில் எதுவும் சொல் லப் பிடிக்காமல் வீட்டுக்குள் நுழைந்தான். தன் தாயின் பிணம் கிடத்தப்பட்டிருந்த இடத்தில் போய் அமர்ந்தான்.

மெள்ள மெள்ளத் தேம்பத் தொடங்கி யவன், "ரஞ்சித்து, ரஞ்சித்துன்னு கூப்பிடு வியே அம்மா! இனிமேல் யாரும்மா என்னை ரஞ்சித்துன்னு கூப்பிடுவாங்க" என்று அழுகையினூடே யாருக்கும் கேட் காதவாறு புலம்பினான், எல்லோராலும் கோழி என்றே கூப்பிடப்படுகிற அவன்.

“நான் படமே பார்க்க

அழகான ஏற்ற இறக்கங்களுடன் 'திரை விமர்சனம்' நிகழ்ச்சியைத் தொகுத்து, ஊரையெல்லாம் படம் பார்க்கத் தூண்டும் ரத்னாவுக்கு, இன்றைய கால தமிழ்ப் படங்கள் என்றால் வேப்பங்காயாம். அட ராமா!

“1970க்கு முன்னாடி வெளிவந்த படங்களை மட்டும்தான் ஆர்வமா பார்ப்பேன். இந்தக் காலத்து படங்களோ, ஹீரோ ஹீரோயின் பெயர்களோ எனக்குத் தெரியவே தெரியாது. காமராஜ், பாரதி படங்களை மட்டும் ஆர்வமா ஓடிப்போய், முதல்நாளே தியேட்டர்ல பார்த்திருக்கிறேன். மற்றபடி நான் கடைசியா பார்த்த கமர்ஷியல் படம்னா, அது நாயகன்தான். புதுப்படங்களை டீவியில போட்டாக் கூட பார்க்க மாட்டேன்” என்று ஆச்சரியப்படுத்தியவரிடம், திரைவிமர்சனம் பற்றிக் கேட்டோம்.

“முதன்முதல்ல உமா பத்மநாபன் இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிட்டிருந்தாங்க. அவங்க 'வணக்கம் தமிழகம்' நிகழ்ச்சிக்கு மாறிய பிறகு நான் தொடர்ந்து பண்றேன். இதுல என் பங்கு எதுவுமில்லை. ஒரு குழு தியேட்டருக்குப் போய் படம் பார்க்கும். அவங்க எழுதிக் கொடுக்கறதை அப்படியே ஒப்பிக்கிற கிளிப்பிள்ளை நான்” என்கிறார்.

சன் டீ.வியிலே 96லிருந்து செய்திகள் ஒளிபரப்பாகிறது. ஒளிபரப்பான நாள் முதல், இவர் தொடர்ந்து செய்திகள் வாசித்து வருகிறார். “நான் பண்ற ரெண்டு நிகழ்ச்சியையும் சுத்தமான தமிழ்ல வழங்கறேன். இதனால மனசுக்குத் திருப்தியா வேலை செய்ய முடியுது. எனக்கு மிகவும் பிடித்த நடிகர் சிவாஜிகணேசனின் இறந்த செய்தியை நான்தான் படிச்சேன்” என்றவரிடம், “நீங்க நியூஸ் படிக்கும்போது நிலநடுக்கம் வந்து, அதை லைவா காண்பித்ததுண்டா?” என்றால், “இல்லையில்லை. சுனாமி வந்தபோது நியூஸ் படிச்சிருக்கேன். நல்லவேளை, அது ஸ்டூடியோவரைக்கும் வரலை” என்று சிரிக்கிறார். எம்.காம் பட்டதாரியான ரத்னா, ஜப்பானுக்கு ஆடை ஏற்றுமதி வியாபாரமும் செய்து வரு

பிட்டா பிடிங்க!



'க்ரோர்பதி'யில் அடுத்ததாக தனது பாய் ஃப்ரெண்ட் ஜான் ஆப்ரகாமுடன் கலந்து கொள்கிறார் பிபாஷா பாசு!

• • •

திருமணத்துக்குத் தயாராகிறார் திவ்யதர்ஷிணி. இதற்கென 'குக்கரி' க்ளாஸுக்கு முன்னேற்பாடாகச் சென்று வருகிறார்.

• • •

விஜய் ஆதிராஜ் விரைவில் தமிழ் சினிமாவில் அதிரடியாக நுழையத் திட்டமிட்டிருக்கிறார். இதற்கு இவரது சின்னத்திரை

மாட்டேன்!"

கிறார்.

"ஷோபனா ரவியோட தமிழ் உச்சரிப்பும், பெப்ஸி உமாவோட தொழில் சிரத்தையும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். இன்றைய டிப் டாப் தொகுப்பாளினிகள் ஒன்றை ஞாபகம் வைச்சுக்கோங்க, நல்ல தமிழ் பேசறவங்க மட்டும்தான் இந்த இண்டஸ்ட்ரியில பத்துப் பதினைந்து வருடங்கள் தொடர்ந்து நீடிக்க முடியும். தங்கிலீஷ் எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான் உதவும்" என்றார் இறுதியாக.

மூத்தவர் அறிவுறுத்துகிறார்; செவி சாய்ப்பார்களா இளம் தொகுப்பாளினிகள்?

சந்திப்பு:
ச.ந. கண்ணன்



நண்பர்கள் உதவியிருக்கிறார்கள்.

• • •

ஜெயா டிவியில் 'ராகமாலிகா' நிகழ்ச்சியைத் தயாரித்து வரும் சுபஸ்ரீ தணிகாசலத்துக்கு, தமிழ் சினிமாவின் பெரும்பாலான பாடல்களும் அத்துபடி. கறுப்பு - வெள்ளை படப் பாடல்களைக்கூட ஒரு வரி விடாமல் ஒப்பிப்பாராம்.

• • •

ஃபாத்திமா ஹனிடியூ தமது ஷாப்பிங்கை எப்போதும் துபாயில்தான் வைத்துக் கொள்வாராம்.



குட்டு!

சன் மியூசிக்கில் 'மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் சந்திக்கும் இடமென்ன?" என்கிற கேள்வியை, தமிழில் முழுதாகச் சொல்வதற்குள் நான்குமுறை செத்துப் பிழைத்து விட்டார் ஹேமா சின்ஹா. ம்ஹூம், சாதாரண வாக்கியங்களை தமிழில் சொல்லத் திணறுபவர்கள்தான் இன்றைய டாப் ஒன் தமிழ் தொகுப்பாளினிகள். கஷ்ட காலம்!

பால்ய மனோரதங்கள்!

அமரர் கல்கி

இராமசாமி, அரங்கசாமி, முனிசாமி, குமாரசாமி, கிருஷ்ணன், உஸ்மான், சுப்பராயன், ரங்கன், நான் ஆகியவர்கள் சிறு பையன்களாயிருந்தபோது ஒரே சந்தின் மூலையில் ஒருங்குகூடி கோலி விளையாடியவர்கள். அக்காலத்தில் ஒரு நாள், 'யோக்யர்களைத் தவிர, வேறு யாருக்கும் சொல்வதில்லை' என்று சத்தியம் செய்து கொடுத்துவிட்டு, ஒவ்வொருவருடைய மனோரதமும் இன்னதென்று வெளியிடலானோம். ஆ! இப்போது எண்ணிப் பார்க்கும்போது, எனது அருமை நண்பர்களில் ஒருவருடைய மனோரதமாவது நிறைவேறியிருப்பதை நான் காணவில்லை. என்னே இவ்வுலக வாழ்க்கை!

இத்தனைக்கும் பார்த்தால் எங்கள் மனோரதங்கள் அவ்வளவு கிடைக்கக் கூடாதவையாகத் தோன்றா. இராமசாமி ஆசைப்பட்டதெல்லாம் என்ன? காலேஜ் பியூன் வேலைதான். டங், டங், டங் என்று மணியடித்துவிட்டு, பிள்ளைகள் - வாத்தியார்கள் எல்லாரும் அறைகளுக்குள் போனதும், தாழ்வாரத்தில் தூணில் சாய்ந்தபடி சிவனே என்று தூங்கவேண்டுமென்பதுதான் அவர் மனோரதமாகயிருந்தது. இது நிறைவேறிற்றா? இல்லை. இந்த இன்பகரமான வாழ்க்கையை விட்டு, ஸர் ஸி.பி. இராமஸ்வாமி அய்யர் கே.ஸி.ஐ.இ. என்ற முழுநீளப் பெயர்தாங்கி, வைஸ்ராய்களும், கவர்னர்களும், இராஜாக்களும், இராணிகளும் கூப்பிடும் இடத்துக்கெல்லாம் கையைக் கட்டிக் கொண்டு ஓடும்படியான கதிதான் அவர் தலையில் எழுதியிருந்தது. வாழ்க்கையின் கொடுமை அப்படி!

அரங்கசாமியின் மனோரதம் என்ன? அதுவும் பிரமாதமில்லை. சத்திர மணியக்காரர் உத்தியோகந்தான். இதாவது நிறைவேறிற்றா? எல்லா ஏற்பாடுகளும் நடந்து, கடைசியில் கிடைக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்ட சமயத்தில், திடீரென்று கை நழுவிப் போய்விட்டது. ஆசாபங்கமுற்ற நண்பர் அரங்கசாமி அய்யங்கார் கடைசியில் போயும் போயும் 'ஹிந்து' பத்திரிகை எடிட்டர் ஆக நேர்ந்தது.

முனிசாமியின் சமாசாரமென்ன? தாலுகா கச்சேரி டபேதார் ஆகவேண்டுமென்று அத்தியந்த ஆசைகொண்டு, இராப்பகல் அதே சிந்தனையாயிருந்தார் பேர்வழி. அந்த ஆசை நிறைவேறவில்லை. வாழ்க்கையில் எத்தனையோ அவஸ்தைகள் பட்டு, கடைசியில் கேவலம் மந்திரி உத்தியோகமும் பார்க்க நேர்ந்தது. ஆண்டவனே! டபேதார் உத்தியோகம் மட்டும் ஆகியிருந்தால், மந்திரி வேலையிலிருந்து பாதியில் தள்ளிவிட்டார்களே, அந்த மாதிரி தள்ளியிருக்க முடியுமா? ஒரு டபேதாரை வேலையை விட்டுத் தள்ளுவதற்குமுன், நூறு தாசில்தார்கள்



டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்க மாட்டார்களா?

குமாரசாமி கிராம கணக்குப் பிள்ளையாக ஆசைப்பட்டார். கிடைக்கவில்லை. கடைசியாக, கல்வி மந்திரியாகத் தான் அவரால் முடிந்தது. நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்பது பொய்யா?



கிருஷ்ணன் சொந்தத்தில் டீக்கடை ஒன்று வைத்து நடத்த வேண்டுமென்று விரும்பியிருந்தார். நடக்கவில்லை. திவான் வேலையும், அதுவும் இதுவும் பார்த்துத் திண்டாடித் தெருவில் நின்றுவிட்டு, கடைசியில் ஏழு வருஷமாய் லா மெம்பர் வேலையிலேயே உட்கார்ந்திருக்கிறார். ஆ! வாழ்க்கையில் இவருக்கு இருக்கக் கூடிய ஏமாற்றத்தை எண்ணும் போது எனக்குக் கண்ணீர் பெருகுகிறது.

நண்பர் உஸ்மான், வெற்றிலை வியாபாரம் பண்ண ஆசை கொண்டிருந்தார். அது கைகூடாமல், ஹோம்மெம்பர் ஸ்தானத்தில், அல்லாவின் அருளைத் தியானித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்.

சுப்பராயனுடைய மனோரதம் கடலைப் பிண்ணாக்கு வியாபாரத்தில் நின்றது; நடைபெறவில்லை. என்னவெல்லாமோ பார்த்த பிறகு, இப்போது நிற்பதற்கு இடமின்றித் தவிக்கிறது.

ரங்கன் மனோரதம் என்ன? பழக்கடை வைத்து, பளபளவென்று கூரிய கத்தி வைத்துக் கொண்டு, ஒட்டு மாம்பழங்களை நைஸ், நைஸாக அறுத்துக் கொடுக்க வேண்டுமென்பதுதான். அதற்குப் பதிலாக ஆசாமி மனிதர்களுடைய தேகங்களை அறுத்துத் தள்ளிக் கொண்டிருக்கிறார். 'டாக்டர் ரங்காச்சாரி' என்றதும் குழந்தைகள் கூடப் பயப்படும்படியான நிலைமைக்கு வரநேர்ந்து விட்டது. பாவம்!

நேயர்களே! மேலே நான் எழுதியிருக்கும் விஷயங்களின் உண்மையைப் பற்றி உங்களில் சிலருக்குச் சந்தேகம் தோன்றலாம். அதைத் தீர்த்துக் கொள்வதற்கு சுலபமான வழி ஒன்றிருக்கிறது. மேற்குறிப்பிட்ட கனவான்களில் யாராவது ஒருவரிடம் சென்று இந்தக் கட்டுரையை வாசித்துக் காட்டுங்கள். அவரிடமிருந்து நீங்கள் தப்பிப்பிழைத்து வந்தால், அப்புறம் பாக்கி விஷயம் பேசிக் கொள்ளலாம்.

- அமரர் கல்கியின்
'அதிர்ஷ்ட கவசம்' நூலிலிருந்து...
வானதி பதிப்பகம்

உளவியல் தொடர்கதை

மான், ஒட்டகச்சிவிங்கியின் அருகில் வந்தது. ''பெரியண்ணா, அடுத்த ஊரில் பாட்டுப் போட்டி நடக்கப் போகிறது. அதில் நம் ஊரின் சார்பாக நீங்கள்தான் கலந்து கொள்ள வேண்டும்'' என்றது.

ஒட்டகச்சிவிங்கியின் பார்வை காண்டாமிருகத்தின் அருகில் இருந்த பறவையின் மீது விழுந்தது.


''இந்தப் பறவையை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாதீர்கள். இது ஒரு முட்டாள். உங்களுக்குச் சரியாகப் பேசவே தெரியாதபோது எப்படிப் பாட முடியும் என்கிறது'' என்றது மான்.

உடனே அந்தப் பறவை ''உங்களுக்கு நன்கு அறிமுகமான ஒரு

அருண் சரண்யா

மரத்துக்குக் கீழே ப்ரார்த்தனா விழுந்து கிடந்த கோலமே ராஜனுக்குப் பல தகவல்களை உணர்த்தியது. ஒரு கிளையிலிருந்து மற்றொன்றுக்குத் தாவும் போது கீழே விழுந்திருக்க வேண்டும். இருபது அடி தள்ளியிருந்து பார்க்கும் போதே, அதன் உடலில் ஏற்பட்டிருந்த ஆழமான காயம் நன்கு புலப்பட்டது. வயிற்றுச் சுமை வேறு. அடுத்த வாரம் பிரசவித்துவிடும் என்ற நிலையில், இப்படி விழுந்து அடிபட்டுக் கொண்டிருக்கிறது.

இரு கைகூப்பி வணங்குவதுபோல் அதனுடைய முன்னங்கால்கள் இரண்டும் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டிருந்தன. பெரும்பாலும் இப்படிக் காட்சி தருவதாலேயே 'ப்ரார்த்தனா' என்று அதற்குக் காரணப் பெயர் சூட்டியிருந்தான்



பறவை இருக்கிறது. ஒட்டகச்சிவிங்கிக்கு பதிலாக அதை அனுப்பினால் போட்டியில் நம் ஊருக்கு வெற்றி கிடைக்குமே'' என்றது.

''அப்படி ஒரு பறவையை நான் அறிந்ததில்லையே. நான் அறிந்ததெல்லாம் இந்த ஒட்டகச்சிவிங்கியைத்தான். சரியாகப் பார் பறவையே, இப்படி ஒரு நீண்ட, அழகான தொண்டை உள்ளவர்களைவிட யாரால் அழகாகப் பாடிவிட முடியும்!''

மானின் இந்தச் சொற்களைக் கேட்டதும் வருத்தத்துடன் அங்கிருந்து பறந்து சென்றது குயில்.



ராஜன்.

ராஜனுக்காகக் காத்துக் கொண்டிருந்த கோவிந்தசாமி விளக்கத் தொடங்கினார்.

"மரத்திலேயிருந்து தாவும்போது கீழே விழுந்துடுச்சுய்யா. இது கத்தின கத்தல்லே முழிச்சுக்கிட்டு வந்தேன். ராத்திரி வேளையிலே ஐயாவை எழுப்ப வேணாமின்னு தான் பார்த்தேன். ஆனால் நீங்க கோவிச்சுப்பீங்களேன்னுதான்...''

ராஜனின் கடும் உத்தரவு அது.

விலங்குகள் 2

'விலங்கியல் பூங்காவில் உள்ள எந்த மிருகத்தின் உடல்நிலை சீரியஸானாலும், அது எந்த நேரமாக இருந்தாலும் உடனே தன்னைக் கூப்பிட வேண்டும்.'

கோவிந்தசாமிக்கும் ஓரளவு மருத்துவம் தெரியும். காயத்துக்குக் களிம்பு தடவுவதும், கட்டுப்போடுவதும் அவன் அறிந்தவைதான். ஆனால் இந்தக் குரங்கு அவனை அருகில் நெருங்கவிட்டால்தானே! போதாக்குறைக்கு எச்சிலைத் தன் கையில் துப்பிக் கொண்டு, அதை அவனை நோக்கி வீசியது. நல்லவேளை, பக்கத்தில் சிறு கற்கள் இல்லை. இருந்தால் அவற்றையும் வீசியிருக்கும்.

ப்ரார்த்தனா வலியில் துடித்துக் கொண்டிருந்தது. மருந்தைக் கொடுத்தால் குடிக்கும் மனநிலையில் அது இல்லை என்பது புரிந்தது. சிம்பன்ஸிகளுக்குக் குளிர்பானமென்றால் பிடிக்கும். வழக்கம்போல் அதில் கலந்து கொடுக்கலாமா?

சென்றவாரம் கோவிந்தசாமி ஒரு தப்பு செய்துவிட்டார். வேறொரு சிம்பன்ஸிக்கு அதன் எதிரிலேயே குளிர்பானத்தில் மருந்து கலந்துவிட்டார். அதை ப்ரார்த்தனாவும் கவனித்திருந்தது. புத்திசாலி.

இப்போது கொடுத்தால் குடிக்குமா? சட்டென ஒரு யோசனை தோன்றியது. கோவிந்தசாமியின் காதுகளில் முணுமுணுத்தான். அவர் நகர்ந்தார்.

"ப்ரார்த்தனா, கவலைப்படாதே. சரியாயிடும். குட்டியிலே இருந்தே தாவித்

தாவி பழக்கம்தானே உனக்கு. பின்னே ஏன் கீழே விழுந்தே? சரிவிடு. மனுஷங்க மட்டும் நடக்கும்போது கீழே விழுவதில்லையா என்ன? நான் உனக்கு மருந்து கொடுக்கப் போவதேயில்லை. என்ன சரியா?"

ப்ரார்த்தனா அவனையே உற்றுப் பார்த்தது.

சற்று நேரத்தில் இரண்டு குளிர்பான பாட்டில்களுடன் வந்து சேர்ந்தார் கோவிந்தசாமி. எதில் மருந்து கலக்கப் பட்டுள்ளது என்பதை ராஜனுக்குக் கண்ணசைவில் தெரிவித்தார். இரண்டு பாட்டில்களின் மூடிகளையும் அப்போது தான் திறப்பதுபோல் பாவனை செய்தான் ராஜன். சிம்பன்ஸி இருந்த திசையைக்கூட அவன் பார்க்கவில்லை. என்றாலும் தன்னைத்தான் அது கவனித்துக் கொண்டிருக்கும் என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும்.

மருந்து கலக்கப்பட்டிருந்த பாட்டிலை சற்றுத் தள்ளிவைத்து விட்டு, ராஜன் இன்னொரு பாட்டிலை தன் கையில் வைத்துக் கொண்டான். எதிர்பார்த்ததுபோல் ப்ரார்த்தனா மெதுவாக வந்து தன்னருகில் இருந்த பாட்டிலை ஆவலுடன் எடுத்துக் கொண்டது. ஆனால் குடிக்கவில்லை.

ராஜன் தனக்குள் சிரித்துக் கொண்டபடி, தன்னிடமிருந்த குளிர்பானத்தில் சிறிது குடித்தான். அதற்குப் பிறகுதான் ப்ரார்த்தனாவும் தன்னிடமிருந்த பானத்தைக் குடித்தது. அப்பாடா! இனி அதன் வலி குறையும். மருந்துடன் கூடவே கலக்கப்பட்டிருந்த வலிமை குறைந்த மயக்க மருந்தும் ப்ரார்த்தனாவின் செயல்பாடுகளைக் கொஞ்சம் குறைக்கும். அந்த நேரத்தில் மீதி சிகிச்சையை மேற்கொள்ளலாம்.

"நீங்க வேணா வீட்டுக்குப் போயிட்டு காலையிலே வாங்களேன் டாக்டர்"

ராஜன் தன்னிடமிருந்த செல்போனை எடுத்தான்.

"யாரு? ஆனந்தா?... அனுஷா ரூமுக்குள்ளே தூங்கிட்டாளா...? ஓ... கூடத்திலே தான் உன்கூட முழிச்சிக்கிட்டு இருக்காளா? ஏண்டா? நீ எதுக்குத் தூங்காம இருக்கே? சரிசரி, அனுஷாகிட்டே கொடு... அனு, தலைவலி எப்படி இருக்கு? மாத்திரை வேணா போட்டுக்கோயேன். நான் இன்னும் அரைமணி நேரத்திலே வந்துடுவேன்."

காலை சமையல் முடிந்துவிட்டது. சாப்பிட்டுவிட்டு ராஜன் கிளம்பிவிட்டான்.


அனுஷாவின் மனம் தங்கையையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. இந்நேரம் ஸ்ரீ என்ன செய்து கொண்டிருப்பாள்? அவள் கணவர் இப்போது க்ளினிக்கில் இருப்பாரா? அல்லது வீட்டிலா?

ஸ்ரீயைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் என்ன? தீர்மானத்தைச் செயல்படுத்த தொலைபேசியை நெருங்கும்போது அதுவே ஒலித்தது.

"அக்கா"

"ஏய் ஸ்ரீ, சொன்னா நம்பமாட்டே. இப்பதான் நான் உனக்கு போன் செய்யலாம்னு நினைச்சேன். நீ முந்திக்கிட்டே..."

"நம்புவேன்க்கா. நீ எது சொன்னாலும் நம்புவேன். அதுசரி, நீ எப்படி இருக்க?



"தியேட்டர்ல டிடிஎஸ்னு போட்டுருக்கு. ஆனா சவுண்ட் எஃபெக்டே இல்லியே?"

"டிடிஎஸ்ங்கறது தியேட்டர் ஓனரோட இனிஷியல்!"

- அம்பை தேவா

"யோவ் எதுக்கய்யா டீவி மேல தார் பூசற..?"

"இங்கிலீஷ்ல செய்தி வாசிக்கிறாங்க பாருங்க தலைவரே!"

- சோலோ செல்வாஷ்



உன் ஹஸ்பெண்ட் எப்படி இருக்கார்?"

"எங்களை விடுடீ. முதல்லே உன்னைப் பத்திச் சொல்லு."

"எனக்கு ஒரு குறைச்சலும் இல்லை. உண்மையைச் சொல்லணும்னா... நான் உன்னைக்கூட இங்கே மிஸ் பண்ண லேக்கா."

"ஓ, அந்த அளவுக்கு கார்த்திக் உன்னைப் பொத்தி வெச்சிக்கிட்டிருக்காரா?"

"ஆமாம். அதைவிட முக்கியமா இங்கே இருக்கிற பெரிய மீன் தொட்டி. அதைப் பார்த்துக்கிட்டிருந்தா நேரம் போறதே தெரியலை."

"எப்படியோ, நீ சந்தோஷமா இருந்தால் போதும். என்னை நீ மிஸ் பண்ணலேன்னு சொன்னது கூட எனக்கு நிம்மதியா இருக்கு."

அப்பா இறந்த பிறகு அம்மாவின் பாரத்தை (மனபாரத்தையும்தான்) முடிந்த வரை தான் இறக்கி வைக்க வேண்டும் என்று, அந்தச் சின்ன வயதிலேயே ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டாள் அனுஷா. ஆனால் ஸ்ரீலதாவோ, அப்பாவின் அன்பும் சேர்த்து அம்மாவின் மூலம் தனக்குக் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கத் தொடங்கினாள். அம்மாவும் தடையில்லாமல்தான் அன்பை இருவருக்குமாகவே வாரிவழங்கினாள். (ஸ்ரீலதாவுக்கு சற்று அதிகமாகவே). ஆனால் அவளும் சில வருடங்களிலே இறந்துவிட்டாள்.

அம்மா இறந்த பிறகு மாமாவின் வீட்டில்தான் இருவரும் வளர்ந்தார்கள். மாமாவுக்கு இவர்கள் வரவு - முக்கியமாக அனுஷாவின் வரவு - மிகவும் வசதியாக இருந்தது. அடிக்கடி நோயில் விழுந்து கொண்டிருப்பவள் மாமி. பள்ளிக்கூடம், ஹோம்வொர்க் இவற்றைத் தவிர வீட்டு வேலைகளையும் நறுவிசாகச் செய்யும் அனுஷாவைப் பார்க்கும்போது மாமாவுக்கு உள்ளம் நெகிழும். "இப்படி ஒரு பொறுப்பான மகளை கண்குளிரப் பார்த்து ரசிக்காமல் போய்விட்டாளே அக்கா" என்று மனைவியிடம் ஆதங்கப் படுவார்.

"அவங்க போனதினாலேதான் இவள் இவ்வளவு பொறுப்பா இருக்கா" என்று மாமி கூறியதிலும் உண்மை இருந்தது.

ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் அனுஷா கண்டிப்பாக இருந்தாள்.

"ஏண்டி ஸ்ரீலதா, உங்க அக்காவே எல்லா வேலையையும் செய்யணுமா? நீயும் அவளுக்கு உதவி செய்யக் கூடாதா? அப்படி என்ன சோம்பல் உனக்கு?" என்று மாமி கூறும்போது, அனுஷாவின் முகம் சிவந்துவிடும். பக்கத்தில் தங்கை இல்லாதபோது பளிச்சென்று சொல்லி விடுவாள். "மாமி, என் தங்கை வேலை செய்யலேன்னா கூட அவளை ஒண்ணும் சொல்லாதீங்க. அவ பாவம், எந்த பாரமும் இல்லாமல் வளரட்டும்."

தங்கையின் வேலையையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யும் இந்தச் சிறுமிக்கு மட்டும் பெற்றோரை இழந்த பாரம் இல்லையா என்ன? படுக்கையில் இருந்து கொண்டே கண்கலங்குவாள் மாமி.

அப்பாவின் பென்ஷன் தொகை அம்மாவின் மறைவுக்குப் பிறகு, அனுஷாவின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்டு வந்தது. பட்டப்படிப்பை முடித்துவிட்டு தனியார் நிறுவனம்

கேமரா கம்மல்!

யாருடா இந்த ஒளி ஓவியர் காதுல கேமராவோட கிளம்பிட்டாரேன்னு பார்க்கறீங்களா...? இவரு அமெரிக்க ராணுவத்தோட ஸ்பை சுறாமீனாம். அமெரிக்காவோட நீர்மூழ்கிக் கப்பல்கள் ஈராக் பக்கம் போறப்போ, இது மாதிரி நாலஞ்சு சுறாமீன்கள் பைலட் கணக்கா முன்னால போய், எதுனா கண்ணி வெடிகள் இருக்குதான்னு செக் பண்ணிக்கிட்டே போகுமாம். இது மாதிரி ஒரு டீம் எங்க 'அம்மா'வோட செக்யூரிட்டிக்காக வர முடியுமா?

- பாரீஸ் பார்த்தசாரதி



ஒன்றில் அனுஷா வேலைக்கு செல்லத் தொடங்கி இரண்டு வருடங்கள் ஆன போது, மாமா அவளுக்கு வரன் பார்க்கத் தொடங்கி இருந்தார்.

முதலில் 'திருமணமே வேண்டாம்' என மறுத்தாள் அனுஷா. பிறகு 'மூணு வருஷம் போகட்டும்' என்று கூறிப் பார்த்தாள். மாமா மறுக்க, "கல்யாணத்துக்கு அப்புறம் ஸ்ரீயையும் என் கூடவே தங்க அனுமதிக்கும் ஒருவருக்குத்தான் கழுத்தை நீட்டுவேன்" என்றாள்

மாமா சிரித்தார். "இதுக்கு ஒத்துக்கிற மாதிரி வரனெல்லாம் கிடைக்காது அனு" என்றார். கிடைத்தது! ராஜன்.

திருமணமான அடுத்த நாள் ராஜனின் வீட்டுக்கு அனுஷாவுடன் ஸ்ரீலதாவும் வந்து சேர்ந்தாள். முன்புறமிருந்த அறையில் ராஜனின் தூரத்து உறவினர்கள் சிலர் மலர் அலங்காரம் செய்து கொண்டிருந்தனர்.

கிடைத்த தனிமையில் அனுஷா தயங்கித் தயங்கி "என் தங்கை இதுவரை தனியாகப் படுத்துக்கிட்டதில்லே. கொஞ்ச நாளைக்காவது நான் அவ கூடவே படுத்துக்கவா?'' என்றாள்.

''அதனால் என்ன?'' என்று சட்டெனக் கூறினான் ராஜன்.

அன்றிரவு, தான் யானைக்கு வைத்தியம் பார்த்ததை ராஜன் விவரிக்க, ஸ்ரீலதா கண்கள் விரியக் கேட்டுக் கொண்டிருந்தாள். ''என்னது, யானைக்கு ஊசி மருந்து போட்டீங்களா? ஊசி குத்தும்போது கோவத்திலே யானை உங்களை ஏதாச்சும் பண்ணியிருந்தா?'' என்று அவள் கேட்க, அவன் புன்னகையோடு விளக்கினான்.

''அருகில் இருந்துக்கிட்டு ஊசி போடுவதில்லை. தூரத்தில் இருந்தே வில்லிலிருந்து அம்பு வீசுவதுபோல ஊசியைச் செலுத்துவோம். அப்போ யானை வலியோடு திரும்பும் பாரு. அவ்வளவு பெரிய மிருகத்தாலே தலையை மட்டும் திருப்ப முடியாது. உடம்பையும் கொஞ்சம் சேர்த்துத் திருப்பும். அதைப் பார்க்கவே கொஞ்சம் பயமாத்தான் இருக்கும்" என்றபடி யானை போலவே ராஜன் தன் தலையைத் திருப்பி, அப்படியே அனுஷாவுக்கு மட்டும் தெரியும்படி கண்ணடித்தான்.


அன்றிரவு அக்காவின் கைவிரல்களைத் தன் கையில் இணைத்துக் கொண்டு பாதுகாப்புணர்வோடு ஸ்ரீலதா தூங்க, மற்றொரு அறையிலிருந்து வெகு நேரத்துக்குப் பிறகு ராஜனின் குறட்டை ஒலி கேட்டது.

அப்போது தவிப்போடு இலேசாகச் சிரிப்பும் வந்தது அனுஷாவுக்கு.

அதை இப்போது நினைக்கையில் நெஞ்சில் பெரும் பாரம் ஏறிய உணர்வு.

மனதில் தினம் தினம் வீசும் ஊழிக் காற்றை அடக்குவது பெரும் சவாலாகவே இருந்தது.

(தொடரும்)



நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்: எடுத்த காரியம் கை கூடும். திருமணம் ஆகாமல் தடைப்பட்டு வந்த ஆண், பெண்களுக்குத் திருமணம் நடக்கும். போட்டி, பந்தயம், ஸ்பெகுலேஷன் துறையில் உள்ளவர்களுக்கு நல்ல வருவாய் கிடைக்கும். புதிய வாகனம் (அ) வீடு வாங்க ஏற்ற காலம். புதிய தொழில் தொடங்க நல்ல வாரம். கலைஞர்கள் ஏற்றம் பெறுவார்கள். மாணவ, மாணவிகள் நற்பலனை அடைவார்கள். குரு/சனி வழிபடுதல் நல்லது.

ரிஷபம்: திடீர் பணவரவும், சுபகாரிய நிகழ்ச்சிகளும் ஏற்படும். மனக்குழப்பம் நீங்கும். குழந்தைகளால் பாராட்டு பெறுவீர்கள். புதிய முயற்சிகள் நற்பலனைத் தரும். வீடு/வாசல் வாங்க ஏற்ற நேரம். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு (அ) இடமாற்றம் ஏற்படும். வியாபாரிகளுக்கு தொழிலில் இருந்த மந்தநிலை மாறி, தொழில் முன்னேற்றமான பாதையில் செல்லும். நெருங்கியவர்களால் நற்பலன் உண்டு. விக்னேஸ்வரரை வழிபடுதல் நலம்.

மிதுனம்: தொட்டது துலங்கும். வித்தையில் மேன்மை ஏற்படும். வாக்கு, தனம், கல்வி மேல் ஓங்கும். திருமணக் காரியம் கைகூடும். சிலருக்குப் புத்திரப்பேறு ஏற்படும். சந்தோஷம் கிட்டும். வழக்கு, வியாஜ்ஜியம் வெற்றி அளிக்கும். புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல பணி அமையும். குரு/ராகு/கேது வழிபடுதல் நலம்.


கடகம்: அற்புதமான வாரம். எண்ணங்கள் யாவும் ஈடேறும். குடும்பத்தில் மதிப்பு மரியாதை பெருகும். பணம் வரும். தெய்வ சங்கல்பம் ஏற்படும். மாணவ, மாணவிகள் படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். திருமணத் தடை நீங்கி திருமணம் கைகூடும். வைத்தியச் செலவு குறையும். புதிய வேலை வாய்ப்பு வீட்டுக் கதவைத் தட்டும். குரு வழிபாடு சிறந்தது.

சிம்மம்: வெற்றி தரும் வாரம். நீண்ட நாட்களாக முடியாத சில விஷயங்கள் தடை நீங்கி வெற்றி அளிக்கும். குழந்தைகள் வழியில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். வண்டி, வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையாகச் செல்லவும். யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம். உணவுக் கட்டுப்பாடு அவசியம். குடும்ப விவகாரத்தில் அனுசரணை தேவை. மாணவர்கள் படிப்பில் கவனம் அவசியம். உத்தியோகஸ்தர்கள் வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். ராகு/கேது/சனி வழிபடுதல் நல்லது.

கன்னி: சிறப்பான வாரம். நல்ல

7.9.2005 முதல்
13.9.2005 வரை

தஞ்சை பரத்வாஜ்



நிகழ்ச்சிகள் நடக்கும். பண வருவாய் பெருகும். வேலை வாய்ப்பு கருதி சிலர் வெளி நாடு செல்வீர்கள். உத்தி யோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் தெரியும். குடும் பத்தில் இருந்த குழப்பம் சீராகும். வாக்கு, தனம், கல்வி மேன்மை அடையும். புதுத் தொழில் தொடங்க ஏற்ற நேரம். கலைஞர்களுக்கு ஏற்றம் தரும் வாரம். ஸ்பெகு லேஷன் துறையில் உள்ளவர் கள் ஜாக்பாட் பெறுவார்கள். கேது/குரு/ராகு வழிபடுதல் நலம்.

துலாம்: பொன்னான வாரம். நினைத்தது நடக் கும். பெயர், புகழ், மதிப்பு கிடைக்கும். வேலையில் உயர்வு (அ) இடமாற்றம் ஏற்படும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து அணுகும். குழந்தைகள் வழியில் சுபச் செலவு ஏற் படும். வியாபாரிகள் நல்ல பலனை அடைவார்கள். வீடு/தொழிலில் முதலீடு செய்வது நற்பலனைத் தரும். சனி/குரு வழிபடுதல் நலம்.

விருச்சிகம்: சூப்பர் ஆன வாரம். எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றி. திருமணக் காரியம் கை கூடும். சிலருக்கு வெளிநாடு சென்று படிக்க (அ) வேலைக்கு அழைப்பிதழ் வந்து சேரும். புதிய வாகன வசதி ஏற்படும். கலைஞர் கள் ஏற்றம் பெறுவார்கள். தனம் பெரு கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள்.

தனுசு: எதிலும் குழப்பத்தை எதிர்நோக்குவீர்கள். கடைசியில் வெற்றி வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாமல் நீண்ட காலம் இருந்தவர்களுக்குத் திரு மண யோகம் கிட்டும். புதிய தொழில் துவங்க ஏற்ற காலம். ஆடை ஆபரண வஸ்துகள் வாங்குவீர்கள். குரு/ராகு/கேது/ சனி வழிபடுதல் நல்லது. ஆலயங் களுக்குச் சென்று குரு ப்ரீதி செய்து வருதல் நலம்.

மகரம்: முற்போக்கான வாரம். அனைத்து விஷயங்களும் வெற்றி அளிக் கும். குடும்பத்தில் மதிப்பு மரியாதை அதிகமாகும். குழந்தைகளால் சுபச்

பரத்வாஜ் பதில்கள்

என் மகளுக்கு 26 வயதாகிறது. அவளுக்குத் திருமணம் எப்போது நடக்கும்? எப்படிப்பட்ட வரன் அமையும்?

- வி.பத்மாவதி, திருப்பூர்.

உங்கள் மகளுக்கு செப்டெம்பர் 2005க்குப் பின் திருமணம் கூடி வரும். பிறந்த ஊருக்கு அருகில் உள்ள வரனாக, சிறிய குடும்பத்திலிருந்து, மேற்கு பார்த்த வீட்டில் வசிக்கும், படித்த வரனாக, விஷ்ணு பெயர் கொண்டவனாக அமையும். ஸர்ப்ப தோஷமுள்ள ஜாதகமாகச் சேர்க்கவும்.

என் மகளுக்கு மறுமணம் செய்ய முயற் சிக்கிறேன். முயற்சி வெற்றி பெறுமா? எப்படிப் பட்ட வரன் அமையும்?

- பெயர் வெளியிட விரும்பாத வாசகர், வேப்பம்பட்டு.

உங்கள் மகளுக்கு தற்போது நடக்கும் குரு தசை ராகு புத்தியில் முயற்சிக்க வேண்டாம். சனி தசை ஆரம்பத்தில் திருமணம், ஏப்ரல் 2007க்குப் பின்

கைகூடும். வெளியூரில் வசிக்கும் குடும்பத்தில் ஒரே பிள்ளையாக, தெற்கு பார்த்த வீட்டில் வசிக்கும் வரனாக அமையும்.

என் மகனுக்கு 27 வயதாகிறது. அவனுக்குத் திருமணம் எப்போது கைகூடும்? எப்படிப்பட்ட பெண் அமைவாள்?

-ஆர். விமலா, நாக்பூர் - 1.

உங்கள் மகனுக்கு 28வது வயதில் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்கு தெற்கு திசையில், இரு உடன்பிறந்தவர் உடைய, தெற்கு பார்த்த வீட்டில் வசிக்கும், படித்து வேலை பார்க்கும் பெண் அமைவாள். 2006 ஆண்டின் முடிவில் திருமணம் கைகூடும். லக்ஷ்மி என்ற பெயரில் பெண் அமைவாள்.

என் மகளுக்கு 4 வருடங்களாக முயன்றும் திருமணம் ஏதேனும் காரணங்களால் தள்ளிப் போகிறது. எப்போது திருமணம் கைகூடும்?

- பெயர் வெளியிடாத விரும்பாத வாசகர், திருவாரூர்

உங்கள் மகளின் ஜாதகப்படி செப்டம்பர் 2005க்குப் பின் திருமணத் தடை நீங்கி, சுப நேரம் துவங்குகிறது. தென்கிழக்கு திசையில் வெளிநாட்டில் பணி புரியும் வரனாக அமையும். உறவில் அமையாது. அவசரக் கல்யாணமாக நடக்கும்.

என் சகோதரருக்கு 38 வயதாகிறது. குடும்பத்தில் இவருக்கு மட்டும் நிரந்தர வேலையோ, திருமணமோ கூடி வரவில்லை. ஒரு விபத்து நிகழ்ந்தது முதல் தொடர்ச்சியான தோல்விகள் தான். இவரது நிலைமை எப்போது மாறும்?

- வி. மாலதி, கோவை - 18.

உங்கள் சகோதரருக்கு ஜாதகப்படி நிரந்தர வேலையும், நல்ல வருமானமும் அமைவது சிரமம். ஆனால் அவர் சொந்தத் தொழில் செய்தால் நல்ல பலன் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. இன்னும் ஓராண்டுக்குள், மேற்கு, தெற்கு திசையில் வசதியான இடத்தில் பிறந்த, உறவு அல்லாத பெண் அமையும். திருமணத்துக்குப் பின் இவரது வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும்.

செலவு ஏற்படும். அந்நிய நாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரிகளுக்கு தொழிலில் இருந்த மந்தநிலை மாறி நற்பலன் கிடைக்கும். கலைஞர்கள் ஏற்றம் காண்பார்கள். வீடு/வாகனம்/நிலம் வாங்க நல்ல நேரம்.

கும்பம்: புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பண வரவு கூடும். குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. நீண்ட நாள் முடிவு பெறாமல் இருந்த வழக்கு வியாஜ்ஜியம் வெற்றி பெறும். தடைப்பட்டு வந்த திருமணம் உடன் நடக்கும். கைப்பொருள் மீது கவனம் தேவை. வாக்குவாதம் தவிர்க்கவும். ராகு/கேது/குரு வழிபடுதல் நலம்.

மீனம்: மனக்குழப்பங்களுக்கு விடை கிடைக்கும். மதிப்பு மரியாதை பெருகும். குடும்ப உறவில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. புதிய பணி கிடைக்கும். தொழிலில் இருந்து வந்த மந்தநிலை மாறும். எதிர்ப்பு, தொல்லை விலகும். மாணவ, மாணவிகளுக்கு நல்லபலன் கிடைக்கும். திருமணக் காரியம் கைகூடும். சொத்துகள் வாங்கலாம். வாக்கு, தனம் மேன்மை கிட்டும். ராகு/கேது வழிபடுதல் நலம்.

'மதுரையிலிருந்து விருத்தாசலம் விழுப்புரம் மார்க்கமாக, சென்னை எழும்பூர் வரும் வைகை எக்ஸ்பிரஸ் இன்னும் சற்று நேரத்தில் மூன்றாவது பிளாட்பாரத்தில் வந்து சேரும்' - பயணிகள் சுறுசுறுப்பானார்கள். வெறும் இரண்டு மணி நேரம் மட்டுமே தாமதமாக வந்து நின்ற ட்ரெயினைப் பார்த்து ஆயாசப் பெருமூச்சுகள். நீண்ட நேரம் கால்கடுக்க நின்றதுமல்லாது, இடம் கிடைக்குமா என்ற சந்தேகமும் பயணிகளைக் களைப்பில் தள்ளியிருந்தது.

விகாஸ் தன் அம்மாவுடன் முண்டியடித்து உள்ளே சென்றான். "சீக்கிரம் போ, அதோ அங்கே உட்கார்" எனத் தள்ளினாள் சாரதா. ஒருவாறு அமர்ந்ததும் "அம்மா பசிக்கிறது" என்றான். சிறு பிள்ளைக்குச் சூழ்நிலையைப் பற்றி என்ன தெரியும்? சாரதாவுக்கோ களைப்பு ஒருபுறம். பக்கத்தில் நெருக்கிக் கொண்டிருக்கும் அம்மையாரின் மேல் கோபம் மறுபுறம். வெளியிட முடியாத கோபத்தைப் பையனின் மேல் காட்டினாள். "கொஞ்சம் சும்மாயிரு. அப்புறம் சாப்பிடலாம்". விகாஸ் பேசாமல் ஜன்னல் வழியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

"ஏங்க, கொஞ்சம் நகர்ந்து உட்காருங்க. சாமான் வைக்க இவ்வளவு இடமா? எத்தனை பேர் நிற்கிறோம், நகருங்க" - அந்தப் பெண், கல்லூரியில் படிக்கும் பெண் போலத் தோன்றினாள். விடுமுறையில் வீடு செல்லும் அவசரம். மனத்தில் உள்ளதை நேரடியாகப் பேசும் இளவயது. உரிமையை நிலைநாட்டிக் கொள்ளத் துடிக்கும் வேகம்.

"நாங்க காலையில் பதினொரு மணியிலிருந்து இங்கேயே காத்துக் கிடக்கிறோம். நீ ஐந்து நிமிஷம் முன்னால வந்துட்டு சட்டம் பேசறியே"


மேல் சீட்டில் சாமான்களுக்கு நடுவில் உட்கார்ந்திருந்த பெண்மணி கத்தினாள். அவளுக்குப் படுப்பதற்காகத் தான் செய்திருந்த சாமர்த்திய ஏற்பாடு தடைப் பட்டுப் போன ஆத்திரம்.

"எல்லாரும் டிக்கட் வாங்கிக்கிட்டு தான் வருகிறோம். வசதியெல்லாம் எதிர் பார்த்தால், ரிசர்வ் செய்துக்கிட்டுதான் வரணும்" சொல்லிக்கொண்டே மேலே ஏறினாள். அது மட்டு



சந்திரா

ஊர் சேரும் நேரம்!






''டாக்டர், டாக்டர், அந்த எட்டாம் நம்பர் ஆஸ்த்மா பேஷண்ட் இறந்துட்டாரு!''

''ஹும்... இப்பவாவது அவரோட 'ஆஸ்த்மா' சாந்தி அடையட்டும்''

- ஆர்.கே. இராமநாதன்



''என்ன! அந்த பள்ளிக்கூடத்துல அட்மிஷனுக்கு இப்படிக் கூட்டம் அலை மோதுது!''

''அதுவா! அந்த ஸ்கூல்ல எல்கேஜிலேயிருந்தே +2 சிலபஸை நடத்த ஆரம்பிச்சு என்ட்ரன்ஸ் எக்ஸாமுக்கும் கோச்சிங் கொடுக்கறாங்களாம்.''

- பாளை. பாலு

''நாட்டில் பத்திரிகை சுதந்திரம் இல்லீங்க!''

''எப்படிச் சொல்றீங்க?''

''ரயிலில் போறப்ப எங்கிட்டே இருந்த பத்திரிகையை ரயிலில் எல்லோரும் ஓசி வாங்கிப் படிச்சுட்டாங்கனா பார்த்துக்குங்க!''

- வே. முருகேசன்



மல்லாமல், அருகில் நின்ற சிறுமியையும் ஏறச் சொல்லி இடம் கொடுத்தாள். மேற்பார்வை பார்க்க வந்த பெண் காவலர் தலை நீட்டவும், மேல்சீட்டுப் பெண்மணி பேசாமல் அடங்கிப் போனாள்.

சாரதாவின் எதிரே ஜன்னலோரமாக ஒரு மூதாட்டி, பக்கத்தில் ஒரு பெண்ணுடன் உட்கார்ந்திருந்தார். அடுத்து இருவர் சொந்தக்காரர்கள் போலும், ஏதோ பேச்சு சுவாரஸ்யத்தில் இருந்தனர்.

சாரதாவின் பக்கத்தில் இருந்த அம்மையார் மிக விசாலமாக உட்கார்ந்திருந்தார். மற்றவர் வசதி பற்றிக் கவலைப்படுவது அவரது சரித்திரம், பூகோளம் எதிலும் கிடையாது போலும். அடுத்து அமர்ந்திருந்தவர் கிராமத்துப் பெண்மணி. அருகில் மகனும், மகளும் நெருக்கியடித்து உட்கார்ந்திருந்தனர். வெயில் உக்கிரமாக இருந்தது. பெட்டிக்குள் இறுக்கமான சூழ்நிலை. மேல்சீட்டிலிருந்து முணுமுணுப்பு, தொடர்ந்து கொண்டிருந்தது. 'இந்தக் கல்லூரிப் பெண் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டாளே, மதுரை வரை இப்படியே போகணுமே!' என்கிற கோபமும் தவிப்பும், மேல்சீட்டுப் பெண்மணியை உலுக்கிக் கொண்டிருந்தன.

வண்டி புறப்பட்டு சிறிது நேரம் ஆனபின், விகாஸுக்குச் சாப்பிடக் கொடுத்துத் தானும் சாப்பிடத் தொடங்கினாள் சாரதா. வேகமாகச் சாப்பிட்டு முடித்தான் விகாஸ். பசி வேகம். "ஏம்ப்பா பூரி சாப்பிடுகிறாயா?" எதிர்சீட்டிலிருந்த பெண்மணி விகாஸிடம் கேட்டார். வேண்டாம் எனத் தலையாட்டினான் விகாஸ். மேல்சீட்டில் கல்லூரிப் பெண் சாப்பிட்டு முடித்ததும் ஏதோ புத்தகத்தைப் பிரித்தாள். செங்கல்பட்டு தாண்டுவதற்குள் விகாஸ் சாரதாவின் மடியில் தூங்க ஆரம்பித்தான். நெருக்கடியான நிலை சாரதாவுக்கு. ரிசர்வ் செய்யாமல் வந்தோமே என நொந்து கொண்டாள். கால்கள் வலித்தன.

கிராமத்துப் பெண்மணியின் குடும்பம் ஏதோ சாப்பிட்டுக் கொண்டிருந்தது. திடீரென்று மேல் சீட்டிலிருந்து

அந்தப் பெண் கத்தினாள். "யாராவது கொஞ்சம் தண்ணீர் கொடுங்களேன்" சாரதா வேகமாக எழுந்து, விகாஸைப் பின்புறம் சாய்த்த வாக்கில் அமர்த்தி விட்டுத் தண்ணீர் தந்தாள். மேல் சீட்டுப் பெண்மணி சாப்பிடவில்லை போலும். இத்தனை சாமான்களையும் கொண்டு வந்த களைப்பும் சேர்ந்து கொள்ள, இலேசாக மயங்கியிருந்தாள். தண்ணீர் தெளித்ததும் விழித்தாள். அந்தக் கல்லூரிப் பெண், தான் வைத்திருந்த பிஸ்கட்டைப் பிரித்து அவளைச் சாப்பிடச் செய்தாள். குளிர் பானப் பாட்டிலைக் கொடுத்துக் குடிக்க வைத்தாள்.

விழுப்புரம் நெருங்கும் சமயம், மேல் சீட்டில் அருமையான நட்பு முளைத்திருந்தது. கீழே இருந்த அனைவரும் மேல்சீட்டுப் பெண்மணிக்குக் காபி வாங்கிக் கொடுப்பதும், அவள் கூச்சத்துடன் மறுப்பதும், அங்கே ஓர் அந்நியோன்யம் தோன்றியிருந்தது. வண்டி கிட்டத்தட்ட திருச்சியை நெருங்கும்பொழுது எல்லோரும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

எதிர் ஜன்னலோரத்தில் அமர்ந்திருந்த மூதாட்டி, ஒவ்வொரு விஷயத்தையும் ஊன்றிக் கவனித்திருக்க வேண்டும். தன் பேச்சை மற்றவர்கள் கவனிக்க வேண்டும் என்றெல்லாம் எண்ணாதவராய்ச் சாதாரணமாகச் சொன்னார்.

"நம்ப வாழ்க்கைகூட இப்படித்தான். ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்காம, சண்டை, சச்சரவு போட்டுக்கறோம். காலம் செல்லச் செல்ல, அனுபவம் கூடுது. மனசு பக்குவமடைஞ்சு, விட்டுக் கொடுக்கறோம். நட்பும் உறவும் இயல்பாகவே நெருங்கும் பொழுது, வாழ்க்கை கிட்டத்தட்ட முடிஞ்சே போயிடுது"

அடேயப்பா! என்னவொரு துல்லியமான கண்டிப்பு! இதைக் கேட்ட சாரதா அயர்ந்தே போனாள்.

"அம்மா, அடுத்த தடவை இப்படி நெருக்கியடித்துக் கூட்டி வரக்கூடாது. என்னம்மா?" இரண்டாவது தடவையாகக் கேட்டான் விகாஸ். ○

சன்டே சமையல்!



டபுள் ஸ்வீட் ரகசியம்!

"நாங்க கர்னாடிக், வெஸ்டர்ன், ஃப்யூஷன்னு பர்ஃபார்ம் பண்ற மாதிரி, எங்க வீட்டுலேயும் ஞாயிற்றுக்கிழமைன்னா, ஃப்யூஷன் சமையல்தான்" என்று ஆரம்பித்தார் பிரபல வயலின் இசைக் கலைஞர் லலிதா.

"ஸ்ரீலங்கன், கேரளா, மதுரைனு கலந்து கட்டி வெரைட்டியா சமைக்கிறதுல எங்கம்மா கப்புலட்சுமியை மிஞ்ச இந்த ராயப்பேட்டை வட்டாரத்துல ஒரு ஆள் கிடையாது" என்று நந்தினியும் ஒரு கூடை ஐஸ் வைத்தார்.

"ஞாயிற்றுக்கிழமை அன்னிக்கு இடியாப்பம், புட்டுக் கடலை, அடை அவியல்னு காலை டிபனே கொஞ்சம் ஹெவியா இருக்கும். மத்தியானம் இரண்டு மணிக்கெல்லாம் மறுபடி டைனிங் டேபிளில் குடும்பமே ஆஜர். தேங்காய்ப் பால் குழம்பு, சொதி, முளைக்கீரை மசியல், ஜவ்வரிசி வடாம்னு அம்மா அசத்தியிருப்பாங்க..."

"எதையாவது பேசி, யாரையாவது கிண்டலடிச்சு, சிரிச்சு, புரைக்கேறி... அம்மாக்கிட்டே திட்டு வாங்குவோம்! அது சன்டே மட்டுல்ல ஃபன்டேவும் கூட" என்றார் நந்தினி.

"ஆ... சொல்ல மறந்துட்டேனே! எங்கம்மா ஸ்வீட்ஸ் ஸ்பெஷலிஸ்ட்! என்ன, கிருஷ்ணா ஸ்வீட்ஸ் முரளி கொஞ்சம் முந்திக்கிட்டார். இல்லன்னா...?" என்று அம்மாவின் தோளை அணைத்து கிண்டலடித்தார் லலிதா...

"நம்ம ஊர் சக்கரைப் பொங்கலாகட்டும், பெங்காலி பாஸந்தி ஆகட்டும்... அம்மாவோட கைப்பக்குவமே சூப்பர்" என்று நந்தினி சிலாகித்துக் கொண்டிருக்கும் போதே, பாயசம், கேரட் அல்வா கொண்டு வந்து உபசரித்தார் கப்புலட்சுமி.

"என்னது டபுள் ஸ்வீட்! என்ன விசேஷம்?"

"இன்னிக்கு எங்க அம்மா அப்பாவோட கல்யாண நாள்! அதுக்காக, நாங்க இரண்டு பேரும் ரொம்பக் கஷ்டப்பட்டு, செஞ்சது



இந்த சேமியா பாயசம். கேரட் அல்வா, எங்களுக்காக எங்கம்மா செஞ்சது'' என்று சின்ன சஸ்பென்ஸ் வைத்து நிறுத்தினார்.

''லலிதா, அமெரிக்க பீட்ஸ்பர்க் பல்கலைக் கழகத்துல, விஸிட்டிங் ஃபெல்லோவா தேர்வாயிருக்காங்க! யு.எஸ். தரும் உயரிய ஃபுல்பிரைட் விருது இது. நந்தினிக்கு சார்லஸ் வாலஸ் அவார்டு கிடைச்சிருக்கு. லண்டன் பல்கலைக் கழகத்துக்கு கல்ச்சுரல் அம்பாஸிடரா போறாங்க. ஒரே சமயத்துல இரண்டு பெண்களும் உலக இசை ஆராய்ச்சிக்காக வெளிநாடு போறது சந்தோஷமா இருக்கு. அதுதான் ஸ்வீட்'' என்றார் லலிதா-நந்தினியின் தந்தை முத்து சுவாமி.

"சரி... சன்டே அன்னிக்கு சமையல் தவிர வேறு என்ன விசேஷம்?'' என்ற படி விட்ட இடத்துக்கே வந்தோம்.

"சாப்பிட்டு முடிச்சதும் குடும்பத்தோட சேலையூரிலிருக்கும் சுந்தாஸ்ரமம் போயிட்டு வருவோம். சத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் மீது அப்படியொரு பக்தி...'' என்றார் லலிதா.

"காரசாரமாக சாப்பிட்டுப் பழகிட்டோம். இனி வெளிநாட்டுல பிரெட்டு, பர்க்கர்னு சாப்பிடப் போறதை நினைச்சாலே கஷ்டமா இருக்கு. இசையைக் குடிச்சு, மியூஸிக்கைச் சாப்பிட்டு அட்ஜஸ்ட் பண்ண வேண்டியதுதான்'' என்று கலகலவெனச் சிரித்தார் நந்தினி!

- டாலி

படங்கள் : ஸ்ரீஹரி

சாந்தி பலராமனின் இந்த வார டிஷ்: மீட்டா லஸ்ஸி

தேவையான பொருள்கள்: புளிக்காத கெட்டித் தயிர் - 2 கப், சர்க்கரை - ½ கப், வாசனை பன்னீர் - 2 ஸ்பூன், ரோஸ் எஸன்ஸ் - சில துளிகள், ஐஸ்கட்டி - 4, பால்பேடா - 2, குங்குமப்பூ - சிறிது

செய்முறை: பால்பேடாவைத் தூளாக்கவும். தயிர், சர்க்கரைத்தூள் பன்னீர், எஸன்ஸ், ஐஸ் கட்டி சேர்த்து நுரைக்க அடிக்கவும். மிக்ஸியிலிருந்து லஸ்ஸியை நுரையோடு ஊற்றி, குங்குமப்பூ தூவி பரிமாறவும்.





• சாந்தி பலராமன்

ருசிக்கலாமே சாப்பிடுங்க!

வாரம் ஒரு வாசகர் குடும்பம்

அதெல்லாம் பின்னர் வந்து நேரில் சொல்கிறேன். அதுவரை இவர்களுடன் பேசிக் கொண்டிருங்கள். சீக்கிரம் வந்து விடுகிறேன்!" எனக் கூறிவிட்டு, சடசடவென மாடிப் படிகளில் இறங்கிச் சென்றார் ஐம்



‘சர்க்கரை... இனிக்கற... சர்க்கரை அதில் எறும்புக்கு என்ன அக்கறை?’ன்னு திரைப்படப் பாடலொன்று பாடாத குறையாக, கரும்பு லாரிகள் நம்மை உரசிச் செல்கின்றன, கள்ளக்குறிச்சியின் புறநகர்ப் பகுதிகளில். ஒரே தாலுகாவில் மூங்கில்துறைப்பட்டு, கச்சிராபாளையம் ஆகிய இரு இடங்களில் சர்க்கரை ஆலைகள். அந்தப் பகுதி விவசாயிகளின் முக்கியச் சாகுபடி கரும்பு. இனிக்கிற சர்க்கரை பற்றி அங்குதானே பாடல் காற்றில் மிதந்து வரும்? அதே மெட்டில் வித்தியாசமான பாடலொன்றும் நம் காதில் வந்து தேனாய்ப் பாய்ந்தது. ‘பத்திரிகை... நல்ல பத்திரிகை.... அதுக்கு வாசகர் மேலென்ன அக்

பதினைஞ்சு வருஷப் பொக்கிஷம்!

கறை?’ன்னு. பாடல் பிறந்து வந்த திசை நோக்கித் திரும்பினோம். மோட்டார் வாகன ஆலோசகர் ஏ.எல். நாராயணன், மர்மப் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தார்.

கள்ளக்குறிச்சி, அண்ணாநகர், தந்தை பெரியார் தெருவில் அவர்களது வீடு. மாடிப் படிகளேறி அவர்களது வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார், மர்மப் புன்னகையாளர். மின்சார உபயம் இல்லாமலே மென் காற்று தவழ்ந்தது வரவேற்பறையில். "இவர்கள் என் ஒன்றுவிட்ட அக்காள். சேஷம்மாள். வயது 65. எனக்கு ஆர்.டி.ஓ ஆபீஸில் அவசர வேலை இருக்கிறது. இவர்களிடம் பேசிக் கொண்டிருங்கள். அதற்குள் என் மனைவி ரேவதியும் வந்து விடுவார். இருண்டு கிடந்த என் வாழ்வில் விளக்கேற்றி வைத்தவள் அவள்.


பத்து மூன்று வயது ஏ.எல். நாராயணன். நாற்பது வருட கல்கி வாசகர் அவர்.

“கள்ளக்குறிச்சியில் எழுபதுகளில் மிகவும் பிரபலமான குடும்பம். அதில் மூத்த மகனாகப் பிறந்தவர் எங்கள் மருமகன். நல்ல செல்வச் செழிப்பு. துன்பம், துயரம் என்றாலே என்னவென்று தெரியாது. அப்படியிருந்தவர் வாழ்க்கையில் ஒரே நேரத்தில் இரண்டு சரிவுகளைச் சந்திக்க நேர்ந்தது. அந்தச் சமயத்தில் அவர் வீட்டிலிருந்து வெளியேறி, லாட்ஜ்களில் அறையெடுத்துத் தங்கி வாழ்ந்து வந்தார். அப்போது தான் என் கணவர் (ஏ.எல். நாராயணனுக்கு மாமா), நல்ல இதயம் படைத்த ஒருவர், வீணாகிவிடக் கூடாதென்று,

அவர் வாழ்விலே ஒரு திருப்புமுனைக்குக் காரணமாய் அமைந்திருந்தார்!" என்று நம்மிடம் பேசிக் கொண்டிருந்த சேஷம்மாள், "இதோ என் மகள் ரேவதியே வந்து விட்டாள்" என ஒதுங்கிக்கொண்டார்.

இருபது ஆண்டுகளாக கள்ளக்குறிச்சி வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்க அலுவலகத்தில், கணக்கராகப் பணிபுரிந்து வருபவர் ஜி. ரேவதி. வயது 44. இவர்களுக்கு ஒரே மகன். என். குரு பிரசாத். வயது 18. சென்னை எஸ்.ஆர்.எம் கல்லூரி மாணவர்.

"என்னமோ உங்கள் கணவர் இருண்ட வாழ்க்கை.. உங்கள் அப்பாதான்... அவர் வாழ்க்கையில் திருப்புமுனை என்றெல்லாம் பேச்சு வந்ததே..." என விஷயத்துக்கு வந்தோம் நாம். பனீர் புன்னகையுடன், "ஓ... அதுவா? என் கணவரும் வந்து விடட்டும். அந்த முடிச்சுகளை அவர்



முன்பாகவே அவிழ்த்து விடுவோம்!" என்று மேலும் சஸ்பென்ஸ் கூட்டினார் மர்மப்புன்னகையாளரின் மனைவி.

"அப்போது நான் உர வியாபாரம் செய்துவந்தேன். இரண்டு குழந்தைகள். வாழ்க்கை சுகமாகத்தான் போய்க் கொண்டிருந்தது. 1983ல் ஒரே நேரத்தில் இரண்டு இடிகள் என் தலை மீது விழுந்தன. 83ல் என் முதல் மனைவி, மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு இறந்து விட்டாள். அதே வருடம் என் உர வியாபாரத்தையும் இழுத்து மூடும்படி ஆயிற்று. என் வாழ்வு இருண்டு போனது. லாட்ஜ் அறையொன்றில் கும்மிருட்டில், அமர்ந்திருந்தேன். என் முதுகை வருடியது ஒரு நேசக்கரம். நிமிர்ந்து பார்த்தேன். என் மாமா (ரேவதியின் அப்பா) நின்றுகொண்டிருந்தார். எனக்குப் பேச நா எழவில்லை. அவர்தான் பேசிக் கொண்டேயிருந்தார்... பின்னர் நடந்ததை ரேவதியே உங்களுக்குச் சொல்வாள்!" எனக் கூறி, மனைவியின் பக்கமாகப் பார்வையைத் திருப்பினார் ஏ.எல்.நாராயணன்.

"எனக்கு அப்போ 24 வயசு. என்கிட்டே என்னோட அப்பா, நம்ப உறவுல ஒரு மாப்பிள்ளை இருக்கார். நீ அவரைக் கட்டிக்கிறியாமா?னு கேட்டார். ரெண்டாந்தரம் என்றதும் மறுத்துட்டேன். அவரு ரொம்ப நல்லவர்மா. அவருக்கு நீ வாழ்க்கை குடுத்த மாதிரி இருக்கும்னு எடுத்துச் சொன்னார். அமரர் கல்கியின் தீவிர ரசிகை நான். அவருடைய புரட்சிகரமான எண்ணங்களால் ஈர்க்கப்பட்டவள். எனவே உடனே ஒப்புக்கொண்டேன். ஆண்டவன் புண்ணியத்துல நல்லபடியா இருக்கோம். மூத்த தாரத்தோட பசங்களுக்கு கல்யாணமாயிடுச்சு" என்றார் ரேவதி.

"இப்பச் சொல்லுங்க. என்னோட குடும்பத்துக்கு விளக்கேற்றி வைத்தவள்தானே... இந்த ரேவதி!'' என்று பெருமை பொங்கப் பேசுகிறார்.

"பதினைந்து வருஷமா கல்கி வார இதழ்களைப் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்தேன். ஒவ்வொரு இதழும் பொக்கிஷம் மாதிரி. அவ்வளவு மதிப்புள்ளவை. சமீபத்தில் வீடு கட்டும்போதுதான் இடப்பற்றாக் குறையை முன்னிட்டு பிரியா விடை கொடுத்தேன்" என்கிறார் ரேவதி மிகுந்த வருத்தத்துடன்.

கல்கியில் பிடித்தது: ரேவதி - சமூகப் பிரச்னை சார்ந்த கட்டுரைகள், ஏ.எல். நாராயணன் - தலையங்கம், சிறுகதைகள், சேஷம்மாள் - தராசு கேள்வி பதில், வட்ட மேஜை.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

'என்னை
நினைத்து
நெகிழ்வதே
எனக்கான
அபிஷேகம்!'
- ஸ்ரீ கிருஷ்ணன்

6



சீறிக்கொண்டு புறப்பட்ட அந்தக் கார் வாரனாசியின் சந்து பொந்துகளில் ரொம்பவே சிரமப்பட்டுதான் ஓடியது. ஒரு கட்டத்தில் அப்படியே நின்றுவிட, தலையைச் சொறிந்தான் டிரைவர்.

"என்ன... வழக்கம் போல இங்க இருந்து நடக்கணுமாக்கும்?" - என்று கேட்டபடியே கணேஷும் இறங்கினான். டிக்கியில் இருந்து அவனது சூட்கேஸ் மற்றும் பேக்கை எடுத்துக்கொண்டான். நடக்க ஆரம்பித்தான்.

கணேஷின் ஆடிட்டர் கிருஷ்ணமூர்த்தி, தமது ஆடிட்டிங் அலுவலகத்தை ஹோட்டல் கிளைகள் போல, இந்தியாவில் பல ஊர்களில் ஆரம்பித்து நடத்தி வருபவர். பல கணக்குப்புலிகளை தத்தெடுத்து வளர்த்து வருபவர். எப்பொழுதும் மாநிலத்தில் முதலாக வரும் ஒரு காமர்ஸ் ஸ்டூடண்டுக்கு அவர்தான் முதல் வாழ்த்துக் கடிதம் போடுவார். அந்தக் கடிதம், சம்பந்தப்பட்ட நபரை அப்படியே நெய் லட்டு போல ஒரு பிசை பிசைந்து விடும். பதிலுக்கு நன்றிக் கடிதம் போடும்போது, கிருஷ்ணமூர்த்தி ஐயரும் அவனுக்கான வலையை வீசுவார்.

அதில் விழாத ஸ்காலர்களே இல்லை.

"உனக்குத் தேவை நல்ல சம்பளம். அப்புறமா மதிப்பு... இது இரண்டும் இந்த கேஎம். அசோசியேட்ஸ்ல ஜாய்ன் பண்ணினா அமோகமாக் கிடைக்கும். அப்புறமா அனுபவம். ஒரு அஞ்சாறு வருஷம் இங்க வேலையப்பாரு. அப்புறமா நானே டாடா, டி.வி.எஸ்னு கிரீடமுள்ள கம்பெனிகள்ள உன்னை அக்கவுண்ட்ஸ் மேனேஜராக்கி ஒரு வீடு, ஒரு கார்னு உக்காத்தி வைக்கிறேன்" என்பார் கேஎம். என்று இரு ஆங்கில எழுத்துகளாகி விட்ட கிருஷ்ணமூர்த்தி ஐயர்.

இந்திரா செளந்தர்ராஜன்



பார்க்கக் கிளம்பினால், அதற்குண்டான செலவினங்கள் தனி!

பாவம் தொலைப்பதற்காக வருபவர்களால், ஒரு பெரிய பாவப் பட்டணமாக வாரனாசி மாறி, கன்னங்கரேல் என்று கறுத்துப் போய், நசிவின் எல்லையில் அந்த நகரம் நிற்பதாகத்தான் கருதுகிறான்.

அதிலும் கங்கை நதியைப் பார்க்கும்போதெல்லாம், அவனது கரங்கள் சவுக்கை எடுத்துக் கொண்டு விடும். கங்கையை அழுக்காக்கும் அவ்வளவு பேரையும் நிற்க வைத்து விளாச வேண்டும் என்று எண்ணிக் கொள்வான்.

இதனாலேயே வாரனாசிக்குப் போய் வா என்று கே.எம். சொல்லும்போது அவன் மனது ஊமையாகிவிடும்.

"வேண்டாம் சார்... அங்க போனா எனக்கு ஜன சமுகம் மேலேயே ஒரு வெறுப்பு வந்துடறது. நான் அங்கேயே இருக்க நேர்ந்தா எனக்குப் பைத்தியம் கூடப் பிடிக்கலாம்'' என்பான்.

கே.எம். சிரிப்பார்.

''அந்த ஊரை நினைச்சாலே

எங்கே என் கண்ணன்?

அப்படி ஐயரிடம் அகப்பட்டவன்தான் கணேஷ்.

சொந்த ஊர் திருச்சி. டிகிரி முடித்து ஐயரிடம் சேர்ந்து சி.ஏவும் எழுதி, முதல் அட்டெம்ப்டிலேயே பாஸ் செய்துவிட்டவன். அதிலும் ரேங்க்கில்... எனவே அவனை தமது கம்பெனியின் சீஃப் ஆடிட்டராக்கி மாதச் சம்பளமாக இருபதாயிரம் தருகிறார். இதுபோக வருஷம் ஒருமுறை இன்செண்டிவ்வும் அளிக்கிறார்.

இப்படி வாரனாசி, டெல்லி, கொல்கத்தா என்று அங்குள்ள ஃபைல்களைப் முக்கின்னு சொல்வா. நீ என்னடான்னா தலைகீழா யோசிக்கிறே... போ... போய் நகங்கு. எனக்கென்னவோ அந்தக் காசி உன்னைப் பெரிய ஞானியாக்கப் போறதா தோண்றது'' என்பார்.

"சார், இதுதான் என்னோட கடைசி ட்ரிப். அடுத்த தடவைல இருந்து ராகவன், ராமச்சந்திரன்னு மத்தவாளை அனுப்பப் பாருங்கோ. நான் போக மாட்டேன். மீறி போகச் சொன்னா, வெளிய போயிடுவேன்'' என்று சொல்லிவிட்டுத்தான் வந்திருக்கிறான்.

கிருஷ்ணமூர்த்தி ஐயர் ஒரு சிரிப்புதான் சிரித்தார்.

அதற்கு ஒருநாள் முழுக்க அர்த்தம்

சொல்லலாம்.

சென்னைக்குக் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தாள் சாரு. காரை வளைத்து ஒடித்து, வாசலுக்கு நேராக நிறுத்தி, டிக்கியைக்கூட திறந்து வைத்திருந்தான் சம்பத்.

சாமான்கள் அதில் வரிசையாக ஏறிக் கொள்ள திரும்ப வந்தான்.

காரில் அப்பா அம்மாவை கூட்டிக் கொண்டு கும்பகோணம், தஞ்சாவூர் பக்கமாய் ஒரு சுற்றுச் சுற்றி வரும் ஆசையோடுதான் வந்திருந்தான். ஆனால் வந்த நொடி முதலே ஒருவிதமான கிலேசம் ஆட்டிப் படைக்கத் தொடங்கிவிட்டது.

சாருவாலும் இயற்கையாக ஒன்ற முடியவில்லை.

நாடி ஜோதிடம் இந்தமுறை ஒரு குட்டிப்புயலை அந்த வீட்டுக்குள் வீசச் செய்துவிட்டது.

ஜோதிடப்படி ஹரித்வார், ரிஷிகேஷ் பக்கம்போய், அந்தப் பரிகாரம் செய்தால் தனக்கு பேரனோ பேத்தியோ நிச்சயம் என்பது சீனுவின் நம்பிக்கை. ஆனால் அதெல்லாம் இல்லாமலே, அடுத்து வரும்போது ஒரு பிள்ளையோடுதான் வருவேன் என்கிற மாதிரி அதற்குப் பதில் சொல்லிவிட்டாள் சாரு.

இறுதியாக சீனுவும், ராஜமும் யாத்திரை மேற்கொள்ளத் தீர்மானித்து விட்டனர். தங்களுடனேயே கண்ணனையும் கொண்டு செல்வது என்றும் முடிவு செய்துவிட்டனர்.

"அதுதான் சரியான முடிவு. இவருக்கு அபிவாதயேகூட இப்ப சொல்ல வராது" என்று அதற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள் சாரு. அப்படியே "ஒரு பத்து நாள் பூஜை இல்லைன்னாதான் என்ன? அந்த மரப்பாச்சி பொம்மை என்ன, கண்ணைக் கசக்கிண்டா வந்து நின்னு அழப் போறது?" என்றும் ஒரு கேள்வியும் கேட்டுவிட்டாள். சீனுவுக்கு உடம்பெல்லாம் பதறிவிட்டது.

"அம்மாடி, பூஜை கண்ணனுக்கில்ல... நீ புரிஞ்சுண்டது இவ்வளவுதானா?" என்று ஓங்கலான குரலில் கேட்டவர், எதனாலோ அப்படியே ஸ்ருதியைக் குறைத்துக் கொண்டார்.

"சரிடா சம்பா... நீ கிளம்பு - நாங்களும் கிளம்பறோம்" என்று அவர் சொல்லவும், சாருவும் உடனே தயாராகி விட்டாள்.


காரை ஸ்டார்ட் செய்து கிளம்பும் போது, கச்சிதமாக எதிரில் ஒரு பைத்தியம். அதுவும் நட்ட நடுவில்... கொஞ்சம் முரட்டுப் பைத்தியம் என்பது கைகால்களில் சங்கிலி கட்டப்பட்டிருப்பதில் தெரிந்தது.

சாருவுக்கு பகீர் என்றது. அந்தப் பைத்தியம் சாருவையே வெறித்துப் பார்த்தது.

"நகருடா... ஏய் கிறுக்குப் பயலே, நகருடா..." என்று அவர்களுக்காக பத்மநாப அய்யங்கார் கத்தவும், அரை மனதாக வழி விட்டவன், வெறித்தபடியே சாருவைப் பார்த்துச் சொன்னான்.

"இரு இரு...உனக்கும் இதேமாதிரி சங்கிலியப் போட்டு கட்டிப் போடறேன்..."

"நீ போ சம்பா... கிளம்பு... கிளம்பு" - பத்மநாப அய்யங்கார் சொல்லவும், காரும் சீறிக் கொண்டு ஓடியது. அமைதியாகப் பார்த்தபடி இருந்த சீனுவுக்



"உண்ணாவிரதத்தை முடிச்சு வைக்க வந்த தலைவர் உங்களுக்கு மட்டும் ஆரஞ்சு ஜூஸ் தரலியே... ஏன்?"

"வாயில இருந்த சோற்றுப் பருக்கைய கவனிச்சுட்டார்!"

- அம்பை தேவா

"பெண்ணுக்கு மாப்பிள்ளைதான் அமைஞ்சிட்டாரே? இன்னும் எதுக்கு ஜோசியர் வீட்டுக்கு அலையறே?"

"கல்யாண மண்டபம், சமையல்காரர் எல்லாம் நல்லபடி அமையுமான்னு கேட்டுட்டு வரத்தான்!"

- எஸ். ஸ்ரீவித்யா



குள்ளோ, ஒரு ஆயாசப் பெருமூச்சு.

அடுத்து அய்யங்கார் அவரைத்தான் நெருங்கினார்.

"என்ன சீனு... சம்பா சீக்கிரமா கிளம்பிட்டான்?"

"ஆபீஸ்ல இருந்து போன் வரவும் கிளம்பிவிட்டான்."

"நன்னா சமானிக்கிறியே. சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே. உன் மாட்டுப் பொண்ணு ரொம்பவும் மாறிட்டா."

"சரி அதுக்கு என்ன இப்போ?"

"இல்ல... சும்மா சொன்னேன்..."

"போதும் பத்து... ஆகவேண்டியதப் பேசு... இதெல்லாம் கொழாயடி பொம்மனாட்டிகள் பேச்சு..."

"சரி, அத்தவிடு... இன்னிக்கு சேவை முடிஞ்சுதா?"

"நான் என்ன நீயா... சௌகர்யத்துக்குப் போய் பெருமாள சேவிக்க..."

"நம்ம சௌகர்யத்துக்குத்தாம்பா பெருமாள். உன் பிள்ள மாதிரி எட்டிக் கூட பார்க்காம இல்லையே நான் ஒண்ணும்."

- பத்மநாப அய்யங்கார் ஓர் ஊசியைச் செருகியதில் நறுக்கென்ற வலி. ஒரு முறை முறைத்துவிட்டு வீட்டுக்குள் திரும்பினார். ராஜம் காய்ந்த புடைவையை மடித்துக் கொண்டிருந்தாள். சீனு வரவும் பார்த்தாள்.

"நாம எப்ப பொறப்படறோம்?" - என்று சன்னக் குரலில் கேட்டாள். சீனுவிடம் பிரச்னை இல்லாத மாதிரி ஒரு தோற்றம்.

"உங்களத்தான்..."

"ஆங்..." - ஒரு சிலிர்ப்புடன் விடுபட்டு நிமிர்ந்தார்.

"இல்ல, நாம எப்ப பொறப்படறோம்னு கேட்டேன்."

"அது... அது... நான் இப்ப பத்து மணி பஸ்கல திருச்சிக்குப் போய் எல்லா ஏற்பாட்டையும் பண்ணிட்டு வந்துடறேன். நாளைக்கு ஏகாதசி. திருவாராதனையை முடிச்சுண்டு கிளம்புவோம். பரண் மேல அந்த பிரம்புப்பெட்டி இருக்கு பார். அதை எடுத்து வை..."

"அது எதுக்கு?"

"சரிதான்... உன் கண்ணனை என்ன, நீ இடுப்புலையா வெச்சுண்டு வருவே...?"

"அப்படின்னா?"

"கண்ணனும் நம்மகூட வரான்..."

"...................."

"என்ன ராஜம் பேச்சக் காணோம்."

"இல்ல... ரயில்ல ராத்திரி பகல்னு போகும்போது எங்க குளிப்பேள்? எப்படி பூஜை பண்ண முடியும்?"

"எப்படியாவது பண்ணுவோம், பண்ணணும். அதுக்குத் தகுந்த மாதிரிதான் டிக்கெட் வாங்கப் போறேன். ஆடிட்டர் கிருஷ்ணமூர்த்தி அய்யருக்கு வடக்க நல்ல செல்வாக்கு. அவரைப் பார்த்தா மிச்சத்த அவர் பார்த்துண்டுடப் போறார்"

- என்ற சீனு, அப்படியே பீரோவைத் திறந்து தோல் பையை எடுத்து கை அக்குளில் வைத்துக்கொண்டு, துண்டையும் உடம்பின்மேல் பரத்திப் போர்த்திக் கொண்டு கிளம்ப ஆயத்தமாகி விட்டார்.

வாசல் தாண்டும்போது எதிரில் படுவேகத்தில் சம்பத்தின் கார்! திரும்பவும்.... கார் முன் கண்ணாடி மேல் ரத்த வரிகள்!

(தொடரும்)



துள்ளிக் குதிக்கும் ராஜா, ரஹ்மான்!

வெளி: 'நிலா' பத்தி தெரியுமா... 'அ.ஆ' நிலா இல்ல... நெப்டியூன்ல இருக்குற நிலா பத்தி தெரியுமா? நெப்டியூன்ல இதுவரை 13 நிலாக்கள் இருப்பதாக நம்பப்படுகிறது. இதுவரை 7 நிலாக்களுக்கு பெயர் வைத்துள்ளனர். நெப்டியூன் பத்தி இதுவரை எத்தனை சாட்டிலைட்ஸ் 'சாட்' பண்ணியிருக்கு. நெப்டியூன் எப்படிப்பட்டவர், நல்லவரா, கெட்டவரா? அவருக்கு பிபி, ஷுகர் எதுவும் உண்டா? இப்படி அ முதல் ஃ வரை தெரிந்துகொள்ள, நெப்டியூனோட சொந்தக்காரங்களான ஜூபிடர், புளூட்டோ, மார்ஸ் - இப்படி சூரிய மண்டலத்தைப் பத்தி அமர்க்களமா அறிந்து கொள்ள உதவுற தளம் nineplanets.org. நிறையப் படங்கள், அள்ள அள்ளத் தகவல்கள், வீடியோ ஃபைல்கள் என வெரைட்டி காட்டுகிறது இத்தளம். இதைப் படிச்சதுக்கப்புறம் வானியலில் ஒரு தனி ஆர்வம் துளிர்ப்பது உண்மைதான்!

டௌன்லோட்: உங்களுக்குள் தூங்கிக் கொண்டிருக்கும் இசை ஆர்வத்தைத் தட்டி எழுப்பப் போகிறது இந்த வெர்ச்சுவல் பியானோ! கிடைக்குமிடம்: www.analogx.com/contents/download/audio/vpiano.htm இன்ஸ்டால் பண்ணிட்டீங்களா! ஓ.கே. இனி நீங்கள் மேஸ்ட்ரோ ஆக வேண்டியதுதான் பாக்கி. வெர்ச்சுவல் பியானோவைத் திறந்து வையுங்கள். வெலாசிட்டி, சேனல் என சிலவற்றை செட் செய்யுங்கள். இனி உங்கள் சிஸ்டத்தின் கீ-போர்டு, பியானோவாக செயல்படத் துவங்கி விடும். இ1 முதல் 48 வரையிலான கீ-களை மாற்றி மாற்றி அமுக்கி வாசித்தால், ட்ரம்ஸ், கிடார், விசில் எனப் பலவித கருவிகளின் இசை கிடைக்கிறது. அட அட, வாசிக்க ஆரம்பித்தால் நம் மனதினுள் சில பல ராஜாக்கள், ரஹ்மான்கள் துள்ளிக் குதித்து வெளியே கிளம்புகிறார்கள். நான் வாசிச்ச ஒரு 'நோட்'டைக் கேட்டு எனக்கே கண்ணீர் வந்துடுச்சுன்னா பார்த்துக்கோங்களேன்!

வலைப்பதிவு: திங்கள் முதல் வெள்ளிவரை, நான் தொடங்கி முன்னிரவு வரை அலுவலக அர்ப்பணிப்பு. காபி டம்ளரைக் கழுவாததில் இருந்து, அம்மாவை 'செக்கப்'புக்கு கூட்டிப் போகாதது வரைக்கும் இதுதான் சாக்கு. வேறெதற்கும் நேரமின்றி, வேறெதிலும் நாட்டமுமின்றி உழலும் பொழுதுகள். அன்பை, கவலையை, உரிமையை, பரிவை, வீட்டில் இப்போது நிகழும் சின்ன ஊடாடல்களுக்குள் புகுத்துவது கடினம். சொல்லாதவை தேங்கி கனக்கும் மனம். எல்லாம் இருந்தமைந்த பின்பு வாழ்க்கையை விரும்பியபடி வாழவென்று, அலை ஓய்ந்தபின் கடலிலே குளிக்கும் ஆசை. மறந்துவிட்ட நண்பனின் இரு மண அழைப்புக்கு மன்னிப்பு மடலேனும் எழுதலாமே என்று தோன்றும்போது வருகிறது அவன் மகனின் முதல் பிறந்த நாளுக்கான அழைப்பு. இதுவும் தாடியில் தென்படும் நரைகளுமே ஒன்றுமே சாதிக்காத கால ஓட்டத்தின் அத்தாட்சிகள். (knski.blogspot.com - வலைப் பதிவிலிருந்து)

- வலைஞன்



கமிஷனர் காரசாரம்



என்கவுன்டர் - தமிழக மக்களுக்கு, குறிப்பாக சென்னை மக்களுக்கு மிகவும் பழக்கப்பட்டுவிட்ட வார்த்தை. அயோத்திகுப்பம் வீரமணி, வெங்கடேச பண்ணையார், பெரவள்ளூர் ரமேஷ் என்று பலர் என்கவுன்டரின்போது பலியாகி உள்ளனர். இந்தப் பட்டியலில் நியூ அட்மிஷன் அரும்பாக்கம் மணிகண்டன்.

"துப்பாக்கி ஒண்ணும் அழகு பார்க்க இல்லை!"

யார் இந்த மணிகண்டன்...? சென்னை அரும்பாக்கத்தைச் சேர்ந்த பிரபல ரவுடி. இவனது தொழில்(!) மாமூல் வசூல், ஆள் கடத்தல், ரவுடித்தனம். குறிப்பாக விருகம்பாக்கம், அரும்பாக்கம், சூளைமேடு, திருமங்கலம், அண்ணாநகர், கோயம்பேடு, மதுரவாயல் ஆகியன இவன் கண்ணும் கருத்துமாக 'ஃபீல்டு ஒர்க்' செய்யும் ஏரியாக்கள். இவனது ஸ்கோர் கார்டு மூன்று கொலை, மூன்று கொலை முயற்சி, இருபத்திரண்டு வழக்குகள், நான்குமுறை குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் சிறை சென்றது என்று இருக்கிறது. பதினொரு பிடிவாரண்டுகள்! தொடர்ந்து படு அமர்க்களமாக நடந்து வந்த இவனது ராஜாங்கத்துக்குக் கடிவாளம் போட நினைத்தது காவல்துறை. சமீபத்தில் காவல் துறையினருடன் ஏற்பட்ட மோதலில், காவலர் தற்காப்புக்காகச் சுட்டதில் பலியானான் மணிகண்டன். பலியான 29 வயது மணிகண்டனுக்கு, மனைவி, நான்கு பெண் குழந்தைகள்.



• பலியான மணிகண்டன்
நன்றி : நக்கீரன்

என்கவுன்டர் பட்டியல் தொடர்ந்து நீளுகிறதே... இதற்கு என்ன காரணம்... ரவுடியிசத்துக்கு என்கவுன்டர்தான் தீர்வா... என்பது போன்ற பல கேள்விகளுடன் சென்னை மாநகர ஆணையர் ஆர். நடராஜை சந்தித்தோம்:

தலைவலிக்கு அனாசின் மாதிரி கேஸை முடிக்கறதுக்கு என்கவுன்டர்... அப்படித்தானே...?

நாங்க என்னவோ எடுத்த எடுப்புலயே என்கவுன்டர்ல இறங்குற மாதிரிச் சொல்றீங்க... ஆனா ஒருத்தன் தப்பு செய்தான்னா, தப்புக்கு ஏத்த மாதிரி நியூசன்ஸ், சீட்டிங் கேஸ்களைப் போட்டு, தண்டனை வாங்கித் தர்றோம். அதன் பிறகும் திருந்தாம, தொடர்ந்து அத்துமீறிட்டு, தலைமறைவா இருக்கறவங்களைத்தான் என்கவுன்டர் மூலமா பிடிக்க முடிவு பண்ணுவோம். அப்போ எங்களுக்குள்ளே நடக்குற மோதல்ல அவன் இறந்துட்டான்னா, உடனே 'ரவுடி சுட்டுக் கொலை'ன்னு நியூஸ் போட்டுடறாங்க... அது தப்பு.

என்கவுன்டருக்கென ஏதும் வரைமுறைகள் இருக்குதா...?

நிச்சயமா... நிலை ஆணைகள்ன்ற பேர்ல நிறைய ரூல்ஸ் இருக்கு. உதாரணமா, குற்றவாளியைச் சாகடிக்கக் கூடாது... முடிஞ்சவரைக்கும் உயிரோட பிடிக்கணும். அவனுக்குக் காயம் ஏற்பட்டா, உடனே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லணும். காவலருக்கோ அல்லது அவருடன் வந்தவருக்கோ குற்றவாளியால் ஆபத்து ஏற்பட்டாலொழிய துப்பாக்கியைப் பயன்படுத்தக் கூடாது... இப்படி நிறைய விதிகள் இருக்கு. குற்றவாளி வெடிகுண்டு, அரிவாள் மாதிரி பயங்கர ஆயுதங்களால எங்களைத் தாக்கும்போது, எங்களைப் பாதுகாக்க துப்பாக்கியைப் பயன்படுத்தித்தான் ஆகணும்... அழகு பார்க்க ஒண்ணும் துப்பாக்கி இல்லியே...!

பயங்கர ஆயுதங்களோட குற்றவாளி இருக்கறப்போ அவனைப் பிடிக்க மூணு பேர் போதுமா? நிறையப் பேர் வேணும்... அப்படியில்லாம் குறைச்சலான காவல் துறையினரே போறதுக்குக் காரணம், அவனைப் பிடிக்கறதைவிட சுடறதுதான் நோக்கம்னு சொல்றாங்களே...?

நீங்க சொல்ற மாதிரி பத்து இருபது பேர் ஒருத்தருக்காகப் போக முடியாது. உடனே மக்கள் பீதியாயிடுவாங்க. விஷயம் காட்டுத்தீயா பரவி குற்றவாளி காதுக்குப் போயிடும். அப்புறம் ஆபரேஷன் தோத்துப் போயிடும். அதனால்தான் மூணு நாலுபேர். அதுவும் மஃப்டியில அனுப்பறோம். இதுதான் கரெக்ட் ரூட். மத்தபடி வேறெந்த நோக்கமும் காவல்துறைக்கு இல்ல.

நிறைய வழக்குகள் பதிவாகி, அவனைப் பிடிக்கவே முடியாதுங்கற நேரத்துல, ஃபைலை ஒரேயடியா மூடறதுக்கு போலீஸ் பயன்படுத்தற டெக்னிக்தான் இந்த என்கவுன்டர் அப்படிங்கற குற்றச் சாட்டு பற்றி...?

இல்லவே இல்ல... குற்றவாளி போலீஸோட உயிருக்கே ஆபத்தை உண்டு



''நீங்க கேட்கிற டிசைன் புடைவை அடுத்த வாரம் தான் கடைக்கு வரும்மா!''

''ஒண்ணும் அவசரமில்ல... இருந்து வாங்கிட்டே போறேன்!''

- லீலாஜி

''நம்ம மன்னருக்கு தோல்வி பயம் வந்துடுச்சுன்னு எதை வெச்சி சொல்றீங்க...?''

''புதுசு, புதுசா சலுகைகள் அறிவிக்கிறாரே...!''

- புன்னகை மன்னன்



பண்றப்போ, வேற வழியே இல்லாம, துப்பாக்கியால சுட வேண்டிய இக்கட்டான நிலைமைக்கு நாங்க தள்ளப்படுறோம்ங்கறதுதான் உண்மை. அப்படியே அவன் என்கவுண்டர்ல இறந்துட்டா உடனே கேஸும் முடிஞ்சுடுமா என்ன...? வழக்குகள் முறையா நடக்கும். அந்தக் கேஸோட இணைந்த, உயிரோடு இருக்குற குற்றவாளிகளுக்கு தண்டனையும், பாதிக்கப்பட்டவங்களுக்கு நியாயமும் கிடைக்கும்.

ரவுடியிஸத்துக்கு என்கவுண்டர் மட்டும்தான் தீர்வா?

நிச்சயமா அதுல எங்களுக்கு உடன்பாடே இல்ல. ஆனா ரத்தத்துலயே கிரிமினல் குணம் ஊறிப் போனவங்களைத் திருத்தறதுங்கறது ரொம்ப சிரமம்... என்கவுண்டர் என்பது சுட்டுக் கொல்வதற்காக இல்லை. நேருக்கு நேர் சந்திக்கும்போது அவன் சரணடையலாம்; மாறாக போலீஸைத் தாக்க ஆரம்பித்தால் நாங்க என்ன செய்ய முடியும்.

இறந்துபோன மணிகண்டனுக்கு நான்கு பெண் குழந்தைகள். இதையெல்லாம் என்கவுண்டரின்போது சிந்திக்கக்கூட மாட்டீர்களா..?

(நீண்ட யோசனைக்குப் பிறகு) இதுல ரெண்டு விஷயம் இருக்கு... குற்றவாளி செய்த குற்றங்களைத்தான் நாங்க முக்கியமா கவனிக்கணுமே தவிர அவங்க குடும்பப் பின்னணி பத்தி சிந்திக்க முடியாது. அப்படியே அவன் குடும்பம் பாதிக்கப்பட்டா, அந்தக் குடும்பத்துக்கு என்ன செய்யணுமோ அதை அரசு செய்யும். இன்னொரு முக்கியமான விஷயம் என்னன்னா, குற்றவாளியோட குடும்பத்தைப் பத்தி யோசிக்கற நம்ம சொஸைட்டி, அவனால பாதிப்புக்குள்ளான குடும்பங்களைப் பத்தி சிந்திக்கறது கூட இல்ல... எல்லாரும் மனுஷங்க தானே? குற்றவாளி பற்றிய நியூஸை ஆராயற அளவுக்கு அவனால பாதிக்கப்பட்ட போலீஸ் அல்லது பொது மக்கள் பத்தி பேசறது கூடக் கிடையாது... இந்த நிலை மாறணும்.

முறையாக வழக்கு நடந்து, பின்னர் வரும் தீர்ப்பான மரண தண்டனையையே சட்டத்திலிருந்து நீக்க வேண்டும். 14 வருட ஆயுள் தண்டனையைக் கூட பத்து வருடமாகக் குறைக்க வேண்டும் என்ற கருத்துகள் எழும் சூழ்நிலையில், குற்றவாளிக்கு நொடிப் பொழுதில் தண்டனை அளிப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதுதானா?

நீங்க சொல்ற ரெண்டு விஷயமும் சட்டப் பிரச்னை. சட்டமன்றங்கள் தீர்மானிக்கணும். ஒண்ணே ஒண்ணு சொல்றேன். வன்முறையைக் கைவிடாமல் கடைசி வரை பிடிவாதமாயிருக்கிறவனுக்கு முடிவு வன்முறையில தான் கிடைக்கும். தண்டனையை அவனே தருவிச்சுக்கறான். சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் விதமா யார் செயல்பட்டாலும், அவங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கித்தான் ஆகணும். அதுக்கு என்கவுண்டரும் ஒரு வழி. ஆனா முடிஞ்ச வரைக்கும் அதை நல்லபடியா, குற்றவாளி பலியாகாத மாதிரி பண்ணணும். அவ்வளவுதான்.

- இரா. முத்துக்குமார்

படம்: ராஜன்

அப்பாக்களை வில்லன்களாகச் சித்திரித்துக் களைத்துப் போன தமிழ் சினிமாவில் இருந்து கொண்டு சொல்கிறேன், ஒரு போதும் அப்பாவை நினைத்து பயந்ததேயில்லை நான். அவர் எங்களை அடித்ததும் இல்லை. ஆண்டனா உதவியோடு எங்கள் வீட்டின் டீ.வியில் தெரிந்த ஒரு சில சானல்களில், தமிழ் தூர்தர்ஷன் மட்டும் எனக்குத் தோழன். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை மாலையும், தவறாமல் ஒளிப்பரப்பாகும் கார்ட்டூன்கள் மீது எனக்குக் காதல்.



ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் அப்பா நடித்து வெளிவர இருந்த 'சாட்டையில்லாத பம்பரம்' படத்தின் பிரீவியூ காட்சி. "இன்னிக்கு அப்பாவோட படம் இருக்கு. அம்மாவோட மறுக்காம வந்துடணும்" என்று காலையில் கண்டிப்புடன் சொல்லிவிட்டுப் போனார். ஆனால் கார்ட்டூன்களின் மாயாஜால வசிகரம், பிரீவியூ காட்சிக்குப் போக விடாமல் பிடிவாதமாய் மறுக்க வைத்து விட்டது. இரவு வீடு திரும்பிய அப்பாவின் முகத்தைப் பார்க்க முடியாமல் அஞ்சி ஒளிந்த என்னை அவர் விடவில்லை. போதும் போதும் என்கிற அளவுக்கு வாரி வழங்கி விட்டார். அன்றிரவு விளக்குகள் அணைக்கப்பட்டதும், விம்மியபடி படுத்திருந்த, என் காதருகே ஒரு மெல்லிய குரல். "அப்பாவை மன்னிச்சுடுப்பா! கோபத்துலே அடிச்சிட்டேன்." அந்த வார்த்தைகளில் கிடைத்த பாச ஒத்தடம், அவர் மீதிருந்த துளி பயத்தையும் அந்த நிமிஷமே துடைத்துவிட்டது.



இப்போது இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, "வீட்டு போன் நம்பரைக் கொடுங்க உங்க அப்பாகிட்டே பேசணும்" என்று போலீஸ் ரைட்டர் கேட்டபோது நடுங்கிப்போனேன். "சார்... சார்... நான் சிவகுமார் சன்னுங்கிறதை ஒத்துக்கிறேன்... வீட்டுக்கு மட்டும் தெரியவேணாம் சார்..." என்று கெஞ்சினேன். அவரோ, "தம்பி, நீங்க சிவகுமார் பையனாங்கிறதே எனக்கு டவுட்டா இருக்கு. அதைத் தெரிஞ்சுக்கலாம்ன்னுதான் கேட்டேன்" என்று சொன்னதுதான் தாமதம், "டேய் மச்சி ஒழுங்கா சாப்பிடு! பீர் அடின்னு சொன்னோமே கேட்டியா? இப்போ பார், ஒட்டு மொத்தமா முப்பத்தெட்டு கிலோ உடம்பை வெச்சுக் கிட்டு, ஏட்டைய்யா மூளைக்கே வேலை கொடுத்துட்டே" என்று போலீஸ் ஸ்டேஷனே குலுங்குகிற மாதிரி மொத்த நண்பர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

அவர்கள் சிரிப்பில் அர்த்தம் இல்லாமல் இல்லை. பத்துப் பதினைந்து பேர் கூட்டமாக நிற்கிற இடத்தில் நான் நின்றால், கையைக் காட்டி இவர்தான் நடிகர் சிவகுமார் பையன் என்று என்னைப் பார்த்துச் சொல்லி விட முடியாது. அப்படியொரு ஒடுங்கிய தோற்றம். ஒருவழியாக ரைட்டர் சமாதானமாகி எஃப்.ஐ.ஆர்



எஸ்.சரவணன் B.Com.,

போட்டு முடித்ததும், உள்ளே நுழைந்தார் ஒரு ஐ.பி.எஸ் அதிகாரி. "மறக்காமல் கோர்ட்டுல ஆஜராகி ஃபைனைக் கட்டிடுங்கப்பா" என்று கெஞ்சிக் கேட்டு, எங்களை சொந்த ஜாமீனில் அனுப்பினார். பிறகு அங் கேயிங்கேயென்று ஆயிரம் ரூபாய் பணத்தைப் புரட்டி அபராதம் கட்டினோம்.

போலீஸ் ஸ்டேஷன், நீதிமன்றம் வரை போய்வரும் துணிச்சலைக் கொடுத்த கல்லூரி நட்பு, எவ்வித நிபந்தனைகளும் இல்லாத அற்புதம். உடைந்து போன நட்பு, ஒட்டாத நட்பு என்று இங்கே எதுவுமே இல்லை.

கல்லூரியில் கார் பார்க் தான் எங்களுக்கு முக்கியமான ஸ்பாட். எல்லாத் துறை மாணவர்களும் சந்தித்துக் கொள்கிற ஒரே இடம். கிண்டல், கேலி யூனியன் தேர்தல் மட்டுமல்ல, ஐஸ்வர்யா ராயில் ஆரம்பித்து இஸ்ரேல் - பாலஸ்தீன பிரச்னைகள் வரை, எல்லாவற்றையும் அசத்தலாக அலசுவார்கள். எனது துறையில் பெரும்பாலான மாணவர்கள் வி.ஐ.பி.வீட்டுப் பிள்ளைகள் என்பதால், எல்லோரிடமும் காஸ்ட்லி கார்கள் இருக்கும். கல்லூரி கேண்டீனில் போண்டா, பஜ்ஜி சாப்பிடுவதற்கே வரிசையாக காரில் போய் இறங்கி அலம்பல் விடுவார்கள். நான் எப்போதாவது அப்பாவின் காரை எடுத்துச் செல்வேன். அது பழைய பிளைமௌத் மாடல். காரின்

பானட் முனையில் 'வேல்' ஒன்றை அப்பா செட் பண்ணி வைத்திருந்தார். காரின் உள்ளே முருகர் சிலை, மயில் படம் எல்லாம் இருக்கும். அந்தக் காரின் டயர், வீல், பெயிண்ட் எல்லாவற்றையும் கொஞ்சம் மாடர்னாக மாற்றினேன். ஆனால் அந்த வேலை மட்டும் எடுக்கக் கூடாது என்று அப்பா கண்டிப்பாகச் சொல்லி விட்டார். சரி இருக்கட்டும் என்று விட்டு விட்டேன். கல்லூரிக்கு என் கார் நுழைந்தாலே "டேய் கோவில் வருதுடா! வேல்! வேல்! வெற்றி வேல்!" என்று கிண்டலடிப்பார்கள். ஒரு முறை கல்லூரிக்கு எதிரேயிருந்த ஸ்டெர்லிங் சாலையில் காரை நிறுத்திவிட்டு, மர நிழலில் நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தேன். அந்த வழியே சைக்கிளில் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த மாணவர்கள் இறங்கிவந்து, வேலைப் பார்த்து கும்பிட்டு "முருகா! எக்ஸாம்லே படிச்ச கொஸ்டின்ஸ் நிறைய வரணும்" என்று மனமுருகப் பிரார்த்தனை பண்ணி விட்டுப் போனார்கள். மற்றொரு முறை லயோலா தியேட்டர் சொசைட்டி சார்பில் போடப்பட்ட நாடகத்துக்கான டிக்கெட்டுகளைக் கொடுக்க, பத்து கார்களில் செம பந்தாவாக பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரிக்குப் போயிருந்தோம். அந்த

> **ஒரு நடிகரின் மகன், நடிகனாத்தான் ஆகணும்னு என்ன அவசியம் இருக்கு!**

வாகன அணிவகுப்பில் முதல் கார் என்னுடைய கோவில்தான். டிக்கெட்டுகளை மாணவிகளுக்கு விநியோகித்துவிட்டு வந்து காரை எடுத்தபோது, எதிர்பாராமல் எனது கார் மட்டும் ஸ்டார்ட் ஆகவில்லை. "நாங்கள் வேணா தள்ளி விடட்டுமா?" என்று கேட்டு மாணவிகள் சிரித்ததும், அலைஅலையாய்ப் புறப்பட்டு வந்து என் காரை ஆச்சர்யமாய்ப் பார்த்து விட்டுப் போனதும் சக நண்பர்களுக்கு கௌரவப் பிரச்னையாக மாறி... "இனிமே இந்தக் காரோடு உன்னைப்



பார்த்தோம்... மகனே கைமாதான்" என்று மிரட்டியதில் நண்பர்களின் காரிலேயே வலம்வர ஆரம்பித்தேன்.

எனக்கு கார் ஓட்டத் தெரியும் என்பதால், கிட்டத்தட்ட என்னைச் சம்பளமில்லாத டிரைவர் போலவே பயன்படுத்திக் கொண்டார்கள். குழாமில் பல நண்பர்கள் நெப்போலியன்கள், பீட்டர் ஸ்காட்கள். வெளிப்படையாகச் சொல்வதென்றால் மதுப்பிரியர்கள். "குடிக்காத ஒருவன் வண்டியோட்ட வேண்டும்டா!" என்று என்னை அடையாளம் கண்டு தரப்பட்ட பணி. சரி! போனால் போகிறதென்று அவர்களோடு போய் முந்திரிப் பருப்பு, சிப்ஸ், கூல்டிரிங்ஸ் மட்டும் சாப்பிடுவேன். போதை ஏறி 'மட்டை' யானவர்களை குண்டுகட்டாகத் தூக்கி காரில் போட்டுக் கொண்டு போய், ஒவ்வொரு வீடாக டெலிவரி பண்ணுவோம்... நினைத்தால் திடீரென்று பெங்களூருக்கோ, ஹோசூருக்கோ ஒரு டிரைவ் போய் இரவே வீடு திரும்பிவிடுவோம்... "டேய்! இப்படியெல்லாம் ஊர் சுத்துறதும் தண்ணியடிக்கிறதும் தப்புடா" என்றால், "மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி வந்துட்டார்டா. காலேஜ் லைஃப்ல தாண்டா ஃப்ரெண்ட்ஷிப்பைக் கொண்டாட முடியும்" என்று வாயடைத்து விடுவார்கள். இப்படி வருடம் முழுவதும் சுற்றி விட்டு, உஷாராக அவ்வப்போது படித்து



தெரியும். படிப்பு முடிஞ்சதும் நான் போர்டு ஆஃப் டைரக்டர்ஸ்லே சேர்ந்துடுவேன்'' என்பார்கள். என்னைப் பார்த்து "டேய் சரவணா, நீ ஹீரோவாத் தானே ஆகப் போறே?" என்றார்கள். நான் சுரத்தே இல்லாமல் ''சினிமா பற்றியோ, நடிப்பு பற்றியோ, எனக்கு எதுவுமே தெரியாது'' என்றேன். அத்தனை பேரும் ஆச்சர்யமாய்ப் பார்த்து "என்னடா சொல்ற? அப்புறம் என்னவாதான் ஆகப் போறே?'' என்றார்கள். "நீங்களெல்லாம் இரண்டாவது, மூணாவது தலைமுறையாகத் தொழிலதிபர் ஆகணும்ன்னு நினைக்கிறீங்க. தப்பில்லை. ஆனா ஒரு நடிகரோட பையன் நடிகனாத்தான் ஆகணும்ன்னு என்ன அவசியம் இருக்கு? பிளஸ் டூ படிக்கிறப்போவே ஒரு தொழில் அதிபர் ஆகிறதுன்னு முடிவு பண்ணிட்டேன்'' என்றேன். எனது தொழிலதிபர் கனவைச் சொல்லிவிட்டேனே தவிர, அதற்கான முதலீடும், அனுபவமும் நம்மிடம் இருக்கிறதா? நாம் அவர்களைப் போல் இல்லை... நிறைய உழைத்தாக வேண்டும்... என்று புரிந்தது. திருப்பூரில் எனது தாய்மாமா, பின்னலாடைத் தொழில் செய்து வந்தார்.. "மாமா, உங்ககிட்ட நான் தொழில் கத்துக்கணும், வரட்டுமா?'' என்றபோது... 'இனிமே ரெடி மேட் கார்மெண்ட்டுக்குத்தான் எதிர்காலம்.... சென்னையிலேயே நிறைய கார்மெண்ட்ஸ் இருக்கு! நீ அங்கேயே கத்துக்கோ' என்று வழி காட்டினார்...

சென்னையில் ஒவ்வொரு கார்மெண்ட் நிறுவனமாக ஏறி இறங்கி, வேலை தேட ஆரம்பித்தேன். எங்கேயும் அப்பா பெயரைப் பயன்படுத்தவில்லை. வேலை கிடைக்கும் முன்பு... ஒரு வெட்டி வேலை. மார்க்கெட்டுக்குப் போய் விட்டுத் திரும்பிய பக்கத்து விட்டு அக்காவை தவறான எண்ணத்தோடு பின் தொடர்ந்து வந்த ஒரு ஆளை, நடு ரோட்டில் போட்டுப் புரட்டி எடுத்தேன். சினிமா ஷூட்டிங் மாதிரி கூட்டம் கூடிவிட்டது...

ஒரு பேப்பர் பாக்கி இல்லாமல் பாஸ் பண்ணி விடுவார்கள். மார்க் வாங்குவதிலும் கில்லாடிகள்!

நண்பர்களோடு ஜாலியாக வலம் வந்ததில் இரண்டு வருடங்கள் ஓடியே விட்டன! ஊர் சுற்றி விட்டு படிப்பிலும் கெட்டிக்காரத்தனமாக இருக்கும் அவர்களின் டெக்னிக், எனக்கு லேட்டாகத்தான் புரிந்தது. முதல் வருடம் 'எக்கனாமிக் அனாலிசிஸ்' என்ற பேப்பரில் அலட்சியமாக கோட்டை விட்டு, கடைசி செமஸ்டரில்தான் எழுதி பாஸ் பண்ணினேன். "பிரின்ஸ்பாலுக்கு உன் முன்னாலேதான் வாக்குக் கொடுத்திருக்கேன்... ஞாபகம் இருக்கில்ல?'' என்று அப்பா அடிக்கடி மிரட்ட ஆரம்பித்ததில், ஒரு வழியாக டிகிரியை முடித்தேன். எஸ்.சரவணன் பி.காம்.

இரண்டாவது வருடம் முடியும் போதே யார் என்ன பிஸினெஸ் பண்ணப் போகிறார்கள் என்பதைத் தெளிவாக முடிவு செய்து விட்டார்கள். பாதிக்கும் மேல் தொழிலதிபர் வீட்டுப் பிள்ளைகள் என்பதால் படித்துக் கொண்டிருக்கும் போதே, சப்ளை & டிமாண்ட், பேலன்ஸ் ஷீட் பற்றி புட்டுப்புட்டு வைப்பார்கள். "இந்த வருடம் அப்பா எவ்ளோ போனஸ் அனவுன்ஸ் பண்ணுவார்னு எனக்குத்

(டைரியைத் தொடர்வேன்)

படங்கள்: ஸ்ரீஹரி



“வருங்காலத்தில் எந்தத் தொழில் முழுவீச்சில் சக்கைப் போடு போடப் போகிறது தெரியுமா? சாஃப்ட்வேர்? ரியல் எஸ்டேட்? எலக்ட்ரானிக்ஸ்? எதுவுமில்லை. மசாலாப் பொருள்களின் மார்க்கெட்தான் நாளை உலகை ஆளப் போகிறது. மில்லியனில்கூட அல்ல. சர்வ சாதாரணமாக பில்லியனில்தான் இதன் வர்த்தகம் நடக்கும். அந்தளவுக்கு ரெடி டு ஈட், ரெடி

“என்னுடையது எம்.ஜி.ஆர் ஃபார்முலா!”

டு குக் வகையிலான உணவுப் பொருள்களுக்கு டிமாண்ட் இருக்கிறது'' என்று வியப்பூட்டுகிறார் ஆச்சி மசாலா நிறுவனரான பத்மசிங் ஐசக்.

98ம் வருடம் மசாலாப் பொருள்களின் மார்க்கெட்டுக்குள் நுழைந்த ஆச்சி மசாலா, இன்றைக்கு தென்னிந்தியாவில் முழுவீச்சுடன் செயல்பட்டு வருவதோடு, சிங்கப்பூர், மலேசியா, ஸ்ரீலங்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலுள்ள மசாலா ப்ரியர்களுக்கும் தன் சேவையை நீட்டித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பத்மசிங் ஐசக், விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். பின்பு எப்படி இந்தத் தொழிலுக்கு...? திருவேற்காடு அருகிலுள்ள கீழ் அய்யம்பாக்கத்திலுள்ள தமது மசாலா ஃபேக்டரியை நமக்குச் சுற்றிக் காட்டியபடி, கதை சொல்ல ஆரம்பித்தார்.

''திருச்செந்தூர்ல பி.பி.ஏ டிகிரி முடிச்சேன். சென்னைக்கு வந்து மார்க்கெட்டிங் மேனேஜ்மெண்ட் படிச்சுட்டு, உடனடியாக கோத்ரெஜ் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்துவிட்டேன். அங்கு மார்க்கெட்டிங் பிரிவில் சேல்ஸ் சூப்பர்வைசராக பத்து வருடங்கள் சுற்றியதில் பழுத்த அனுபவம் கிடைத்தது. ஒரு பொருளை வாங்கும்போது அதன் த்ரம், விலை, அளவு, பேக்கிங், மார்க்கெட்டில் தாராளமாகக் கிடைப்பது போன்ற அம்சங்களைப் பார்த்து, மக்கள் அதன் வசம் ஈர்க்கப்படுகிறார்கள் என்று புரிந்தது.

''89'ம் வருடம் அங்கு நான் பதினைந்தாயிரம் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தபோது திடீரென அந்த வேலையை ராஜினாமா செய்தேன். சொந்தத் தொழில் செய்ய வேண்டும் என்ற உந்துதலில் தன்னம்பிக்கையுடன் இறங்கிவிட்டேன்.

'சொட்டு நீலம் டோய்! ரீகல் சொட்டு நீலம் டோய்!' என்று அன்றைய கால கட்டத்தில் விளம்பரம் செய்துவந்த ரீகல் சொட்டு நீலத்துக்குப் போட்டியில்லாத





■ மனைவியுடன் பத்மசிங் ஐசக்

காலம். அந்த மலையோடு மோத நான் களத்தில் இறங்கி 'ட்விங்கிள் சொட்டு நீலம்' ஆரம்பித்தேன். இதன் வியாபாரம் நன்றாக இருந்த போதும், என்னால் முழு வீச்சில் மார்க்கெட்டிங் செய்ய முடிய வில்லை. தொடர்ந்து நான்கு வருட போராட்டங்களில் கடன் அதிகமாகவே, அதன் தயாரிப்பை நிறுத்தி விட்டோம்.

அடுத்து என்ன செய்வது என்கிற யோசனையில் இருந்த போதுதான், என் மனைவி தெல்மா ஐசக்கின் கைப் பக்குவம் ஞாபகத்துக்கு வந்தது.. விதவிதமான உணவு வகையை மணக்க மணக்கச் செய்பவர். அவருடன் கலந்தாலோசித்து, மசாலாப் பொருள் களைத் தயாரிக்கும் பிஸினஸில் நுழையத் தயாரானேன்.

மரியாதைக்குரிய சொல்லான 'ஆச்சி' என்கிற பெயரில் 98ம் வருடம் சென்னையில் மிகக் குறைந்த முதலீட்டில் இத்தொழிலை ஆரம்பித்தேன். மங்களகரமாக இருக்கட்டுமே என்று முதலில் மஞ்சள் தூள் தயாரித்து பாக்கெட்டுகளில் அடைத்து விற்றோம்.

எப்பொழுதும் செட்டிநாடு ஏரியாக் களில் மிகவும் ஸ்பைசி யாக சமையல் செய்வார் கள். இதற்கு மிகவும் செலவாகும் என்பதால், ஏழைபாழைகள் இதன் அருமையை உணராமல் இருந்தார்கள். இதில் உண்டான பாதிப்பில் தான் ஆச்சி குழம்பு மிளகாய்த் தூளைத் தயாரிக்க ஆரம்பித் தோம். தனியா, மிளகாய், கறிவேப்பிலை, சீரகம், சுக்கு, வெந்தயம்... என பதினான்கு ஐயிட்டங் களை அதில் சேர்த்தோம்.

மசாலாப் பொருள்கள் தயாரிக்கும் துறையில் எனக்கு எவ்வித முன் அனுபவமும் கிடையாது. பரம்பரைத் தொழி லும் கிடையாது. இதனால் ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும்போதும், நஷ்டம் கோடியைத் தொட் டது. ஆரம்பத்தில் தரம் மக்களிடம் எடு படவேயில்லை. பட்டறிவில் மட்டுமே ஒவ்வொரு நுணுக்கங்களையும் கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். வேறு வழி?

எடுத்தவுடன் பெரிய பெரிய பாக் கெட்டுகளில் அடைத்து டிபார்ட்மெண்ட் ஸ்டோர்களில் விற்கவில்லை. மசாலாப் பொருள்களை சிறிய பாக்கெட்டுகளாக ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்க்குத்தான்

சக்சஸ் ஸ்டோரி!

பெட்டிக் கடைகளில் விற்றோம். எம்ஜி.ஆர் எப்பொழுதுமே தமது திறமை, செயல்கள் அனைத்தும் முதலில் அடித் தட்டு மக்களைச் சென்றடைவதில்தான் அக்கறை எடுத்துக் கொள்வார். இந்த ஃபார்முலாவை நானும் பின்பற்ற ஆரம் பித்தேன். அடித்தட்டு மக்களிடம் நம் ப்ராடக்ட் வெற்றி பெற்று விட்டால், மேல்தட்டு மக்களிடம் ஜெயிப்பதில் சிர மங்கள் பெரிதாக இருக்காது.

கடின உழைப்பையும் பொறுமையை யும் மட்டுமே மூலதனமாகப் போடப் பட்ட வியாபாரம், நாளடைவில் சூடு பிடிக்க ஆரம்பித்தது.

குழம்பு மிளகாய்த் தூள் பெரும் வெற்றி பெற்றது. இது எங்களை மகிழ்ச் சியில் ஆழ்த்தியது. மக்களின் அவசரத் தேவைகளான சாம்பார் பவுடர், அடை மிக்ஸ், புளியோதரை, தக்காளி, எலுமிச்சை சாதப் பொடி, ரசம் பவுடர், மல்லித்தூள் போன்றவற்றை வரிசையாக மார்க்கெட்டில் களம் இறக்கினோம்.


விளம்பரங்கள் மூலமாக என்னதான் ஜாலம் காட்டினாலும், தரம் இல்லா விட்டால் மார்க்கெட்டில் எந்தப் பொருளும் நிலைத்து நிற்காது. நாங்கள் எந்தப் ப்ராடக்டை மார்க்கெட்டில் அறிமுகப்படுத்தினாலும், அதற்கு முன்பு முதலில் ஐந்நூறு பேருக்காவது அதை வழங்கி அவர்களது கருத்துகளைக் கேட் டறிவோம். பிறகு ஒரு சில ஏரியாக்களில் மட்டும் டெஸ்ட் லாஞ்ச் செய்வோம். இதில் சாதகமான முடிவுகள் கிடைத்த பிறகே, முழு மனதுடன் சந்தைப் படுத்து வோம். இதேபோல் மசாலாப் பொருள் களுக்குத் தேவையான மிளகாயை குண்டூரிலும், தனியாவை ராஜஸ் தானிலும், மிளகை கொச்சினிலும் பார்த்துப் பார்த்து வாங்குவோம்.

எனக்கு எப்போதும் ஓர் ஆதங்கம் உண்டு. மங்கையர் சக்தி என்பது மகத் தான சக்தி. ஆனால் இந்தியப் பெண்கள் ஒருநாளைக்கு நான்கு, ஐந்து மணி நேரங் களை அடுப்பங்கரையிலேயே செலவழிக் கிறார்கள். அந்தப் பொன்னான நிமிடங் களை தொழிலும் வேலையிலும் ஈடுபடுத் தினால், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயருமே! இதை மனத்தில் வைத்து அடுத்ததாக நாங்கள் ரெடு டு ஈட், ரெடி டு குக் போன்ற உணவுப் பொருள்களில் முழு வீச்சாக இறங்க உள்ளோம். எங்களின் நோக்கமே, இந்திய வீடுகளில் சமையலறை என்பதே இருக்கக் கூடாது என்பதுதான்.

மெல்ல மெல்ல மலையேறி, இப்போது அதன் உச்சியைத் தொட்டு விட்டோம் என்றே சொல்ல வேண்டும். சென்ற வரு டம் 35 கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்த நாங்கள், அடுத்ததாக இவ்வருடம் நூறு கோடிக்கு டார்கெட் வைத்துள் ளோம். இந்திய மசாலாப் பொருள்களுக்கு உலகெல்லாம் டிமாண்ட் உள்ளதால் 'ஆச்சி' உலகின் மூலை முடுக்கெல்லாம் செல்ல இருக்கிறது. அடுத்ததாக ஆச்சி ஆயில், பருப்பு, நெய், ஆட்டா, மைதா என்று புதுவகைகளை அறிமுகப்படுத்த உள்ளோம். சமீபத்தில் மார்க்கெட்டில் விடப்பட்ட எங்களின் ஆச்சி மீன் குழம்பு, பத்து நிமிடங்களில் உடனடி பிரியாணி, இரண்டும் மக்களிடம் ஏகோ பித்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

- ச.ந.கண்ணன்

படங்கள் : ஸ்ரீஹரி



''தேர்தல் சீக்கிரமே வரப் போகுதுன்னு எப்படிச் சொல்றே?''

''அரசாங்கமே ரேஷன் கார்டில் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் வாங்கி வீட்டில் கொடுக்கும் என்ற அறிவிப்பைப் பார்க்கலியா?''

- சிவகாமி சுந்தர்

படிச்சவங்க பாராட்டு!



'வாழ்க நலமுடன்' (கல்கி மருத்துவ மலர் 2005) படித்தேன். மருத்துவ உலகம் பற்றிய அனைத்துச் செய்திகளையும் காப்ஸ்யூலாக, தேன் தடவிக் கொடுத்திருந்தீர்கள். நீரிழிவு நோயாளியான எனக்கு 'முழு வாழ்க்கை வாழலாம்' என்ற கட்டுரை நம்பிக்கையளித்தது. திருமணமாகி பத்தாண்டுகள் ஆகியும் குழந்தைப் பேறு இல்லாத என் மகளுக்கு 'எப்படியும் ஒரு குழந்தை' ஆலோசனைகள் உற்சாகமூட்டின. அட்டை டு அட்டை நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் பயனுள்ள மலர்.

- **எஸ். கண்ணப்பன்,**
சேலம் - 4

'வாழ்க நலமுடன்' படித்தேன்... பிரமித்தேன்.... 'மாற்று மருத்துவம்' பகுதியில் இடம் பெற்றிருந்த ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஹோமியோபதி, இயற்கை மருத்துவம் எல்லாமே தனித்துவத்தோடு விளங்கின.

- **எம். மரகதவல்லி,**
சென்னை - 28



நீங்க வாங்கியாச்சா?

ஒரு வழியாக இந்த வருட கவுன் சிலிங் எல்லாம் முடிந்து, ப்ளஸ் டு முடித்த மாணவர்களையெல்லாம் ஒருவழியாக ஏறக்கட்டி விட்டார்கள்.

இறுதியாகக் கிடைத்த புள்ளிவிவரங் களின்படி தமிழ்நாட்டிலுள்ள 235 இன்ஜினியரிங் கல்லூரிகளில், மொத்தம் 42,536 சீட்டுகள். அதில் இந்த வருடம் நிரப்பப்பட்டவை முப்பதாயிரத்து சொச் சம்தான். கிட்டத்தட்ட பதினோராயிரம் சீட்டுகள் காற்று வாங்கிக் கொண்டிருக் கின்றன.

'ஏன் பறக்கறதுக்கு இப்படி ஆசைப் படறே' என்று குற்றம் சொல்வோம். உண் மையில் பறக்கும் வித்தையைக் கற்றுத் தரும் படிப்பான 'ஏரோனாடிக்ஸ்' ஸுக்குத்தான் துண்டு போட்டு, அடித்துப் பிடித்து ஸீட் வாங்கியிருக்கிறார்கள் மாணவர்கள். (மொத்தம் 278 சீட்கள்.)

அரசுக் கல்லூரிகளிலுள்ள 4,337 சீட்களும் நிரம்பிவிட, பாவம் தனியார் கல்லூரிகள்! இதைவிடக் கொடுமை, 'சிவில், மெக்கானிகல் வாங்கலையோ சிவில், மெக்கானிகல்' என்று கூவிக் கூப்பிடும் அளவுக்கு, இந்தப் படிப்புகளின் நிலைமை மோசமாகி விட்டதாம். அதிலும் சிவிலை பல கல்லூரிகளில் தூக்கி விட்டார் கள். அண்ணா யுனிவர்சிட்டியில் சிவில் இன்ஜினியரிங் கிடைத்தும் பல மாண வர்கள் 'ம்ஹூம்' என்று தலையை ஆட்டி மறுத்துவிட்டனர். அந்தக் காலத்தில் எப் பேர்ப்பட்ட ஜாம்பவான்களை உருவாக்கிய படிப்பு அது!

ஈ.சி, ட்ரிபிள் ஈ, பயோடெக்னாலஜி, லெதர் டெக்னாலஜி, பிரிண்டிங் டெக்னா லஜி என்று கலர் கலரான படிப்புகள் மாண வர்களை வெகுவாக ஈர்த்திருக்கின்றன. அதிலும் பயோடெக்னாலஜி— எக்ஸ்பிரஸ் வேகம்!

இப்படி அங்குமிங்கும் ஆலோசனைகள் கேட்டு, தேடிப் பிடித்து விதவிதமான படிப்புகளைப் படித்தாலும், இறுதியில் வந்து விழுவதென்னவோ - சாஃப்ட்வேர் வேலை யில்தான். யாராவது இதற்கொரு கவுன் சிலிங் வைத்தால் நன்றாகத்தானிருக்கும்.

- பப்பி

படம்: ஸ்ரீஹரி

18 வயது ரஷ்யப் புரட்சி!



நெம்பர் 1. இந்த எண் மரியா ஸர போவாவுக்கு... இல்லை இல்லை... நெம்பர் 1. இந்த எண்ணுக்கு மரியா ஸரபோவை ரொம் பப் பிடிக்கும். நெம்பர்.1 டென்னிஸ் வீராங்கனை. விளையாட்டு வீராங் கனைகளில் நெம்பர் 1 மாடல். 'பீப்பிள்' பத்திரிக்கை தேர்வு செய்த 2005ன் உலகின் 50 அழகான நபர்களில் ஒருத்தி. எல்லாவற்றுக்கும் மேலாக, விளையாட்டு வீராங்கனை களில் உலகின் நெம்பர் 1. பணக்காரி மரியாதான்.

18 வயதே ஆன 'ரஷ்யப் புரட்சி' மரியாவின் கோச், அவரது அப்பா யூரி ஸரபோவா. மரியா



இளமை கல்கி

வின் நான்கு வயதிலேயே டென்னிஸ் ராக்கெட் அவர் விரல்களில் நடனமாட ஆரம்பித்து விட்டது. ஆறு வயதில் ஒரு கண்காட்சிப் போட்டியில் மரியா விளையாடியது, மார்ட்டினா நவரத்னலோவாவுடன்!

நெட் கட்டிய மைதானத்திலேயே முழு நேரமும் விளையாடிக் கொண்டிருப்பதால், மேல்நிலைப் பள்ளிப் படிப்பை மரியா தொடர்ந்தது இன்டெர்நெட் மூலம்தான்! இந்த 6'2 அடி உயர பார்பி டாலின் மனம் கவர்ந்த விஷயம், மோனாலிஸா புன்னகை, ஷெர்லாக் ஹோம்ஸின் எழுத்துகள்!

ஃபேஷன் ஷோ, விளம்பரங்கள், பார்ட்டி, டான்ஸ் என பார்ட்டி இப்போது அமெரிக்காவில் படு பிஸி. உலகின் முன்னணி நறுமணப் பொருள்கள் தயாரிப்பு நிறுவனமான Parlux, மரியாவின் நறுமணத்தில் (!) தற்போது புது ப்ராடக்ட் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.


இந்த டென்னிஸ் 'லவ் ஆல்', தற்போது காதலிக்கத் தொடங்கியிருக்கிறார் என சர்வீஸ்கள் பறக்கின்றன. யாரை? அன்ட்டி ரோடிக். ஆம், உலகின் முதல் நிலை அமெரிக்க டென்னிஸ் வீரரான ரோடிக், மரியாவிடம் நேர் செட்டுகளில் தன் இதயத்தை இழந்து விட்டாராம்.

பாடகர் ஆடம் லெவின் உடன் ஏற்கெனவே கிசுகிசுக்கப்பட்ட மரியாவிடம் இது பற்றிக் கேட்டால், "நானும், ரோடிக்கும் ஜஸ்ட் ஃப்ரெண்ட்ஸ். ஏற்கெனவே என் காதலர்களா இரண்டு பேரை சொல்லிக்கிட்டு இருந்தாங்க. இப்ப மூணாவது! அப்படின்னா, நான் ஆண்களை காதலிச்சு ஏமாத்துற மோசக்காரி தானே?" என ஜோக்கடிக்கிறார் கூலாக!

– முகில்

அன்பே, ஆன்லைனே ஆருயிரே!

புத்தகத்தைக் கூட டௌன்லோட் செய்துதான் வாசிப்பேன் என்று அடம் பிடிக்கும் இன்றைய கண்ட்ரோல் - ஆல்ட் யுவன்களுக்கும் யுவதிகளுக்கும் ஒரு நற்செய்தி. ஆன்லைன் புத்தக அங்காடி ஒன்றை பிரிட்டனில் புதிதாகத் திறக்கப் போகிறார்கள். பெயர் 'மை புக்



யுவர் புக்' (My Book Your Book).

இதில் உறுப்பின ராகச் சேர்ந்து விட்டால் எடை போட்டு கிழங்கு வாங்கியது போக, மிச்சம் மீதி தேங்கியிருக்கும் புத்தகங்களை விருப்பப்பட்டவர்களுக்கு படிக்கக் கொடுக்கலாம். உங்களுக்குத் தேவைப்படும் புத்தகங்களை இரவல் வாங்கிக் கொள்ளலாம். பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை, பழைய மிஷா, பாம்பு பஞ்சாங்கம், இன்ட்ரொடக்ஷன் டு நியூக்ளியர் பிஸிக்ஸ் என்று நீங்கள் வாசிக்க விரும்பும் புத்தகம் எதுவாக இருந்தாலும், இந்த வலைத் தளத்தில் தேடினால் அந்தப் புத்தகத்தை வைத்திருப்பவரின் பெயர், விலாசம் கிடைக்கும். (அதாவது, அவரும் இந்த இணையதளத்தில் உறுப்பினராக இருக்கும் பட்சத்தில்). ஒரு பெரிய கவரை வாங்கி நீங்கள் பெற விரும்பும் புத்தகம், உங்கள் முகவரி எல்லாம் எழுதி உரியவருக்கு அனுப்பிவிட்டால், சில தினங்களில் புத்தகம் உங்கள் கையில். படித்து முடித்து விட்டு, கிழங்கு வாங்காமல் திருப்பி அனுப்பிவிடவேண்டும்.




இணைய கல்கி

பிடித்த வரிகளுக்குக் கீழே சாலையில் தார் ஊற்றுவதைப் போல கோடு போடுவது. புரியாத / ஒவ்வாத கருத்துகள் கொண்ட பக்கங்களைக் கிழித்துக் கத்திக் கப்பல் செய்வது, 'கனிதா, ஐ லவ் யூ', 'பெருமாள் துணை' 'சீறும் பெண்ணை நம்பாதே' போன்ற முக்கியக் குறிப்புகளை இடைசெருகல்களாகக் கோப்பது போன்றவற்றைத் தவிர்த்து விடுவது உத்தமம். காதலிக்க உத்தேசிப்பவர்கள் இந்த ஆன்லைன் சேவையை கொரியர் சேவையாக, பயன்படுத்தக் கூடாது. 'அன்பே ஜெனிடிக் இன்ஜினியரிங் பற்றி டெக்னிக்கலாகக் கலந்தாலோசிக்க வேண்டும், நாளை மாலை ஸ்பென்சர்ஸில் சந்திக்கலாமா?' என்று லெட்டர் போடுவது... இதெல்லாம் மகா தவறு.

- மருதன்

சின்னான் செய்திகள்



லாலுவின் லவ்வர்!

'குதிர வளர்த்தேன்... குதிர
வளர்த்தேன்...
கொள்ளும் நெல்லும் போட்டு நானும்
குதிர வளர்த்தேன்...
இதயத்தின் உள்ளே உள்ளே நான்
லாயம் கட்டித்தான் உன்னை
வளர்த்தேன்...
இன்று அதில் நீயும் இல்லாத
சோகத்துலதான் தாடி வளர்த்தேன்...
ஏ புள்ள... புள்ள...'

பீகார்ல லாலு இப்படித்தான் பாடிக்கிட்டுத் திரியறாராம். ஏன்? அவரு வளர்த்த குதிர செத்துப் போயிடுச்சாம். அந்தக் குதிர மேல லாலுக்கு ரொம்ப லவ்வாம்! அதான் துக்கம் தாங்காம, தூக்கம் வராம அலையறாராம் லாலு! சொல்ல முடியாது. 'பீகாரோட தேசிய விலங்கா' அந்தக் குதிரய லாலு அறிவிச்சாலும் அறிவிச்சுருவாரு!



எல்லாரும் வாயை 'ஓ' ஷேப்புல வைச்சுக்கோங்க! இப்ப அடிவயித்துல இருந்து 'ஓ'ன்னு சவுண்ட் விடுங்க! ஓகே. தாங்க்ஸ், உங்க உற்சாக 'ஓ' ஒரிசாவில இருக்குற 'மம்தா'க்குக் கேட்டிருக்கும்! அங்க நரசிங்காபுரே-ல 'கண்பாய்த்'ங்கிற உசந்த(!) பிரிவுக்காரங்க, 'பவுரிங்'கிற பிரிவுக்காரங்களை அடக்கி ஆளுறாங்களாம். பவுரிங்க யாரும் சைக்கிள் ஓட்டக்கூடாதுன்னு ஒரு ரூல் போட்டாங்களாம். ஆனா நம்ம மம்தா (18 கி.மீ. தள்ளியிருக்குற) காலேஜுக்கு டெய்லி தைரியமா கண்பாய்த்காரங்க முன்னாலயே சைக்கிள்ல போயி அசத்துறாங்களாம்! இப்ப கண்பாய்த்காரங்க கண் பிதுங்கி நிக்கறாங்களாம்! எவளாச்சும் வாலாட்டுனா ஒரு குரல் வுடு தாயி, வந்து இறங்கிடுறோம் சைக்கிள் செயினோட!

ஐஸ்கிரீமைக் கொடுத்தா எதை வேணா விட்டுக் கொடுத்துருவாய்ங்க ரஷ்யாக்காரங்க! அவ்வளவு பாசம் ஐஸ்கிரீம் மேல! இப்ப லேட்டஸ்டா, மாஸ்கோவுல 'ச்சில்லு'ன்னு ஒரு கின்னஸ் சாதனைய வேற பண்ணிப்புட்டாங்க! 240 மீட்டருக்கு. அதாவது (வெயிட் பண்ணுங்க, கால்குலேட்டரை எடுத்துக்கறேன்) ஆங்... 787 அடிக்கு ஒரு ஐஸ்கிரீமை உருவாக்கியிருக்காங்க. ஆத்தாடி, எம்புட்டுப் பெரிசு இருக்கும்னு கற்பனையே பண்ண முடியலவே! ஏ ரஷ்ய மக்களே, பாலால பண்ணுன அந்த ஐஸ்கிரீம் இன்னும் இருக்கா, இல்ல பாழாப் போச்சான்னு மட்டும் சொல்லுங்க! இந்தியாவின் சார்பா உங்களை வந்து பாராட்ட நான் ஸ்பூனோட வந்துடுறேன். ○

ஒரு நாள் ஒரு கனவு

ஒன்றரை வரிக் கதையை ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு கைப்பிடித்து அழைத்து வந்து, படின்கம் மாதிரி அங்கே கொஞ்சம் இங்கே கொஞ்சம் இழுத்து, இரண்டரை மணி நேரத்திற்கு பொறுமையாக பரிமாறியிருக்கிறார்கள். டைரக்டர் ஃபாசிலாம். என்ன ஆச்சு ஃபாசில் சார்?




மாற்றங்கள் நிறைந்தது தான் வாழ்க்கை என்பது உண்மைதான். அதற்காக, ஒவ்வொரு ரீலிலும் ஏதாவதொரு தலைகீழ் மாற்றத்தைக் கொண்டுவந்தே ஆகவேண்டிய கட்டாயம் தான் என்ன? "நான் சோனியாவைக் காதலிப்பது போல் சும்மா நடிக்கப் போகிறேன்' என்று இரண்டாவது ஃபிரேமில் சொல்லும் ஸ்ரீகாந்த், நான்காவது ஃபிரேமில் சோனியாவை மெய்யாகவே காதலிக்கத் தொடங்குகிறார். எட்டாவது ஃபிரேமில் அவர் அம்மா வேண்டாம் என்றதும் 'அய்யய்யோ நான் சும்மா தான்மா காதலிக்கிறேன்' என்று தலையை ஆட்டி மறுக்கிறார். பன்னிரண்டாவது ஃபிரேமில் சோனியாவை உயிருக்கு உயிராக காதலிக்கிறார். ஐஸ்க்ரீம் அபிஷேகம் எல்லாம் செய்கிறார். இருபத்து ஆறாவது ஃபிரேமில் சோனியாவை மெனக்கெட்டு சந்தித்து 'நான் உன்னைக் காதலிக்கவில்லை, எல்லாம் சும்மா' என்கிறார். இருபத்து எட்டாவது ஃபிரேமில்... சரி இதற்கு மேல் போக வேண்டாம்.

சோனியா அகர்வால் மட்டும் சளைத்தவரா என்ன? கடைசிவரை மாறாமல் ஒரே மாதிரியான முகபாவத்துடன் (துப்பட்டாவை மட்டும் அடிக்கடி மாற்றிக் கொள்கிறார்) ஞானி போல் தோற்றமளிக்கும் சோனியா, டாப்போ டாப்! படத்தின் பெயரில் 'கனவு' வருகிறது என்பதற்காகவோ என்னவோ தெரியவில்லை, தூக்கத்தில் நடந்து போவது போலவே படம் முழுவதும் உலாத்துகிறார்.

காமெடி ட்ராக்கைப் பற்றிச் சொல்லாமல் அப்படியே விட்டுவிடுவது உத்தமம். கிளைமேக்ஸ் நெருங்குவதற்கு பத்து நிமிடங்கள் தான் இருக்கிறது என்கிற நிலையில், கதையை இப்பொழுதாவது சொல்வார்களா, மாட்டார்களா என்கிற பதற்றத்தை ஏற்படுத்தி நுனி சீட்டின் நுனிக்கு நம்மைக் கொண்டு செல்கிறது இப்படம். இது கிளைமேக்ஸிற்குக் கிடைத்த வெற்றி.

இசை இளையராஜா என்று டைட்டிலில் போடுகிறார்கள். அப்படியா?

\- லஜ்ஜாவதி



விநாயகர் சதுர்த்தி பண்டிகைக் காலத்தில்
ஸிந்த்தால் வழங்கும் நல்வாழ்த்துக்கள்




மேனிப் பராமரிப்பு என்றென்றும்

Superbrand

www.cinthol.com

Orchard 8 GCPMSOCN 1053/05 TAM


Nalli®
100
The Kanya Collection
• Chennai • Bangalore • Hyderabad • Mumbai • New Delhi